இளமைப்பருவம்



ரவீந்திரநாத் டாகுர்

(விசுவபாரதியின் விசேஷ அநுமதிபெற்று
வங்காளியிலிருந்து மொழிபெயர்த்தது.)

ராஜன் எலக்ட்ரிக் பிரஸ்
சென்னை. (511944-111).

நான்முகம்

சிறு பிள்ளைகளுக்காக ஏதாவது எழுதித் தர வேண்டுமென்று கோஸாயிஜீ என்னைக் கேட்டுக் கொண்டார். ரவீந்திரனுடைய இளவயது வரலாற்றை எழுதலாமென்று எண்ணினேன். அந்தப் பழைய பேயுலகில் நுழைந்து பார்க்க முற்பட்டேன். இந்தக் காலத்துக்கும் அந்தக் காலத்துக்கும் எவ்வளவு வித்தியாசம் - உள்ளத்தில் ஆகட்டும், புறத்தில் ஆகட்டும்! அந்தக் காலத்து விளக்கு எவ்வளவு வெளிச்சம் தந்ததோ அவ்வளவு புகையும் அதைச் சூழ்ந்து கொண்டிருந்தது.

மனிதனுடைய புத்தியை விஞ்ஞானத்தால் அளந்துபார்க்கும் வழக்கம் இன்னும் வரவில்லை, அப்போது. நடக்கக்கூடியதும், கூடாததும் தனித் தனியே இராமல் ஒன்ருய்ப் பின்னிக் கிடந்த காலம். அந்தக் காலத்து விவரங்களை எடுத்துச் சொல்ல நான் கையாளும் பாஷை ஆற்றெழுக்குப் போல் கட்டுப்படாமல் செல்வது. முடிந்தவரை, பிள்ளைகளின் பாவனைக்கு ஏற்றபடி தொகுத்திருக்கிறேன். இளமையில் தோன்றிய விசித்திரக் கற்பனைகள் யாவும் வயது முதிர முதிர மனதை விட்டுப் பனிபோல் அகன்று மறைகின்றன.

அக்காலத்தை வர்ணிக்க நடையை நான் சிறிதும் மாற்றவில்லை. ஆனல் பாவம்மட்டும் தானகவே இளமையைக் கடந்து போய்விட்டது. இந்த வரலாற்றில் வாலிபப் பருவத்தின் எல்லையை மீற விடவில்லை. ஆனல் கடைசியில்மட்டும் இந்த நினைவுக் கோவை யௌவனத்தின் ஆரம்பதசையை எட்டிப் பார்க்கிறது. இரண்டும் கூடும் இடத்தில் இருந்து கொண்டு பார்த்தால்தான், சிறுவனுடைய மனமும் இயல்பும்விசித்திரமான சூழ்நிலையில் படிப்படியாக மாறிக்கொண்டேவருவது புலனகும்.

இதில் வரும் விஷயங்களையெல்லாம் 'இளமைப் பருவம்' என்று பெயர் வைப்பதற்கு ஒரு காரணம் உண்டு. ஒரு சிறுவனது வளர்ச்சியை அவனது பிராணசக்தியின் வளர்ச்சி யென்றே கொள்ளவேண்டும். வாழ்க்கையின் ஆரம்ப தசையில்; இந்த வளர்ச்சியே பின்பற்றத் தகுதி உடையது. ஒரு பிராணி போஷணைப் பொருளையும் தன் கூடவே கொண்டிருக்கிறது. இதே உண்மையை ஒட்டிச் சிறுவனும் தன்னைச் சுற்றியுள்ள நிலைகளிலிருந்தே வளர்ச்சிக்கு வேண்டியதைக் கிரகித்துக்கொள்கிறான். இப்போது நடைமுறையில் இருக்கும் கல்வித் திட்டத்தின்மூலம் தன்னை மனிதனாக்கும் முயற்சிக்குச் சிறிதளவேதான் அவன் இடங்கொடுக்கிறான்.

இந்தப் புஸ்தகத்தில் அடங்கிய விஷயத்தின் சில பகுதிகள், 'ஜீவன ஸ்ம்ருதி'யில் அகப்படும். ஆனால் அதனுடைய தன்மையே வேறு: பொய்கைக்கும் அருவிக்கும் உள்ள வித்தியாசம்போல். அது கதை; இதுவோ வம்பளப்பு. அது கூடையில் பறித்துவைத்த கனி; இதுவோ மரத்தில் தொங்கும் பழம். பழத்தோடு அதைச் சுற்றிலுமுள்ள இலையும் கிளையும் கூடவே தெரியும். இதனுடைய உருவம் கொஞ்சம் கொஞ்சம் ஸமீபத்தில் நான் எழுதிய கவிதைத் திரட்டில் வெளியாகியது. காவியக் கண்ணாடி மூலமாகத்தான் அதைப் பார்க்கமுடியும். அந்தப் புஸ்தகத்தின் பெயர், 'சடார் சபி' (பாட்டுச் சித்திரம்.) அதில் என் பாஷை சில இடங்களில் குழந்தையின் மழலை போலவும் இருக்கும்; சில இடங்களில் வயது வந்தவனுடைய வார்த்தைபோலவும் இருக்கும். பிள்ளைகளின் விளையாட்டுத்தனத்தைப் போலவே அதில் வேடிக்கையும் குதூகலமும் நிரம்பியிருக்கும். சிறுவர் பேசும் கொச்சை மொழியில் அதே விஷயங்களை இந்தப் புஸ்தகத்தில் காணலாம்.

ரவீந்த்ரநாத் டாகுர்

சிறுவன்

இளவயதில் லேசாக
 இருந்ததுபார் என்உடம்பு;
சிறகிரண்டு தாம்பாக்கி;
 திரிந்தேன்நான் பறவைபோல்.
புறக்களெல்லாம் மாடியிலே
 பறந்துகொண்டே சென்றிடுமே.
வராந்தாவின் கிராதியிலே
 வந்துகாகம் கரைந்திடுமே.
சந்தருகில் ஆளொருவன்
 துணியாலே மீனைமூடிக்
கொண்டுபோவான் கூடையிலே,
 கூவிக்கூவி விற்றவண்ணம்.
அந்திவேளை மாடிமீது
 அண்ணு 'பிடில்' வாசிப்பார்.
விண்ணகத்தில் ஜொலிக்கும்அந்த
 மீன்அனைத்தும் அவ்விசையில்
ஒன்றிநிற்கும் அதிசயத்தை
 அந்தச்சிறு வயதில்கண்டேன்.
இங்க்லீஷ்பாடம் முடிந்தவுடன்
 எழுந்துசெல்வேன் மன்னியிடம்;
முட்டாக்கின் சிவப்புக்கரை
 முகத்தைச்சுற்றி வளைத்திருக்கும்.
தொட்டியொன்றில் அவளுடைய
 சாவிக்கொத்தை ஒளித்துவைப்பேன்.
கோவமூட்டித் தொந்தரவு
 கொடுத்தவண்ணம் நான் இருப்பேன்.
சாயங்காலம் கிசோரிவந்து
 தோன்றிடுவான் அவ்விடத்தில்.
சவுக்கம் ஒன்று தோளின்மேல்
 தொங்க, உக்காக் குழலுடனே
லவகுசர்கள் சிந்தைஅவன்
 லயத்துடனே பாடுகையில்,
பாடத்தினை அப்படியே
 பாதியிலே விட்டொழித்து,
"நாடகத்தில் சேர்ந்துகொண்டு
 நாமும்பெயர் எடுக்கவேணும்"
என்றுமிக ஆவலுடன்
 எண்ணமிட்டும், வகுப்பறையில்

பெஞ்சியிலே நிற்பதற்குப்
    பயந்ததைநான் அடக்கிவிட்டேன்.
போய்வருவேன் பலஊர்க்கு,
    பாட்டுகளைக் கேட்டுவர.
ஆய்விடுமே விடுமுறையும்;
    அப்போது வீட்டிலுள்ள
மேன்மாடி உச்சிதனில்
    மேகங்கள் தவழ்ந்துவரும்.
வான்பிளந்து விடுவதுபோல்
    மழைபொழியும் சோவென்று.
துதிக்கைபோல் நீருமிழும்
    தூம்புபல வற்றினின்றே.
அதிவிரைவாய் ஜலம்பெருகி
    ஓடும்பார் தெருவெங்கும்.
செவியில்விழும் நள்ளிரவில்
    சிள்வண்டின் ரீங்காரம;
வழிதவறிப் பாலையிலே
    வந்துவிட்டான் ராஜபுத்ரன்.
குவென்லூனே, மிஸிஸிபியை,
    கண்டறியா யாங்க்ஸ்கியானே
இவற்றோடே அரைகுறையாய்
    என்பூகோளத்தில்கண்ட
மலைகளையும் ஊர்களையும்
    மற்றுமுள்ள இடங்களையும்,
(வலையொன்றை அழகாக
    வண்ணநூலால் பின்னுதல்போல்)
குழப்பிமிக லேசாய்ஓர்
    குவலயத்தைப் படைத்தங்கே
வழங்குநடை உடைஇவற்றை
    மகிழ்ச்சியுடன் பார்ப்பேனே.
வெள்ளத்திலே பாசியைப்போல்
    வெவ்வேறு யோசனைகள்
உள்ளத்திலே அலைபாயும்;
    உயரத்திலே பறந்திடுமே.

சாந்தி நிகேதனம், }
ஆஷாடமீ 1344. }

—பாட்டுச் சித்திரம்.



இளமைப் பருவம்

1

அந்தக் காலத்துக் கல்கத்தாவில் பிறந்தவன் நான். எலும்பெடுத்த குதிரைகள் சவுக்கடி பட்டுக்கொண்டு, தூள் பறக்கக் கடகட வென்று ஜட்கா வண்டிகளை இழுத்துக் கொண்டு பட்டணத்தில் ஓடின நாள் அது. டிராமோ, பஸ்ஸோ, மோட்டார் வண்டியோ அதுவுமே இல்லை அப்போது. இந்தக் காலத்தைப்போல், காரியத்தில் அவ்வளவு அவசரமும் பரபரப்பும் இருந்ததில்லை ஜனங்களுக்கு. நின்று நிதானமாகச் செல்லும் நாட்கள். பாபுக்கள் வெற்றிலையும் புகையிலையும் நன்றாக மென்றுகொண்டே மெதுவாக ஆபீஸுக்குப் போவார்கள், சிலர் பல்லக்கிலும் சிலர் வாடகை வண்டியிலும். காசு படைத்தவர்கள் வண்டிகளுக்குப் பித்தளைப் பிடிகளும் பாதி அளவு மூடும் தோல் (Top) கவிகையும் இருக்கும். கோச்சின்மேல், தலையில் 'டௌர'ாகப் பாகை

கட்டிக்கொண்டு வண்டிக்காரன் உட்கார்ந் திருப்பான். வண்டியின் பின்புறம் இருவர் அரைக்கச்சில் சாமரத்தைச் செருகிக்கொண்டு 'ஏ ஹை!' என்று, பாதசாரிகள் ஒதுங்குவதற் காக எச்சரிக்கை செய்வார்கள். இருட்டில் மூச்சுத் திணர, மூடின பல்லக்கில் அடைபட் டுத்தான் அந்தக் காலத்துப் பெண்டுகள் வெளியில் போய்வருவது வழக்கம். வண்டி ஏறுவதென்றாலே கூச்சம் அவர்களுக்கு. வெயி லாய் இருந்தாலும் சரி, மழையாய் இருந்தா லும் சரி, தலைக்குக் குடை பிடித்துக்கொள்ளவே மாட்டார்கள். உடம்பில் சொக்காயோ, காலில் ஜோடோ போட்டுக்கொண்டு எவளா வது போகிறதைப் பார்த்தார்களோ, அவளைத் துரைசானியம்மா என்பார்கள். எவளோ வெட்கம், மானங் கெட்டவள் போகிறாள் என்று அதற்கு அர்த்தம். வெளிப் புருஷர் கள் எதிரில் திடுமென்று வந்துவிட்டால் சடக்கென முக்காட்டை மூக்கு நுனிவரை இழுத்து விட்டுக்கொண்டு, நாக்கைக் கடித் துக்கொண்டு திரும்பி நிற்பார்கள். வீட்டிலே அடைபட்டுக் கிடக்கிற மாதிரியே வெளியிலே பல்லக்கிலும் இருந்தார்கள். பெரிய மனிதர் வீட்டுப் பெண்கள், நாட்டுப் பெண்கள் போகிற பல்லக்கின்மேல் இன்னும் ஒரு ஜமுக்

காளத்தைப் போட்டு மூடி முசுக்கிடுவார்கள். பார்ப்பதற்குக் கோரி போவது போல் இருக்கும். இரண்டு பக்கமும் பித்தளைப் பூண் போட்ட தடிகளை ஏந்திக் காவலாளிகள் போவார்கள். வாசலில் உட்கார்ந்துகொண்டு வீட்டைக் காத்துக் கொண்டிருப்பதும், தாடியை உருவிவிட்டுக் கொள்வதும், பாங்கியில் பணத்தைக் கொண்டு கட்டுவதும், வீட்டு உறவினரான பெண்டுகளைக் கொண்டு விடுவதும், பண்டிகை பருவங்களில் வீட்டு எஜமானியை மூடின பல்லக்கோடு கங்கையில் மூழ்க்கி எடுத்து வருவதும் அவர்கள் வேலை. வியாபாரி எவனாவது பெட்டியை எடுத்துக்கொண்டு விற்பனை பண்ண வருவான். அவனுக்குக் கிடைக்கிற லாபத்தில் சிவுநந்தனுக்கும் பங்கு உண்டு. அப்புறம் வாடகை வண்டிக்காரன், தனக்குச் சேரவேண்டிய பாக்கிக்காக வாயிலெதிரே நின்றுகொண்டு பிரமாதமாகச் சண்டை போட்டுக்கொண்டிருப்பான். எங்கள் பயில்வான் ஜமாதார் ஸோபாராம் கைகளை அகல விரித்துக் கனமான கர்லா சுழற்றுவான், அடிக்கடி ; உட்கார்ந்து கொண்டு கஞ்சா இலையைக் கசக்குவான் ; எப்போதாவது, அப்படியே பச்சை முள்ளங்கியை மிகவும் திருப்தியோடு தின்பான். நாங்கள்

அவன் காதில் ‘ ராதாகிருஷ்ண ’ என்று கத்துவோம். “ ஊம்...ஊம் ” என்று அவன் இரண்டு கைகளையும் தூக்கத் தூக்க நாங்கள் போடுகிற கூச்சலும் பலமாகிக்கொண்டே வரும். தன் இஷ்ட தெய்வத்தின் திருநாமத்தை விடாமல் காதாரக் கேட்க அவன் பண்ணின உபாயம் இது !

அப்போது நகரில், ‘ கியாஸ் ’ விளக்கோ மின்சார விளக்கோ இல்லை. மண்ணெண்ணெய் விளக்குப் பின்னாலே வந்தபோது அதன் வெளிச்சத்தைக் கண்டு பிரமித்துவிட்டோம். சாயங்காலமானதும் ஆள்காரன் வந்து ஒவ்வோர் அறையிலும் ஆமணக்கெண்ணெய் விளக்கு ஏற்றி வைத்துவிட்டுப் போவான். நாங்கள் படிக்கிற அறையில் இரண்டு திரி இட்ட குத்துவிளக்கு ஒன்று எரியும்.

மினுக் மினுக் என்று எரியும் அவ்விளக்கு வெளிச்சத்தில், பியாரி ஸர்க்காரின் முதல் வாசகத்திலிருந்து பாடம் சொல்லிக் கொடுப்பார் வாத்தியார். முதலில் கொட்டாவி வரும் ; பிறகு தூக்கம் வரும் ; அதற்கப்புறம் கண் சுழல, அதைக் கசக்க ஆரம்பிக்க வேண்டியதுதான். அடிக்கடி வாத்தியார் என்னோடு படிக்கும் ஸதீன் என்ற இன்னொரு பையனைக் காட்டி, “ ஸதீனைப் பார். தங்கக்கம்பி அவன் !

படிப்பில் என்ன அக்கறை தெரியுமா அவனுக்கு! தூக்கம் வந்தால் கண்ணில் மூக்குப் பொடியைப் போட்டுக் கசக்கிக்கொள்வான்” என்பார். நானே? — அதைச் சொல்லி என்ன லாபம்? ‘எல்லாப் பிள்ளைகளுக்குள்ளும் நான் ஒருவன் மட்டும் மண்டுவாய் இருக்கிறேனே’ என்று எவ்வளவுதான் தாழ்வாக எண்ணிக் கொண்டும் சுறுசுறுப்போ சுரணையோ ஏற்படவில்லை. ராத்திரி ஒன்பது அடித்ததும் தூக்கம் கண்ணை இழுக்க, வாத்தியாரைக் கேட்டுக் கொண்டு போய்விடுவேன் தூங்க. முன் கட்டிலிருந்து உள்ளே போக ரேழி ஒன்று உண்டு. இலைக் கதவு போட்டிருக்கும். மேலே இருந்து மினுக் மினுக் என்று எரிந்துகொண்டே தொங்கும், ஒரு லாந்தர். அந்த வழியாகத் தான் போகவேண்டும். ஆனால் மனசுக்குள்ளே ஒரு கிலி; ஏதோ ஒன்று பின்னாலே பிடித்துக் கொள்ள வருவதுபோல இருக்கும். முதுகு சிலிர்க்கும். பூதம், பிசாசு என்றெல்லாம் அப்போது பேசிக்கொண்டிருப்பார்கள்; அந்தக் காலத்து மனிதர்களுக்கே இந்தப்பயம் உள்ளூற உண்டு. எவளாவது வேலைக்காரி ஒருத்திக்குத் திடீரென்று காட்டேரி மூக்கால் கத்தினமாதிரி பட்டுவிடும். தடால் என்று கீழே விழுந்து விடுவாள். இந்தப் பெண்பேய் மிகவும்

பொல்லாதது ; அதற்கு மீன்பேரில்தான் கண். வீட்டின் மேற்கத்தி மூலையில் இலையடர்ந்த ஒரு பாதாமரம். 'அதன் கிளையில் ஒரு காலும், மூன்றும் மாடிச் சுவரில் ஒரு காலும் வைத்துக் கொண்டு ஏதோ ஒன்று நிற்கிறது' என்று சொல்லுபவர்கள் அநேகம்பேர் இருந்தார்கள் அப்போது; அதை உண்மை என்று அப்படியே நம்புபவர்களுக்கும் குறைவில்லை. அண்ணு வின் சிநேகிதர் ஒருவர் இதைக் கேட்டு நகைத் தார். வேலைக்காரர்கள், 'என்னடா! இந்த ஆசாமிக்குப் பயம், பக்தி ஒன்றுமே இல்லை போல் இருக்கிறது! ஒரு நாள் கழுத்தை முறித்து விடப்போகிறது ; அப்புறம் தெரிகிறது பார் இவர் ஜம்பமெல்லாம்!' என்று எண்ணுவார் கள். அந்த நாளில் எங்கே பார்த்தாலும் இதே பேச்சுத்தான் ; மேஜைக்கு அடியில் வைத் திருந்தால்கூடக் கால் சிலிர்க்கும்.

இன்னும் தண்ணீர்க் குழாய் வரவில்லை. வேலைக்காரர்கள் காவடிகட்டி மாசி, பங்குனி மாதங்களில் கங்கை ஜலத்தைக் குடத்தில் கொண்டுவருவார்கள். கீழே ஓர் இருட்டறை யில் வரிசை வரிசையாகப் பெரிய பெரிய அண்டாக்களில் வருஷம் முழுவதற்கும் குடி தண்ணீர் நிரம்பி இருக்கும். அடியில் இருக்கும் அந்தச் சதசதப்பான சின்ன இருட்டறையில்

காலைப் போர்த்துக்கொண்டு யாரோ இருப்பார்கள். அவர்கள் தலை அவ்வளவு பெரிசாகத் தோன்றும்; வயிற்றிலே இரண்டு கண் இருப்பதுபோலவும், காது இரண்டும் முறம்போலவும் காணும்; கால் இரண்டும் எதிரும் புதிருமாகக் கோணிக்கொண்டு இருக்கும். அந்தப் பேய்நிழல் பக்கமாக உள்பக்கம் இருந்த தோட்டத்துக்குப் போகும்போது மார்பிலே திக்குத் திக்கென்று தூக்கி வாரிப்போடும்; கால் வெட வெடவென்று அடித்துக் கொள்ளும்.

அந்த நாளில் வெள்ளம் வரும்போது தெருவோரமாகக் கட்டியிருந்த ஜலதாரை வழியாய்க் கங்கைநீர் பெருகிவரும். தாத்தா நாளிலிருந்து அந்த ஜலதாரை நீர்தான் போய் எங்கள் குளத்தில் விழும். மூடியைத் திறந்துவிட வேண்டியதுதான்; குபு குபு வென்று ஜலம் ஓடையில் போவதுபோல் நுரைத்தெழுந்து செல்லும். மீன்கள் நீரோட்டத்துக்கு எதிராக நீந்திக்கொண்டே துள்ளிப் பல்டி அடிப்பதைப் பார்க்கிற தென்றால் எனக்கு அதிக ஆசை. தென்னண்டை வராந்தாவின் கிராதியைப் பிடித்துக்கொண்டு 'ஆ' என்று அதைக் கவனித்துக்கொண்டிருப்பேன். கடைசியாக, அந்தக் குளத்துக்கும் கேடு

காலம் கிட்டிவிட்டது. வண்டி வண்டியாகக் குப்பை சேர்ந்துபோய் அது தூர்ந்துவிட்டது. அதோடு, அந்தப் பக்கத்தில் பசுங் கண்ணுடி போல் இருந்த அக்காட்சி மாயமாய் மறைந்து போயிற்று. அந்தப் பாதாமரம் மட்டும் இன்னும் இருக்கிறது. இரண்டு காலேயும் இப்படி அகல விரித்துக்கொண்டே நிற்பதற்கு ஏற்ற படி அம்மரம் அமைந்திருந்தாலும் அந்தப் பிரம்மரக்ஷஸ் எங்கே போயிற்ருே, தெரியவில்லே.

இதற்கிடையே உள்ளும் ப்றமும் புதிய ஒளி பரவ ஆரம்பித்துவிட்டது.

2

அந்தப் பல்லக்குப் பாட்டி காலத்தது. மிகவும் அகல நீளம்; நவாபு நாளே ரீதியில் அமைந்தது. இரண்டுபக்கத் தண்டும் எவ்வெட்டுப் பேர் தூக்குகிற அளவுக்கு இருந்தன. கையில் தங்கக் காப்பும், காதில் கெட்டிக் கடுக்கனும், உடம்பில் சிவப்பான கைநெசவு பனியனும் போட்டுக்கொண்டிருந்த அந்தத் தண்டுதூக்கிகள் அந்தக் காலத்துப் பணக்காரரோடு போய்விட்டார்கள், சூரியாஸ்தமனத்தின் போது மங்கி மறையும் பலவர்ண மேகம்போல். இந்தப் பல்லக்கின் பக்கங்களில் வர்ணக் கோலம்.

அதில் எத்தனையோ இடம் அழிந்தும் நைந்தும் போய்விட்டது. அங்கும் இங்கும் கறைபட்டுக் கிடந்தது. உள்ளே இருந்த திண்டிலிருந்து தேங்காய்நார் எட்டிப் பார்த்தது. அந்தக் காலத்தில் உபயோகமாக இருந்த இப்பேர்ப்பட்ட சாமான் இப்போது காரியஸ்தர் வேலைபார்க்கும் இடத்தருகிலுள்ள வராந்தாவின் ஒரு மூலையில் கிடக்கிறது. எனக்கு அப்போது வயது ஏழோ எட்டோ. அவசியமான ஜோலி எதுவும் இல்லை; இந்தப் பழம் பல்லக்குக்கும் சீட்டுக் கொடுத்துவிட்டதால், இதுவும் என்னைப்போல் ஓய்வு எடுத்துக்கொண்டு சும்மாக் கிடந்தது. அதனால்தான் எனக்கு இதன்மேல் அவ்வளவு பிரீதி. இதைச் சமுத்திரத்தில் இருக்கும் ஒரு தீவாகவும், நான்தான் விடுமுறை நாட்களைக் கழிக்கவந்த ராபின்ஸன் குரூஸோவாகவும், பத்திரமாகப் பூட்டிக் கண்கொட்டாமல் கடுங்காவலில் வைத்தும் எப்படியோ கம்பி நீட்டி இங்கே வந்து உட்கார்ந்திருக்கும் கைதியாகவும் என்னைப் பாவித்துக் கொள்வேன்.

அப்போது எங்கள் வீடு நிறைய மனிதர்கள் இருந்தார்கள். என்மேல் அப்படி யாருக்கும் 'நிகா' இல்லை. வீட்டின் பல கட்டுகளிலும் வேலை செய்துவந்த ஆள்காரர்கள்

மூலைக்கு மூலை போடுங் கூச்சல்தான் எங்கும் கேட்கும்.

எதிரில் இருந்த முற்றத்தின் வழியாக வேலைக்காரி பியாரி பிரப்பங்கூடையை இடுப்பில் எடுத்துக்கொண்டு கடைக்குப் போய்க் கறிகாய் வாங்கிவருவாள். ஆள்காரன் துகன் காவடியில் கங்கா ஜலம் கொண்டுவருவான். புது மோஸ்தரில் நெய்த புடைவையை விற்பனை பண்ண நெசவுகாரி உள்ளே போவாள். சந்துக்குப் பக்கத்திலுள்ள அறையில் மாதக் கூலிக்கு உலையை ஊதி ஊதி வீட்டு ஓட்டை உடைசல் பாத்திரங்களைப் பழுதுபார்க்கும் தினு, காரியஸ்தர் இருக்கும் இடம் வருவான்; காதில் இறகுபேனாவைச் செருகிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் கைலாஸ் முகஜ்ஜேயிடம் தனக்குச் சேரவேண்டிய பாக்கி, இவ்வளவென்று தெரிவித்துக் கொள்வான். முற்றத்தில் உட்கார்ந்து பழம்பஞ்சை 'டங் டங்' என்று வில்லால் அடித்துக்கொண்டிருப்பான் பஞ்சடிப்பவன். வெளிப்பக்கம் பயில்வானைக் காணுவுடன் காவலாள் முகுந்தலால் உருண்டு புரண்டு குஸ்தி பிடிப்பான். 'சடாசட்' என்று இரண்டு காலிலும் அறை விழும்; ஒரே மூச்சில் இருபது இருபத்தைந்து தண்டால் எடுப்பான். பிச்சையரிசிக்காகக்

காத்துக்கொண்டிருக்கும் பிச்சைக்காரர் கூட்டம்.

நாழி ஆக ஆக, வெயில் சுறுசுறுவென்று ஏறிக்கொண்டே வரும். வாயிலில் மணி அடிக்கும். பல்லக்கில் உட்கார்ந்திருக்கும் நாட்களில் மணிக்கணக்கைப்பற்றியே அக்கறை இல்லை. அந்தப் பன்னிரண்டு மணி இந்தக் காலத்ததாகத் தோன்றாது; பழைய காலத்தில் ராஜசபை கலைய அரண்மனை வாயிலில் மணி அடிப்பதாகவும், ராஜா சந்தனுபிஷேகம் செய்துகொள்ளப் புறப்படுவதாகவும் பாவனை. விடுமுறை நாட்களில் எங்களைக் கவனிப்பார் யாரும் இல்லை; அவர்கள் எல்லோரும் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிக் கொண்டிருப்பார்கள். நான்மட்டும் தன்னந் தனியாகக் கிடப்பேன். கற்பனை உலகில் அந்த நகராத பல்லக்கில் ஸஞ்சாரம் செய்ய ஆரம்பித்துவிடுவேன். என் உப்பைத் தின்றுவிட்டு உழைப்பவர்களெல்லாம் என் மனோசிருஷ்டியே. யதேச்சையாக, தோன்றின வழியில் போய்க்கொண்டிருப்பேன். அந்த மார்க்கமாகப் பல்லக்குத் தேச தேசாந்தரங்களுக்குச் செல்லும். என் இஷ்டம்போல், புஸ்தகத்தில் படித்திருந்த பெயர்களை அந்த நாடுகளுக்கெல்லாம் வைத்துவிட்டேன். எப்போதாவது ஒரு சமயம் அடர்ந்த

காட்டினுள்ளே செல்லவேண்டி யிருக்கும். அங்கே பந்தம் எரிவதுபோல், புலி பளபள வென்று கண்ணை வைத்துக்கொண்டு பார்க்கும். உடம்பு நடுங்கும் எனக்கு. கூடவே வேட்டைக்கார விசுவநாதன் வருவான். துப்பாக்கி வெடிக்கும் டும் என்று. அவ்வளவு தான்; எல்லாம் கப்சிப். அப்புறம் ஒரு சமயம் மயில் கழுத்துடைய சிங்காரத் தோணியாக மாறிவிடும் பல்லக்கு. சமுத்திரத்தில் மிதந்து செல்லும். கரையே கண்ணில் படாது. துடுப்புச் சப்தம் 'சப்சப்' 'சப்சப்' என்று கேட்கும். அலைகள் 'தைதை' என்று கொந்தளித்து எழும்பும். ஆட்கள், "சமாளி, உம் சமாளி...சூறுவளி வந்துவிட்டது!" என்று கூவுவார்கள். சுக்கானண்டை படகோட்டி ஆப்துல் இருப்பான். கூரான குவிந்த தாடி, க்ஷவரம் பண்ணிவிட்ட மீசை; மொட்டைத் தலை. பார்க்கும்போதே ஆசாமி யார் என்று தெரிந்துவிடும். அண்ணுவுக்குப் பத்மா நதியிலிருந்து 'இலிச்' மீனும் ஆமை முட்டையும் கொண்டுதருவான் அவன்.

அவன் என்னோடு சொல்லியிருக்கிறுன்: ஒருநாள் சித்திரைமாதக் கடைசியில், படகில் மீன் பிடிக்கப் போயிருந்தானும். திடீரென்று சித்திரை வெறி மூண்டதாம்.

பிரமாதமான காற்று மழையாம். படகு மூழ்கிவிடும்போல் ஆகிவிட்டதாம். ஆப்துல் பல்லில் கயிற்றைக்கடித்துக்கொண்டு ஜலத்தில் குதித்தானும். நீந்தி ஒரு திட்டில் கரையேறிக் கயிற்றைப் பிடித்துப் படகைக் கரையில் இழுத்துப் போட்டானும். கதை இவ்வளவு சீக்கிரமாக முடிந்தது எனக்குப் பிடிக்கவில்லை. படகு மூழ்கவில்லை; தப்பித்துக்கொண்டு விட்டது. இது கதையாகுமா? "அப்புறம்? அப்புறம்?" என்று திரும்பத் திரும்பக் கேட்டேன். அவன், "அப்புறம் ஓர் ஆபத்து. ஒரு புலியைப் பார்த்தேன்; அதற்குத்தான் எவ்வளவு ஆக்ரோஷம்! அதன் மீசை இரண்டும் இந்தே பெரிசு! புயல் அடிக்கும்போது அக்கரையில், பகதூர்கஞ்ஜ் படித்துறையண்டை இருக்கும் பூவரசமரத்திலே போய் ஏறிக்கொண்டது. ஒரு பேய்க்காற்று அடித்தது; உடனே மரம் முறிந்து பத்மாவில் விழுந்தது. புலி வெள்ளத்தில் மிதந்துகொண்டு போயிற்று. ஆனாலும், ஜலத்தை விழுங்கிக் கொண்டே திட்டில் கரையேறிவிட்டது. அதைப் பார்த்ததுமே கயிற்றைச் சுருக்குப் போட்டுத் தயாராக வைத்துக்கொண்டேன். அது இந்தே பெரிய கண்ணை உருட்டிக் கொண்டு என் எதிரே நின்றது. கஷ்டப்பட்டு

நீந்தி வந்ததல்லவா? அதற்கு அகோரப் பசி எடுத்துவிட்டது. என்னைக் கண்டதும், பளபள வென்று சிவப்பாக இருந்த அதன் நாக்கிலிருந்து ஜலம் சொட்டியது. காட்டிலேயும் வெளியிலேயும் எத்தனையோ ஆசாமிகளை ஒரு கை பார்த்துவிட்டு இருந்தது அந்தப் புலி. ஆனல் ஆப்துல் கிட்டே வாலாட்ட முடியுமா? இன்னும் நான் யார் என்று அதற்குத் தெரியவில்லைபோல் இருக்கிறது! 'வா அம்மா, குழந்தை!' என்று சவால் விடுத்தேன். அது முன்னங்கால் இரண்டையும் தூக்கியதோ இல்லையோ கப் என்று கயிற்றை வீசி அதன் கழுத்தில் சுருக்கை மாட்டிவிட்டேன். திமிறிக்கொண்டு ஓடத் தன்னல் ஆன பாடுபட்டது; திமிறத் திமிறச் சுருக்கு நன்ருகக் கழுத்தை இறுக்கிக்கொண்டு விட்டது; அதன் நாக்குப் பிதுங்கியது" என்ருன்.

இதுவரைக்கும் சும்மாக் கேட்டுக்கொண்டிருந்தேன்; அப்புறம், "ஆப்துல், அது செத்துத்தானே போய்விட்டது?" என்றேன்.

"ஆப்துல், அதன் பாட்டன், அப்பன் வந்தாலும் சாவுமா அது? ஆற்றிலேயோ வெள்ளம்; பகதூர்கஞ்ஜுக்குத் திரும்பிப் போவது எப்படி? அந்தப் புலிக்குட்டியைப் படகோடு

படகாகக் கட்டிவிட்டேன்; கயிற்றைப் பிடித்து இழுத்துக்கொண்டு இருபது குரோச தூரம் வந்தேன். வழியெல்லாம் அது 'கோம் கோம்' என்று உறுமிக்கொண்டே இருந்தது; அதன் வயிற்றில் கோலால் குத்திக்கொண்டே இருந்தேன் நானும். சாதாரணமாக அவ்வளவு தொலைவு வரக் குறைந்தது பத்து அல்லது பதினைந்து மணி நேரமாவது பிடிக்கும்; ஆனால் எப்படியோ ஒன்றரை மணி நேரத்துக்குள்ளே வந்து சேர்ந்துவிட்டேன். அப்புறம் நடந்ததைக் கேட்காதே, தம்பி! எனக்கு அதற்கு மேல் தெரியாது, பதில் சொல்ல" என்றான்.

நான், "சரி; அந்தப் புலி இப்போது முதலையாக மாறிவிட்டது; இல்லை?" என்றேன்.

"தண்ணீர்மேலே அதன் மூக்கு நுனியை எத்தனையோ தரம் பார்த்திருக்கிறேன். ஆற்றங்கரைச் சரிவிலே வெயில் வேளையில் அது உடலை நீட்டிக்கொண்டு படுத்திருப்பதைப் பார்த்தால் பயங்கரமாகச் சிரிப்பதுபோல் தோன்றும். துப்பாக்கிமட்டும் இருந்திருந்தால் ஒரு கை பார்த்திருப்பேன். லைஸென்ஸ் தான் போய்விட்டதே!

"ஆனால் ஒரு வேடிக்கை நடந்தது. ஒரு நாள் குறத்தி காஞ்சி, ஆற்றங்கரை மேட்டில்

உட்கார்ந்துகொண்டு மூங்கில் கழியை வெட்டிச் சீவிக்கொண்டிருந்தாள். பக்கத்திலேயே அவள் ஆட்டுக்குட்டியும் கட்டியிருந்தது. திடீரென்று ஆற்றிலிருந்து அந்த முதலை வந்து ஆட்டுக்குட்டியின் காலைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஜலத்துக்குள் போயிற்று. குறத்தி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அதன் முதுகில் ஏறிக்கொண்டு கையிலிருந்த கத்தியால் அதன் கழுத்திலேயே போடு போடு என்று போட்டாள். ஆட்டுக்குட்டியை விட்டுவிட்டு ஜலத்தில் மூழ்கிவிட்டது, அந்த முதலை" என்றான் ஆப்துல்.

நான் பரபரப்புடன், "அப்புறம்?" என்றேன்.

ஆப்துல், "அப்புறம் நடந்த விஷயம் தண்ணீருக்குள்ளே போய்ப் பார்த்தால்தான் தெரியும்; அதை அறிந்துகொண்டு வர ரொம்ப நேரம் ஆகும். அடுத்த தடவை உன்னைப் பார்க்க வருவேனே, அப்போது ஆளை விட்டுச் சங்கதியை அறிந்து வருகிறேன்" என்றான். ஆனால் அவன் இன்னும் வந்தபாடில்லை. ஒருவேளை என்ன ஸமாசாரம் என்று தெரிந்துகொண்டு வரப் போயிருப்பான்.

இப்படியெல்லாம் பல்லக்கில் உட்கார்ந்து கொண்டு மனோலோகத்தில் பிரயாணம்

செய்வேன். பல்லக்கை விட்டால், ஒவ்வொரு நாள் நானே வாத்தியாராகவும் மாறிவிடுவேன்; இரும்புக் கிராதிகள்தாம் சிறுவர்கள். பயந்து கொண்டு அவை கப்சிப் என்று இருக்கும். ஒவ்வொன்று ரொம்பத் துஷ்டாகவும் இருக்கும். பாடத்தைப் படிக்கிறதோ கவனிக்கிறதோ இல்லை, சுத்தமாக! "பெரியவர்களானல் நீங்கள் கூலி தூக்கவேண்டியதுதான்" என்று மிரட்ட வேண்டியிருக்கும். அடிபட்டுப் பட்டுக் கிராதிமேலெல்லாம் அடையாளம் பதிந்து விட்டது; ஆனாலும் போக்கிரித்தனத்தை விட்டால்தானே? எப்படி விடும்? விட்டால் ஆட்டம் பாதியில் நின்றுவிடுமே! இன்னொரு விளையாட்டு, என் மரச் சிங்கத்தை வைத்துக் கொண்டு. தசரா பூஜையின்போது பலி கொடுப்பார்கள் என்று கேட்டிருந்தேன். நானும் சிங்கத்தைக் காவு கொடுத்தால் ஏதாவது அற்புதம் நடக்கும என்று எண்ணிக் கொண்டு அதன் முதுகில் கத்தியால் வெட்டு வெட்டு என்று வெட்டித் தீர்த்துவிடுவேன்; மந்திரம் இல்லாமல் பூஜை எப்படி நடக்கும்? அதையும் நானே கட்டியிருந்தேன்:

"ஸிங்கி மாமா காடும்
ஆந்தி போஸேர் பாடும்
உல்குட் டுல்குட் ட்யாம் குட்குட்

ஆக்ரோட் பாக்ரோட் கட்கட் கடாஸ்
பட்பட் படாஸ்."

இதில் எல்லா வார்த்தையும் கடன் வாங்கினவை; ஆக்ரோட் என்பதுமட்டும் என் சொந்த வார்த்தை. ஆக்ரோட்டுக் காய் என்றால் எனக்கு ரொம்ப ஆசை. 'கடாஸ்' என்ற சப்தத்திலிருந்து என் கத்தி மரக்கத்தி என்று கண்டுகொண்டிருக்கலாம். 'படாஸ்' என்பதிலிருந்து அந்தக் கத்தியும் சரியான கத்தியல்ல, மொக்கை என்று தெரிந்திருக்கும்.

3

நேற்று இரவுமுதல் மப்பு போட்டபடி இருக்கிறது. விடாமல் மழை பெய்கிறது. மரஞ்செடிகளெல்லாம் அசையாமல் ஊமைபோல் நிற்கின்றன. பறவைகளின் ஒலி அடங்கியிருக்கிறது. சிறு வயதில் சாயங்கால வேளைகளில் பொழுது போக்கினதெல்லாம் இப்போது நினைவுக்கு வருகிறது.

நாங்கள் வேலைக்காரர் விடுதியிலேயே காலங் கழிப்போம், அப்போதெல்லாம். இங்கிலீஷ் பதங்களை எழுத்துக் கூட்டி உச்சரித்து நெட்டுருப்போடும் தொல்லை இன்னும் ஏற்படவில்லை. 'சாயங்காலம் வந்துவிட்டதே' என்று

மார்பு திக்குத் திக்கென்று அடித்துக்கொள் ளாத சமயம் அது; ஹெட்மேன் அண்ணு, "முதலில் வங்காளியில் பேச வரட்டும்; அப் புறம் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்" என் பார். அதனுல் என் வயதுக்கு ஈடான பள்ளிக் கூடச் சிறுவர்கள் கடகடவென்று 'I am up' (நான் மேலே இருக்கிறேன்), 'He is down' (அவன் கீழே இருக்கிறுன்) என்று ஒப்பித்துக் கொண்டு போகும்போது நான் B(பி)A(ஏ) D(டி) = Bad (பாட்), M (எம்) A (ஏ) D (டி) = Mad (மாட்) வரைக்குங்கூட வரவில்லை.

எப்போதோ நவாபு நாளில் ஆள்காரர் இருக்கிற விடுதியைத் தோஷாகானு* என் பார்கள். பழைய தசை மங்கி எவ்வளவோ தாழ்ந்துவிட்டோம்; ஆனுலும் தோஷாகானு, †தப்தர்கானு, ‡பைடக்கானு என்ற பெயர்கள் மட்டும் நிலைத்துவிட்டன.

அந்தச் சாமான் கிடங்கின் தென்னண் டைக்கையில் ஒரு பெரிய அறையில், ஆமணக் கெண்ணெய்விட்டுக் கண்ணுடிக் கோப்பையில் மினுக் மினுக் என்று தீபம் எரிந்துகொண் டிருக்கும். சுவரில் கணேசர் படம் ஒன்றும், காளி படம் ஒன்றும் மாட்டியிருக்கும். அக்கம்பக்கத்தில் பல்லி, விளக்குப் பூச்சியைப்

*சாமான் கிடங்கு. ‡ ஆபீஸ் அறை. † உல்லாஸ அறை.

பிடித்துத் தின்னும். அந்த அறையில் ஒரு சாமானும் இராது; தரையில் ஓர் அழுக் கடைந்த மெல்லிய பாய்மட்டும் விரித்திருக் கும்.

நாங்கள் ஏழைகளைப் போலவேதான் வளர்ந்துவந்தோம். வண்டி, குதிரை இந்தத் தொல்லையெல்லாம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். வெளிப்பக்கம் ஒரு மூலை யில், புளிய மரத்தடியிலே கொட்டகை ஒன்று உண்டு. அதில் ஒரு பல்லக்கு - வண்டியும், கிழக்குதிரையும் இருந்தன. மிகவும் சாதாரண மான துணிமணிதான் உடுத்துவோம். காலில் ஸாக்ஸ், பூட்ஸ் எல்லாம் போடுவதை நிறுத்தி எத்தனையோ காலமாய்விட்டது. விரஜேசு வரன் போன பிற்பாடு ரொட்டித் துண்டும் வாழையிலையில் மூடின வெண்ணெயும் கிடைத்தபோது எங்களுக்கு எப்படி இருந் தது தெரியுமா? வானத்தையே எட்டிப் பிடித்துவிட்டது போலத்தான். அந்த நாளைப் பெரிய மனிதர்களோ இல்லையோ, தசை மங்கி னாலும் அதைப் பிரமாதப் படுத்தாமல் சகஜ மாக நடந்துகொள்ள வேண்டுமென்று திட் டம் பண்ணியிருந்தார்கள்.

பாய்விரித்த அந்த அறையில் ஆள்காரர்க ளெல்லாம் கூடுவார்கள். விரஜேசுவரன்தான்

அவர்களுக்குத் தலைவன். தலைமயிரும் மீசையும் பாதி நரைத்தும் நரைக்காமலும் இருந்தன. இழுத்துவிட்டாற்போல் சுண்டி-வறண்ட மூஞ்சி. நெஞ்சாழம் ஜாஸ்தி அவனுக்கு. கட்டையான குரல். மென்று விழுங்கிக்கொண்டு பேசுவான். முன்னே ஒரு பெரிய பணக்காரனிடத்தில் வேலையாய் இருந்தான். அங்கிருந்து, எங்களைப்போல வெட்டுண்ணிகளை பிரட்டு உருட்டி மேய்க்க வந்து சேர்ந்தான். அவர்கள் ஊரில் அவன்தான் வாத்தியாராம். சாகிறவரைக்கும் இந்தக் கெடுபிடி இருந்தது அவனிடம். "ஐயாமார் வந்திருக்கிறாங்கள்" என்னாமல், "காத்துக் கொண்டிருக்கிறாங்கள்" என்பான். இதைக் கேட்டு எஜமானர்கள் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். மண்டைக்கிறுக்கு எவ்வளவு இருந்ததோ அவ்வளவு சுசியும் ஆசாரமும் அவனிடமுண்டு. குளிக்கக் குளத்துக்குப் போவான். இறங்கினதும் அதில் படிந்திருக்கும் எண்ணெய், பாசியை எல்லாம் இரண்டு கையாலும் ஐந்தாறு தடவை விலக்கிவிட்டு, 'துபுக்' என்று ஒரு முழுக்குப் போடுவான். ஸ்நானம் ஆனதும் கையைக் கோணிக் குறுக்கிக்கொண்டு அவன் போவதைப் பார்க்கவேண்டுமே! 'பிரம்மன் படைத்த இந்த அநாசார உல

கத்தை விட்டுப் போனேமோ, பிழைத்தோமா, ஜாதிபோகாமல்!' என்பதுபோல் இருக்கும். எப்படி யெல்லாம் நடந்துகொண்டால் சரி, எப்படி நடந்து கொள்ளக்கூடாது என்று ரொம்ப உற்சாகத்தோடு பேசுவான். அவன் கழுத்துச் சற்றுக் கோணல்; இதனாலும் அவன் பேச்சுக்கு ஒரு தனி மதிப்பு. ஆனால் அந்தக் கெடுபிடித்தனம் இருந்ததே, அதுதான் அவனிடத்திலுள்ள ஒரு குறை.

உள்ளுக்குள்ளே ஆசாமிக்குத் தீனி மேல்தான் கண்; ஆனால் அதை அடக்கிவைத் திருந்தான். எங்கள் இலையில் முதலிலேயே சரியான அளவுக்குப் பரிமாற மாட்டான். நாங்கள் சாப்பிட உட்கார்ந்ததும் லுசி*யை ஒவ்வொன்றாகத் தூக்கி நுனியில் பிடித்துக் கொண்டு, "இன்னும் போடட்டுமா என்ன?" என்று கேட்பான். அவனுக்குப் பிடித்த பதில் எதுவென்று அவன் குரலிலிருந்தே கண்டு கொள்ளலாம். நான் எப்போதும், "வேண் டாம்" என்றுதான் சொல்வது வழக்கம். அதற்குமேல் வற்புறுத்த மாட்டான். பால் தவலை பேரிலும் அவனுக்கு விசேஷப் பற்றுதல் உண்டு. எனக்கோ பால் என்றால் சுத்தமாகப் பிடிக்காது. 'ஷெல்ப்' வைத்த ஒரு சின்ன

---

* பூரிபோன்ற பக்ஷணம்

அலமாரி இருந்தது அவன் அறையில். அதில் ஒரு பெரிய பித்தளைச் செம்பில் பாலும், ஒரு மரத்தட்டில் லூசியும் கறிகாயும் வைத்திருக்கும். கம்பிவலை போட்டிருக்கும் அந்த அலமாரியைச் சுற்றிச்சுற்றி மோப்பம் பிடித்துக் கொண்டே பூனையைப்போல் அலையவேண்டியதுதான்.

இப்படி அரைவயிறு உண்டு உண்டு சிறு வயது முதல் வாடிக்கை யாகிவிட்டது. அப்படிக் குறைவாகச் சாப்பிட்டும் இளைத்துப் போய்விட்டேன் என்பதற்கில்லை. சோற்றுக்கு முந்திக்கொள்ளும் சாப்பாட்டுராமர்களுக்கு நான் எந்த விதத்திலும் பலத்தில் குறைந்து விடவில்லை. பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் 'டிம்கி' கொடுக்கலாமே என்று மனசு அடித்துக்கொள்ளும்; ஆனால் என்னதான் உடம்பைப் பாழாக்கிக்கொண்டாலும் ஜுரம் வர வழைத்துக்கொள்ள முடியாது. செருப்பை ஜலத்தில் ஊற வைத்து நாள் முழுதும் அலைந்தேன்; ஜலதோஷம் பிடிக்கவில்லை; கார்த்திகை மாதம் மொட்டை மாடியில் படுத்துக் கொண்டேன்; தலைமயிரும் சொக்காயும் நனைந்ததுதான் மிச்சம்; தொண்டையில் கொஞ்சமாவது சளி இழுக்கிறமாதிரி தெரிந்தால் தானே! அப்புறம், அஜீர்ணமே லவலேசங்

கூட இல்லாதிருந்தும், "வயிற்றை வலிக்கிறது" என்று சொல்லிப் பார்த்தேன், அம்மாவிடம். அதைக் கேட்டு அம்மா உள்ளுக்குள்ளேயே சிரிப்பாள்; துளிக்கூடக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் ஆள்காரனைக் கூப்பிட்டு, "சரி; போய் வாத்தியார்கிட்டே இன்றைக்குப் பாடம் நடத்தவேண்டாம் என்று சொல்லிவிடு" என்பாள். 'நடுவிலே நடுவிலே படித்துக்கொண்டு மற்ற வேளைகளில் சும்மா இருந்தால் ஒன்றும் முழுகிவிடாது' என்று அந்த நாளில் தாய்மார்கள் எண்ணிவந்தார்கள். இந்தக் காலத்து அம்மாமாரிடம் அகப்பட்டுக்கொண்டோமோ, கட்டாயம் வாத்தியாரிடம் போய்த்தான் தீர வேண்டும். அதோடு சும்மா இருப்பார்களா? காதையும் பிடித்துத் திருகி எடுத்து விடுவார்கள். இல்லாவிட்டால் நயமாகச் சிரித்துக்கொண்டே விளக்கெண்ணெய் கொடுப்பார்கள். ரொம்ப நாள் இப்படியே ஜுரம் வராமல் சொஸ்தமாக இருந்தேன். அப்படி எப்போதாவது தற்செயலாக வந்துவிட்டதாக வைத்துக்கொண்டாலும், "ஜுரம்" என்ன மாட்டார்கள்; "உடம்பு சற்று உஷ்ணமாக இருக்கிறது" என்றுதான் சொல்லுவார்கள். டாக்டர் நீல்மாதவ் வருவார்; அப்போதெல்

லாம் தெர்மாமீட்டரையே கண்ணால்கூடப் பார்த்ததில்லை. டாக்டர் உடம்பைத் தொட்டுப் பார்த்ததுமே, முதல் எடுத்ததும் விளக்கெண்ணெய் கொடுக்கச் சொல்வார்; அப்புறம் வயிற்றைப் பட்டினி போடச் சொல்வார். கொஞ்சம் ஜலம்மட்டும் குடிக்கக் கொடுப்பார்கள்; அதுவும் வெந்நீர்தான். அதோடு வெல்லப்பாகில் உருட்டின ஏல உருண்டையும் கொடுப்பார்கள். பட்டினி போட்ட பின் மூன்று நாளும் 'மௌர்லா' மீன் குழம்பும் புளப்பாகமும் தேவாமிர்தமாக இருக்கும்.

ஜுரம் வந்து என்னைப் பிடித்ததாக ஞாபகம் இல்லை. மலேரியா என்ற நாமதேயமே கேட்டதுகூட இல்லை. வாந்திக்கு வருகிற இந்த விளக்கெண்ணெய்தான் எல்லாவற்றிலும் சிறந்த மருந்து; அப்போது கொயினா இருந்ததாகவும் நினைவு இல்லை. உடம்பில் ஒரு கத்திவெட்டோ குத்தோ பட்டதில்லை. அம்மை என்றால் என்னவென்று கூட இதுவரை தெரியாது. சரீரம் அப்படி வஜ்ரம் போல் இருந்தது. தங்கள் பிள்ளைகள் உடம்புக்கு வராமல் வாத்தியாருக்கு அடங்கி நடக்க வேண்டுமானால், தாய்மார்கள் விரஜேசுவரனைப் போல் ஒரு பரிசாரகனைத் தேடிப் பிடிக்கவேண்டும். சோற்றுச் செலவும் குறை

யும்; டாக்டர் செலவும் மிச்சமாகும், அதிலும் மில் மாவும் கலப்பட எண்ணெயும் நெய்யும் விற்கிற இந்த நாளிலே. அப்போது கடைத் தெருவில், 'சாக்கோலேட்'டையே பார்த்தது கூட இல்லை; தம்பிடிக்கு ஒன்று வீதம் ரோஜா மிட்டாய் கிடைக்கும். ரோஜா வாசனை வரும் படி மேலே ஏதோ பூசின அந்த எள்ளு ருண்டை இப்போதெல்லாம் சிறுவர்கள் ஜேபி யில் குலுங்குகிறதோ இல்லையோ யார் கண் டார்கள்? இந்தக் காலத்து நாசூக்கு மனிதர் கள் வீட்டில் அது தலை காட்டாது; இது மட் டும் நிச்சயம். அந்த வறுத்த மசாலா பொட் டலம் இப்போது எங்கே? அவ்வளவு நயமான அந்த எள்ளுருண்டைதான் எங்கே போ யிற்று? அது இன்னுங்கூட இருக்கிறதா? உம்... இல்லாவிட்டால் போகட்டும்; அவசிய மில்லை.

விரஜேசுவரன் அருகிலே உட்கார்ந்து கொண்டு தினந்தோறும் சாயங்காலங்களில் கிருத்திவாஸருடைய ஸப்தகாண்ட ராமா யணத்தைக் கேட்டுவருவேன். அவன் படித் துக்கொண் டிருக்கும்போது பாதியில் கிசோரீ சாடுஜ்ஜே வந்துவிடுவான். ராமாயணச்சிந்து முழுதும் ஸ்வரத்தோடு ஒப்பிப்பான் அவன். திடீரென்று அங்கே வந்து இடத்தைப் பிடித்

துக்கொண்டு கிருத்திவாஸரை ஒரேயடியாக அழுத்திவிட்டு ஓவென்று சங்கதிபோட்டு 'அடடட லக்ஷ்மணு, இதுவென்ன கோரம்! வந்ததே, ஐயோ, மாபெருங் கேடு!" என்று தன் ராமாயணச் சிந்தைப் பாட ஆரம்பித்து விடுவான். வாய் சிரித்தபடி இருக்கும். வழுக்கைத் தலை பளபளவென்று தெரியும். சிந்தின் அடிகள் அருவிபோல் செல்லும். பதத்துக்குப் பதம் ஓசை பொருந்தி ஜலத்தடியில் கூழாங்கல் உருண்டுசெல்வதுபோல் தொண்டை புரளும். அதோடு பாவங்களைக் காட்டக் கையையும் காலையும் ஆட்டி அபிநயம் பிடிப்பான். கிசோரீ சாடுஜ்ஜேக்கு ஒரு விஷயத்தில் ரொம்ப வருத்தம். "இந்த மாதிரி சாரீரத்தை வைத்துக்கொண்டு தாதாபாயி (நான்) நாடகத்திலே சேராமல் சும்மா இருக்கிறுனே! சேர்ந்தால் வேறு ஒன்றும் இல்லாவிட்டாலும் பெயராவது எடுக்கலாம்" என்பான்.

ராத்திரி வெகு நேரமாகும், அந்தக் கூட்டம் கலையு. பிசாசு பயத்தினுல் முதுகைக் கூசிக்கொண்டு பின்கட்டிலே அம்மா இருக்கிற அறைக்குப் புறப்பட்டுப் போவேன். அம்மா தன் சிற்றன்னையோடு சீட்டாடிக் கொண்டிருப்பாள். சன்னக்காரை பூசின அந்த அறை, யானையின் தந்தம்போல் பளபள

என்று ஜொலிக்கும். பெரிய கட்டில் ஒன்றின் மேல் துப்பட்டி விரித்திருக்கும். அங்கே போய் நான் பண்ணும் ஆர்ப்பாட்டத்தில் அம்மா, கையில் இருக்கும் சீட்டைப் போட்டுவிட்டு ஆட்டத்தை விட்டு எழுந்து, "இவன் தொண தொணப்புச் சகிக்கவில்லையே! சித்தி, போய் இவனுக்கு ஒரு கதை சொல்லித் தொலே யேன்!" என்பாள். நாங்களெல்லாம் வெளி வராந்தாவில் இருக்கும் பானை ஜலத்தில் காலைக் கழுவிக்கொண்டு பாட்டியை இழுத்துக் கட்டிலில் உட்கார வைப்போம். அப்புறம் அமராபுரியிலுள்ள ராஜ குமாரியின் துயில் கலைந்து அவளை அழைத்து வருவான் ராஜ குமாரன். அரைத் தூக்கத்தில் யாரோ எழுப்பு கிற மாதிரி இருக்கும். அப்போது ராத்திரி முதல் ஜாமம்; நரிதான் ஊளையிடும். அந்த நாளில் இராவேளைகளில், கல்கத்தாவிலுள்ள சில புராதனமான வீட்டு மதில் ஓரத்தில் இப்படிக் கேட்பது சகஜந்தான்.

4

நாங்கள் சின்னவர்களா யிருந்தபோது சாயங்கால வேளைகளில் கல்கத்தா நகரம் இப்போது இருப்பது போல் அப்படிக் கலகலப்புடன் இராது. சூரிய வெளிச்சத்தையே நம்பிக்

கொண்டிருந்த காலம் போய் இப்போது மின்சார விளக்கு வந்துவிட்டது. நகரத்தில் வேலை கம்மியாயிருந்தாலும் ஓய்வு என்பதே இல்லை, அடுப்பில் எரிகொள்ளி அணைந்து போனாலும் கனல் மட்டும் இருப்பது போல். எண்ணெய் ஆடும் யந்திரங்கள் குறித்த நேரத்தில் ஓய்ந்துவிடுகின்றன; ஸ்டீமர் ஊதுவதும் நின்றுவிடுகிறது; ஆலைகளிலிருந்து கூலியாட்கள் வேலை முடிந்து வெளியே போய்விடுகிறார்கள்; சணல் மூட்டைகளை இழுத்துச் செல்லும் வண்டி எருமைகள் நகரக் கொட்டகைகளில் போய்த் தங்கிவிடுகின்றன. நகரில் பகலெல்லாம் தலை வேதனையான அலுவல்கள். தெருவின் இரு புறத்திலும் கடைகளில் விற்பனை முன்போலவே நடந்து கொண்டிருக்கிறது; ஏதோ சிற்சில மாறுதல்கள் இருக்கலாம். பலவிதமான இரைச்சலுடன் மோட்டார் வண்டிகள் நாலு திசையும் பறக்கின்றன; வேலை நியதமாக அல்ல. எங்கள் காலத்திலே அஸ்தமனமாயிற்றோ இல்லையோ, விளக்கே இல்லாத ஒரு மூலையில் கம்பளியைச் சுருட்டிக் கொண்டு கிடப்பது போல, காரியமும் எவ்வளவு இருந்தாலும் அப்படியே கிடக்கும். வீட்டிலும் வெளியிலும் மாலை நேரங்கள் வேடிக்கையாகக் கழியும்; ஈடென் தோட்டப்

பக்கமாக, கங்கைக் கரையோரத்தில் காற்று வாங்கிவிட்டுத் திரும்புவார்கள், நாசூக்கு மனிதர்கள். வண்டியின் பின்னுல் ஆள் காரர் 'ஹை ஹை' என்று குரல் கொடுப்பது ரஸ்தாக்களில் கேட்கும். சித்திரை, வைகாசி மாதங்களில் தெருக்களிலே 'பரீப்' என்று ஐஸ் விற்பவன் கூவிக்கொண்டு செல்வான். பெரிய சட்டிகளில் பனிக்கட்டித் துகள் கலந்த உப்பு ஜலத்தில் சிறு சிறு குழல்களில் 'குல்பி' என்னும் ஒருவித ஐஸ் தின்பண்டம் இருக்கும். அதைத்தான் இக்காலத்தில் ஐஸ்-கிரீம் என்கி ருேம். தெருப் பக்கமாக இருக்கும் வராந்தா வில் நின்றுகொண்டு, ஐஸ்-கிரீம் விற்பவன் குரலைக் கேட்கும்போது என் மனம் அலை பாய்வது எனக்குத்தானே தெரியும்! அந்தக் காலத்தில், "மல்லிகைப் பூ" என்று விற்றுக் கொண்டு போகிற குரலும் கேட்கும். வஸந்த காலத்தில் அப்படிப் பூ விற்றவர்களெல்லாம் இப்போது ஏனே இல்லை! அந்தக் காலத்தில் வீட்டிலுள்ள பெண்டுகள் அதைத் தங்கள் கூந்தலில் சூடிக்கொள்வார்கள்; புஷ்ப வாசனை காற்றில் கம்மென்று வீசும். உடம்பை அலம் பிக்கொள்வதற்குமுன் தங்கள் அறை வாயிற் படியண்டை பெண்டுகள் கைக்கண்ணுடியைப் பார்த்துக்கொண்டே குழலை முடிந்து கொள்

வார்கள். சவரி வைத்துக்கொண்டு அவர்கள் பலவிதமாகக் கொண்டை போட்டுக்கொள்வார்கள். கறுப்புக்கரை போட்ட பராஸ்டாநாச் சேலைகளைப் பட்டையாகக் கொசுவி உடுப்பார்கள். அம்பட்டச்சி வருவாள். மழுமழுப்பான பட்டைக் கல்லைக் கொண்டு பெண்டுகளின் பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பு பூசுவாள். அந்தப்புரத்திற்கு இவளே ஸமாசாரங்களைக் கொண்டு வருவாள். இந்தக் காலத்தைப்போல் டிராம் 'புட்போர்'டில் தொத்திக்கொண்டு, ஆபீஸிலிருந்தும் காலேஜிலிருந்தும் திரும்பும் கோஷ்டியினர் 'புட்பால்' ஆட்டம் பார்க்க மைதானத்துக்கு ஓடுவதில்லை. சினிமா இருந்தால் தானே அதன் வாயிலில் கூட்டம் இருக்கப் போகிறது? ஆனால் ஜனங்களுக்கு நாடகங்களைப் பார்க்கும் ஆவல்மட்டும் இருந்தது. அப்போது நான் ரொம்பச் சின்னவனானதால் அதைப்பற்றி எனக்கு என்ன தெரியப் போகிறது?

அந்த நாளில் பெரியவர்கள் விளையாட்டுத் தமாஷாக்களில் சிறு பிள்ளைகள் தூரத்திலிருந்துகூடக் கலந்துகொள்ள முடியாதபடி இருந்தது. அப்படித் துணிந்து கிட்டப் போனாலோ, "போங்களடா! உங்களுக்கு

இங்கே என்ன வேலை? போய் எங்கேயாவது விளையாடுங்களேன்!" என்று அதட்டுவார்கள். சிறுபிள்ளைகள் சற்று இரைச்சல் போட்டு விளையாடினாலும், "உச்! கம் என்று இருங்களடா!" என்று எரிந்துவிழுவார்கள். பெரியவர்களுடைய வேடிக்கை விளையாட்டுக்கள் மட்டும் சந்தடி இல்லாமலா நடக்கின்றன? அவர்கள் பண்ணும் ஆர்ப்பாட்டம் சிற்சில சமயங்களில் அருவியின் நீர்த்திவலைபோல் தொலைவிலிருந்து சிதறிவந்து எங்கள் காதில் விழுவதுண்டு. எங்கள் வீட்டு வராந்தாக் கைப்பிடி சுவரில் எட்டிப் பார்ப்பேன். எதிரே உள்ள பெரிய கூடத்தில் ஒரே தீபாலங்கார மாக இருக்கும். வாயிலெதிரே பெரிய பெரிய கோச்சு வண்டிகள் வந்து நிரம்பிவிடும். வாயிற் படியில் நின்றுகொண்டு அண்ணமார்களில் யாராவது ஒருவர் விருந்தாளிகளை வரவேற்று மாடிக்கு அழைத்துச்செல்வார். பன்னீர்ச் செம்புகளிலிருந்து அவர்கள்மேல் பன்னீர் தெளித்து, கையில் பூச்செண்டு வழங்குவார்கள். உள்ளே நடக்கும் நாடகத்தில், உயர்குல மடந்தையர் விம்மி அழும் சப்தம் எப்போதாவது ஒருதரம் காதுக்கு எட்டும். அப்போதெல்லாம் அதன் மர்மம் எனக்குப் புரிவதில்லை. என்னவென்று அறியவேண்டுமென்று ஆவல்

மட்டும் அதிகமாய் இருந்தது. கடைசியில் விஷயம் தெரிந்தது. அழகர் பேர்வழி உயர் குலத்தைச் சேர்ந்தவரே; ஆனால் பெண் அல்ல; என் தமக்கை புருஷர்தாம். அந்தக் காலத்தில், எங்கள் குடும்பத்தில், புருஷர்களும் பெண்டுகளும் இருந்தது போலவே பெரியவர்களும் சிறியவர்களும் அவரவர்பாட்டுக்கு இருந்தார்கள். பைடக்காவில் லஸ்தர் விளக்கு வெளிச்சத்தில் சதிர்க்கச்சேரி நடந்து கொண்டிருக்கும். பெரியவர்களெல்லாம் பெரிய சுருள் குழல்களிலிருந்து ஹுக்காப்புகை குடித்துக்கொண்டிருப்பார்கள். வீட்டுப்பெண்டுகளெல்லாம் மங்கலான வெளிச்சத்தில் மறைவான ஓர் இடத்திலிருந்து, வெற்றிலைப்பெட்டியை வைத்துக்கொண்டு ஆடல் பாடல்களைக் கவனிப்பார்கள். வெளியிலிருந்து வரும் பெண்கள் அவர்களோடு கலந்துகொள்வார்கள்; வளவளவென்று ஊர் வம்பளப்பு ஆரம்பித்து விடும். நாங்களெல்லாம் அப்போது படுக்கப் போய் விடுவோம். பியாரியோ சங்கரியோ கதைசொல்ல வருவாள். இப்போதும் அவள் சொல்வது என் காதில் ஒலிக்கிறது:

"நிலாவில் பூத்த முல்லைப்பூப்போல் அந்த ராஜகுமாரி..."

5

எங்கள் காலத்துக்குக் கொஞ்சம் முன்னே பெரிய பணக்காரர் வீடுகளில் ஜாத்ரை* நடப்பது வழக்கம். இனிமையான சாரீரமுடைய பிள்ளைகளைப் பொறுக்கி யெடுத்து அந்த நாடக் கோஷ்டியில் சேர்த்துக்கொள்வார்கள். என் சிற்றப்பா ஒருவர் அந்த மாதிரி ஒரு கோஷ்டியின் தலைவர். நாடகம் எழுதும் திறமை அவருக்கு உண்டு. சிறுபிள்ளைகளை நடிக்கத் தயார் செய்வதில் அவருக்கு அளவற்ற உற்சாகம். பணக்காரர் வீட்டில் இந்தக் கலைக்கு ஆதரவு ஏற்பட்டதோடு, இதுவே தொழிலாக உடைய நாடக சபைகளும் இதை வளர்க்கத் தொடங்கின. இங்கும் அங்கும் பெரிய மனிதர் ஆதரவில் ஜாத்ரா சபைகள் பல தலைதூக்கின. நாடக முதலாளிகளெல்லோரும் உயர் குலத்தில் பிறந்தவர்கள் என்றோ படித்தவர்களென்றோ சொல்வதற்கில்லை. சொந்த முயற்சியினாலேயே முன்னுக்கு வந்தவர்கள். நடுநடுவே எங்கள் வீட்டிலும் இம்மாதிரியான நாடகங்கள் நடைபெறும்.

நான் சிறுவனானதால் அதைப் பார்ப்பதற்கு வழியில்லை. நாடகத்திற்குமுன் நிகழும்

---

* கூத்து அல்லது நாடகம்

ஏற்பாடுகளை நான் பார்த்திருக்கிறேன். வீட்டு வராந்தாவில் நடிகர்கள் கூடியிருப்பார்கள். நாலுபக்கமும் சுருட்டுப்புகை கப்பிக்கொண்டிருக்கும். நடிக்கும் சிறுவர்கள் நீளமாகத் தலைமயிர் வைத்துக்கொண்டிருப்பார்கள். காதுகள் வளையமிட்டிருக்கும். அந்தச் சின்ன வயதிலேயே அவர்கள் மூஞ்சி முற்றிப் போயிருக்கும். வெற்றிலையைக் குதப்பிக் குதப்பி உதடுகள் காவியேறியிருக்கும். வர்ணந்தீட்டிய ஒரு பேழையில் நாடக உடுப்புக்களும் சாமான்களும் அடங்கியிருக்கும். வீட்டு வாயில் திறந்திருப்பதால் இவர்களை வேடிக்கை பார்க்க உள்ளே பிலுபிலுவென்று ஜனங்கள் நுழைந்து விடுவார்கள். நாலுதிக்கும் தபகுபலாய் அவர்கள் சித்புர் ரஸ்தாவில் வரும் சப்தங்கூடக் கேட்கும். இரவு மணி ஒன்பதும் ஆகிவிடும். புறாவைப் பருந்து அடிக்கவருவது போல் வேலைக்காரச் சியாமன் திடீரென்று தோன்றுவான். கடமடவென்று இருக்கும் தன் கையால் கெட்டியாக என்னைப் பிடித்துக் கொண்டு, "அம்மா கூப்பிடுறாங்க! படுத்துக் கொள்ள வா!" என்று இழுத்துச் செல்லுவான். பத்துப்பேர் எதிரே என்னை அவ்வாறு இழுத்துச் செல்வது எனக்குத் தலையிறக்கமாய் இருக்கும். விதியே என்று நான் படுக்கச்

செல்வேன். வெளியே ஒரே கூச்சலும் கொம்மாளமும். ஜகஜ்ஜோதியாய் லஸ்தர் குளோபுகளெல்லாம் அங்கே எரிந்துகொண்டிருக்கும். என் அறைமட்டும் நிச்சப்தமாய் இருக்கும். ஒரு மரப்பீடத்தில் மினுக் மினுக் என்று எரியும் ஒரு பித்தளை அகல். தூக்கத்தின் நடுவே ஜால்ரா சப்தமும் பாட்டின் ஒலியும் கேட்கும்.

இந்த மாதிரி வேடிக்கை விளையாட்டுக்களில் சிறுவர்கள் கலந்துகொள்ளக் கூடாது என்பது பெரியவர்கள் கொள்கை. ஆனால் ஒரு தரம் எதனாலோ அவர்களுக்கும் மனசு இளகியிருந்தது. 'பையன்களும் இந்த நாடகத்தை வந்து பார்க்கலாம்' என்று உத்தரவு பிறந்தது. அந்தத் தடவை 'நள-தமயந்தி' நாடகம். அது ஆரம்பிப்பதற்கு முன், இரவு பதினொருமணி வரைக்கும் படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்தேன். கட்டாயம் என்னை எழுப்புவதாகச் சொல்லியிருந்தார்கள். ஆனால் எனக்கோ அவர்கள் வார்த்தையில் நம்பிக்கை விழவில்லை. அவர்களெல்லாம் பெரியவர்கள்; நாங்களெல்லாம் சின்னவர்களோ இல்லையோ? எப்படியோ அன்று இரவு வேண்டா வெறுப்பாய்ப் படுக்கையில் படுக்கச் சென்றேன். அம்மாவே என்னை எழுப்புவதாக உறுதி கொடுத்திருந்தாள்; அதனால்தான் நான் தூங்

கப் போனேன். ஒன்பது மணிக்குப் படுக்கப் போய்விட்டால் அப்புறம் என்னை எழுப்புவது சற்றுச் சிரமந்தான். தூக்கத்திலிருந்து என்னை எழுப்பி யாரோ வெளியே அழைத்துச் சென்ற போது என் கண் பூத்துவிடும்போல் இருந்தது. மாடியெங்கும் வர்ண குளோப் விளக்குகளிலிருந்து வெளிச்சம் வீசிக்கொண்டிருந்தது. வெள்ளைத் துப்பட்டாக்கள் பரப்பிய அந்த இடம் கண்ணைப் பறித்தது. அதன்மேல் ஒரு பக்கம், வீட்டு எஜமானர்களும் அவர்கள் சிநேகிதர்களும் அமர்ந்திருந்தார்கள். மற்ற இடங்களில் யாராரோ அவரவர் இஷ்டம் போல் உட்கார்ந்திருந்தார்கள். தங்கச் சங்கிலி தொங்கவிட்டுக் கொண்டிருக்கும் பெரிய மனிதர்களும் வந்திருந்தார்கள். இப்படிப் பெரியவர்களும் சிறியவர்களுமாக அங்கே கலந்து உட்கார்ந்து கொண்டிருந்தோம். பார்க்க வந்தவர்கள் எல்லாரும் பணக்காரர் என்று சொல்லிவிட முடியாது. பல ரகமான ஜனங்கள் இருந்தார்கள். நாடகத்துக்குப் பாட்டுக்கட்டிக் கொடுத்தவர்களும் இங்கிலீஷிலிருந்து 'காபி' அடிக்கும் மேதாவிகளல்ல. பாட்டுக்களின் மெட்டு, ஆடல், கதை எல்லாம் வங்காளதேசம் எங்கும் சகஜமாக அடிபடுபவைதாம். பண்டிதர்கள் திருத்திக்கொடுத்த சுத்தபாஷையாகவும் இராது.

சபையில் நான் அண்ணுமார்களுடன் வந்து உட்கார்ந்தபோது ரூபாய் முடிச்சு ஒன்றை என் கையில் கொடுத்தார்கள். 'சபாஷ்' போடும் சமயங்களில் ஒவ்வொரு ரூபாயாக அரங்கை நோக்கி வீசுவது அந்தக் காலத்தில் ஒரு வழக்கம். நாடகக் கம்பெனியாருக்கு இது மேல்வரும்படி. அப்படி வீசுபவர்களுக்குப் பிரக்கியாதி. பொழுது விடிந்தாலும் நாடகம்மட்டும் நடந்துகொண்டேயிருக்கும். நடுவே, தூங்கிவிழும் என்னை அலக்காகத் தூக்கிச் செல்வதுகூட எனக்குத் தெரியாது. விழித்துக்கொள்ளும்போது எனக்கு ரொம்ப வெட்கமாக இருக்கும். பெரியவர்களுக்குச் சமமாக உட்கார்ந்துகொண்டு ரூபாய் வீசி எறிந்தவனையா இப்படி அத்தனை பேரெதிரே தூக்கிக்கொண்டு போவது? என்ன அவமானம்! தூக்கம் நன்றாகத் தெளியும் போது நான் அம்மா படுக்கையில் கிடப்பதை உணர்வேன். பொழுதோ ஆகியிருக்கும். வெயிலும் சுறுசுறுவென்று ஏறிவிட்டிருக்கும். அந்த மாதிரி நான் ஒரு நாளும் நாழி கழித்து எழுந்ததில்லை.

இந்தக் காலத்திலோ வேடிக்கைகள் யாவும் விட்டு விட்டு இராமல் ஆற்றொழுக்குப் போல் தொடர்ந்து நடைபெறுகின்றன.

தினந்தோறும் எங்கே பார்த்தாலும் சினிமா தான். சொற்பச் செலவிலேயே இஷ்டமான இடத்தில் நுழைந்து வேடிக்கை பார்க்கலாம். அந்தக் காலத்தில் நடந்த ஜாத்ரா-நாடகங்கள் மணல் ஆற்றைக் கிளறி ஊற்றுநீர் எடுப்பது போல்தான். கொஞ்ச நாழிகைதான் இந்தத் தமாஷா. இந்த இன்பத்தில் ஒரு கை அள்ளிப் பருக ஜனங்கள் நாலு திசையிலிருந்தும் பறந்தோடி வருவார்கள்.

அந்தக் காலத்தை ஒரு ராஜகுமாரனுக்கு ஒப்பிடலாம். பண்டிகை பருவங்களில் கொண்டாட்டங்கள் யாவும் ஒருவன் தாராளத்தினால் நடப்பவை. நாற்சந்தியில் கண்கவரும் பல ரகமான பொருள்களை அலங்காரமாகக் கடைகளில் வைத்துக்கொண்டு காத்திருக்கும் செட்டிமகனைப் போன்றது இக்காலம். காட்சிகளைப் பார்க்க ஜனங்கள் ராஜவீதிகளிலிருந்தும் வருகிறார்கள்; குறுகிய சந்துகளிலிருந்தும் வருகிறார்கள்.

6

வேலையாட்களுக்குப் பெரிய தலைவன் விரஜேசுவரன். அவனுக்கு அடுத்தபடியாக இருந்தவன் சியாமன். அவன் ஊர் யசோர். அசல் பட்டிக் காட்டான். பேச்சுக் கல்கத்தாவில் வழங்கும்

நாகரிகப் பேச்சாக இராது. நல்ல மாநிறமாக இருப்பான். பெரிய பெரிய கண்கள். நிகு நிகு வென்று எண்ணெய் படிந்த நீண்ட குடுமி. பாரியான இரட்டை நாடிச் சரீரம். அவன் சுபாவம் கடுமையானதன்று; வெள்ளை மனசு. சிறு பிள்ளைகளிடத்தில் அவனுக்கு அளவற்ற அன்பு. அவனிடந்தான் நாங்களெல்லாம் திவட்டிக் கொள்ளைக்காரர் கதையைக் கேட்போம். அந்தக் காலத்தில் பேய் பிசாசுக் கதைகள் உலவி வந்ததுபோல் திருடர்களைப் பற்றிய கதைகளும் ஒவ்வொரு வீட்டிலும் வழங்கி வந்தன. இந்தக் காலத்திலும் நடக்கிற கொலை களவுகளுக்குக் குறைவில்லை; போலீஸும் சரியான பேர்வழிகளைப் பிடிப்ப தில்லை. கதையிலுள்ள ஸ்வாரஸ்யம் இவற்றில் துளிக்கூட இல்லை. அந்தக் காலத்துத் திருடர்களைப்பற்றிய கதைகள் பல பேர் வாய் வழியாக வந்து வந்து ஓர் உருவாகியிருந்தன. அந்தப் பால்ய வயதில் சிலரை நாங்கள் நேரில் கண்டிருக்கிறோம். அவர்களெல்லாம் நல்ல வயதில் தேர்ந்த கொள்ளைக்காரர்களாய் இருந்திருக்கிறார்கள். கோல் சுழற்றுவதில் கை தேர்ந்தவர்கள் அவர்கள். இதனால் கோல் வித்தை கற்றுக்கொள்ள அவர்களுடன் பழகினவர்களுக்கெல்லாம் உற்சாகம் பிறந்தது.

அப்பேர்ப்பட்டவர்கள் பெயரைக் கேட்ட மாத்திரம் எல்லோரும் கும்பிடு போடுவார்கள். அந்தக் காலத்தில் நடந்த கொலைகள் வெறும் மூர்க்கத்தனமான அட்டூழியங்கள் அல்ல. துணிச்சல் இருந்ததுபோலவே தாராள மனசும் இருந்தது, கொள்ளைக்காரருக்கு. பெரிய மனிதர் வீட்டிலும் கோதாக்கள் ஏற்பட்டன. பெயர்போன கொள்ளைக்காரன் தான் வஸ்தாதியாகவும் இருப்பான். கொள்ளையடிப்பதே தொழிலாக உடைய ஜமீன்தார்கள் அந்தக் காலத்தில் ஏராளம். ஒரு கதை உண்டு: அவர்களைப் போல் ஒரு கூட்டத்தார் இரண்டு நதிகள் கூடும் இடத்தில் பதுங்கி இருந்தார்கள். அன்று அமாவாசைக் கறுக்கல். தசரா ஆரம்பம். கங்காளபைரவிக்கு நரபலி கொடுத்து அந்தத் தலையை வெளியே எடுத்துவந்தார்கள். அவர்களுக்குத் தலைவனான ஜமீன்தார் அதைப் பார்த்ததும் "ஐயோ! இது என்ன! என் மருமகனுயிற்றே!" என்று அலறினனும்.

அப்புறம் ரகு, விசு என்ற இரு கள்வர் தலைவர்களைப்பற்றிப் பலவிதமான கதைகள் அந்தக் காலத்தில் சொல்லுவார்கள். முன் எச்சரிக்கையாக ஓலை அனுப்பிவிட்டு ஊரைக் கொள்ளையிட வருவார்களாம். தொலைவில்வரும்

அவர்கள் கூச்சலைக் கேட்டதும் ஊரிலுள்ள வர்களுக்கெல்லாம் ரத்தம் உறைந்துவிடுமாம். பெண்கள்மேல் கை வைக்க மாட்டார்கள்; ஒரு தர்மத்துக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள். ஒரு சமயம் ஒருத்தி காளியைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு கையில் வாளேந்தி, பய முறுத்தி அவர்களிடமிருந்து காணிக்கை வாங்கிவிட்டாளாம்.

எங்கள் வீட்டில் ஒரு நாள், திருடர்கள் எப்படிக் கொள்ளை யடிப்பார்கள் என்று வேடிக்கை காட்டினார்கள். முண்டா திரண்ட வஸ்தாதிகள் வந்துவிட்டார்கள். நீளக் குடுமி வைத்துக் கொண்டிருந்தார்கள். அங்க வஸ்திரத்தினால் உரலைக் கட்டி அதைப் பல்லா லேயே தூக்கி முதுகில் போட்டுக்கொண்டார் கள். அவர்களில் பரட்டைத் தலைமயிருடைய ஓர் ஆள் அதை 'ரொய்ம் ரொய்ம்' என்று சுழற்ற ஆரம்பித்துவிட்டான். நீண்ட கழி ஒன்றை ஊன்றிக்கொண்டு இரண்டாம் மாடிக்குச் சுலபமாக எழும்பிவிட்டான். ஒரு வன் இரண்டு கைகளையும் தரையில் ஊன்றிக் கப் என்று ஒரு பல்டி அடித்துப் பக்ஷிபோல் மாயமாய்ப் பறந்துபோனான். பத்து இருபது குரோச தூரத்துக்கு அப்பால் வழி பறித்து விட்டு, அன்று இரவே ஒன்றும் அறியாதவர்

களைப்போல் கள்ளர்கள் திரும்பும் அதிசயத்தையும் காட்டினார்கள். நீண்ட இரண்டு மூங்கில் தடியை எடுத்து அவற்றின் பாதியில் கால் வைத்துக்கொள்ளவேண்டிய அளவுக்கு நடுவில் கட்டை அடித்துவைத்தார்கள். இந்தக் கழியைத்தான் 'கோலடி' என்பார்கள். தடியின் மேல்பாகத்தைப் பிடித்துக் கொண்டே ஒவ்வோர் அடியாக வைத்துச் செல்வார்கள். அப்படி நடந்தால் குதிரையை விட வேகமாகப் போகலாமாம். கொள்ளையாருக்கும் அபிப்பிராயம் எனக்கு இராதபோதிலும் கொம்பில் கால்வைத்து நடக்கும் இந்தப் பயிற்சியைச் சாந்திநிகேதன் பாலகர்களுக்குப் புகட்ட நான் ஒருசமயம் உத்தேசித்திருந்தேன். இந்த வேடிக்கைகளும், சியாமன் சொல்லும் கதைகளும் சேர்ந்து என் மனசில் ஒரு சித்திரத்தை எழுப்பிவிடும்; இவ்வாறு மாலைப் பொழுதைப் பல கற்பனைகளிடையே கழித்திருக்கிறேன். அப்போது என் உடல் நடுங்கும்.

ஞாயிற்றுக்கிழமை; அன்று விடுமுறை நாள். அதற்கு முந்தின நாள் சாயங்காலம் எங்கள் வீட்டுக்குத் தென்னண்டைப் பக்கம் உள்ள தோப்பில் சிள்வண்டுகளின் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. அப்போது நாங்கள் கேட்ட கதை ரகு என்னும் கொள்ளைக்

காரனைப் பற்றியது. நிழல் ஆடும் அறையில் மினுக் மினுக் என்று எரியும் மங்கலான விளக்கு. திக்குத் திக்கென்று மார்பு அடித்துக்கொண்டது. மறுநாள் விடுமுறையானதால் என்னுடைய பல்லக்கில் ஏறி உட்கார்ந்துவிட்டேன். ஓட்டாமலே அது கற்பனை புலகில் சென்றுகொண்டிருந்தது. கதையில் ஈடுபட்ட என் மனம் ஒரு பயங்கர உலகிற்கு என்னை இழுத்துச்சென்றது. என்னுடைய பல்லக்கைத் தூக்கும் ஆட்களின் "ஹேஹோ ஹேஹோ" என்ற குரலுக்கும் நள்ளிரவுக்கும் என்னவோபோல் இருந்தது. என் உடல் சிலிர்த்தது. சுற்றிலும் எங்கும் மரம்மட்டு இல்லாத மைதானத்தின் நடுவே பல்லக்கு இப்போது சென்று கொண்டிருந்தது. நடுப்பகல். கிலுகிலுவென்று அலையும் கானல். வெகுதூரத்தில் வெயிலில் பளபளக்கும் கரிய ஏரி. கண்ணைக் கூசும் மணற் பரப்பு. மேட்டிலிருந்து நீர்த்துறைப் பக்கமாகச் சரிந்திருக்கும் கப்பும் கிளையுமுள்ள பெரிய பூவரச மரம்.

கதையில் திடுக்கிடும் பாகம் வந்துவிட்டது: பெயர், ஊர் இல்லாத அந்த மைதானத்திலுள்ள மரத்தின் கீழே; அடர்ந்த மூங்கிற் புதருக்குச் சமீபமாக. மேலே செல்லச்

செல்லப் படபடவென்று அடித்துக்கொள்கிறது மார்பு. மூங்கிற் புதருக்கு அப்பால் இரண்டொருவர் கையுந்தடியுமாகத் தென்படுகிறார்கள். பல்லக்குத் தூக்கிகள் தோள் மாற்றிக்கொள்ளும் இடம். நீர் அருந்திவிட்டுத் தலையில் ஈரத்துணியைப் போட்டுக் கொள்கிறார்கள். அப்புறம் என்ன? கூச்சல்:

"அடேடே! டேடே! டேடே!"

7

விடிந்ததுமுதல் ராத்திரி வரைக்கும் யந்திரம் போல் ஓயாமல் பாடம் படிக்கவேண்டும். இந்த யந்திரத்துக்குச் சாவி கொடுக்கும் வேலை அண்ணா ஹேமேந்திரநாதருடையது. அவரோ நிமிர வேலை வாங்கிவிடுவார். தம்பூராத் தந்தியை அதிகமாக முறுக்கினால் 'படால்' என்று அறுந்துவிடுகிறது; எங்கள் மூளையில் அவர் படிப்பை ஏற்றினதன் பலன் விபரீதமாக முடிந்தது என்று இனிமேல் சொல்லாமல் மறைப்பது நன்றாக இராது. நாங்கள் கற்ற வித்தையை யெல்லாம் காற்றில் பறக்க விட்டாயிற்று. ஹேமேன் அண்ணா தம் பெரிய பெண்ணை நன்றாகப் படிக்கவைத்தார். உரிய காலத்தில் அவளை லொரெட்டா கான்வென்ட் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டார்.

அதற்கு முன்னெல்லாம் அவள் வங்காளியில் முதல் ஸ்தானம் வகித்துவந்தாள்.

பிரதிபாவுக்கு ஐரோப்பிய ஸங்கீதம் கற்றுக்கொடுத்தார் அண்ணா. இதனால் அவள் தன் நாட்டு ஸங்கீதத்தை மறந்துவிட்டாள் என்று அர்த்தமில்லை; அந்தக் காலத்தில் பெரிய மனிதர்கள் குடும்பத்தில் அவளுக்கு நிகராக ஹிந்துஸ்தானியில் பாடும் பெண்கள் எவருமே இல்லை.

ஐரோப்பிய ஸங்கீதம் கற்பதற்கு விசேஷமான ஸ்வர ஸாதகம் வேண்டும். இசையை அறிவதற்கு நுண்மையான செவி வேண்டும்; தாளக்கட்டு இருந்தால்தான் பியானு நன்ருக வாசிக்க முடியும்.

அப்புறம் சிறுபிராயம் முதல் நாங்கள் பாட்டுக் கற்க விஷ்ணு என்பவரை அமர்த்தினுர்கள். இந்தக் கானவித்யாலயத்தில் நானும் சேர்ந்து கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. விஷ்ணு எங்களுக்கு முதல் முதலாகக் கற்றுக் கொடுத்த உருப்படிகளை இந்தக் காலத்து ஸங்கீத வித்துவான்கள் எவருமே சிந்துவதில்லை. அவை நாட்டுப்புறப் பாட்டுக்கும் அதமமானவை என்று எண்ணம். இரண்டோர் உதாரணம் தருகிறேன் இங்கே:

ஒரு குறத்தி இருந்தாள்; அவள்
ஊருக்கு வந்தாளே.
அழகாய்ப் பச்சை குத்துவேனென்றே
அவள் சொன்னாளே.
உடம்பு முழுதும் கண்ட இடமும்
ஊசி போட்டாளே.
வலி தாளாமல், நாத்தனாரே,
வீறிட்டழுதேனே.

அந்தப் பாட்டில் இரண்டொரு விட்டுப் போன வரிகள் என் கவனத்திற்கு வருகின்றன:

சந்திர சூரியர் தோற்றுவிட்டாரே
சிறிய மின்மினி முன்
முகல் பட்டாணித் துலுக்கர் காலம்
முடிந்துவிட்டதே.
நெசவுக்காரன் ஒருவன் பார்ஸி
நன்றாய்ப் படிக்கிறான்.
கணேசன் தாயே, வருத்தாதே நீ
கன்னி வாழையை!
குலையும் தள்ளி அதுவும் நிறையக்
கன்றுகள் ஈன்றிடுமே!

பழையகாலத்துச் சமாசாரங்களை நினைவூட்டும் இரண்டொரு வரிகள்கூட உண்டு:

நாயுருவி இருந்ததொன்று;
காரைமுள்ளுக் காடதனை
அழித்ததுபார் தனக்கே ஓர்
அரியணையை அமைப்பதற்கே.

எடுத்தவுடன் ஹார்மோனியத்தில் ஸ, ரி, க, ம பழகுவதும், அதற்குமேல் சுலபமான

ஹிந்திப் பாட்டுக்கள் பாடுவதுமே இந்தக் காலத்து வழக்கமாய்விட்டது. எங்கள் அறிவு வளர்ச்சிக்கு முன்நின்று பாடுபட்டவர், விளையாட்டாகவே எதையும் சிறுவர்களுக்குப் புகட்டவேண்டும் என்னும் கருத்துடையவர். ஹிந்தியைவிடச் சுலபமான வங்காளிப் பாட்டே மனதில் ஊன்றும் என்னும் உண்மையை அறிந்தவர். அதோடு வங்காளிப் பாட்டுக்குத் தாளமே அலாதி; தபளாவின் தாளகதிக்கு ஒத்தே வராது. சந்தக்கட்டு தானாகவே நாடியில் துடிக்கவேண்டும். தாயார் பாடும் நாட்டுப்புறப் பாட்டுக்களே குழந்தைகள் மனதைக் கவர்கின்றன; அவையே அவர்கள் முதல் முதலாகக் கற்கும் இலக்கியம். இதை என்னை வைத்துக்கொண்டு பரீக்ஷித்தார்கள். ஸங்கீதத்தைக் கொலைபண்ணும் இந்த ஹார்மோனியம்,நல்லகாலம் அந்த நாளில் வரவில்லை. தோள்மேல் தம்பூராவைச் சார்த்திக்கொண்டு பாடப் பழகிக்கொண்டேன் நான். கட்டைகளை அழுத்தினால் கீச்சிடும் இசைக்கருவிகளுக்கு அடிமையாகவில்லை நான். என்னிடத்தில் ஒரு பெரிய குறை: பொருந்தி எதையும் நான் கற்பதில்லை. எனக்கு இஷ்டம் இருக்கிற போது ஸங்கீதத்தைப்பற்றிய நுட்பங்களைச் சேமித்து வைத்துக்கொள்வேன். நான்

மட்டும் ஊக்கமாகக் கானவித்தையைக் கற்றிருந்தால், இந்தக் காலத்துப் பாடகர்களையெல்லாம் தூக்கி அடித்திருப்பேன். அந்தக் காலத்தில் எனக்கு விசேஷ சௌகரியங்கள் இருந்தன. ஹேமேன் அண்ணா படிப்பு விஷயத்தில் எங்களைக் கவனித்துக்கொண்டிருந்த வரையிலும் விஷ்ணுவிடம் ஏதோதானோவென்று பிரம்மஸமாஜ கீதம் பயின்று வந்தேன். எனக்கே குஷி பிறக்கும்போது கதவு மறைவில் நின்றுகொண்டு பெரியவர்கள் பாடுவதைக் கேட்டு என் ஞானத்தை விருத்தி செய்துகொண்டேன்.

'அதி கஜ காமினீரே' என்று ஹேமேந்திர அண்ணா பேஹாக் ராகத்தில் பாடிய பாட்டை ஊன்றிக் கவனித்து அப்படியே மனசில் பதிய வைத்துக்கொண்டேன். சாயங்கால வேளைகளில் அம்மா வியக்கும்படி அந்தப் பாட்டைப் பாடிக் காட்டுவேன். எங்கள் வீட்டாருக்கு ரொம்ப வேண்டியவரான ஸ்ரீகண்ட பாபு, இரவும் பகலும் பாடுவதிலேயே லயித்திருப்பார். வராந்தாவில் உட்கார்ந்துகொண்டு மல்லிகைப் பூ எண்ணெய் உடம்பில் பூசிக்கொண்டு ஸ்நானம் செய்வார். கையில் எப்போதும் ஹுக்காக்குழல் இருக்கும். உயர்ந்த ரகமான அம்புரிப் புகையிலையின் மணம்

அங்கே பரவியிருக்கும். எப்போதும் பாட்டும் ராக ஆலாபனையுமாகவே இருக்கும். அவர் சிறுவர்களையெல்லாம் தம்மைச் சுற்றி அழைத்து வைத்துக் கொள்வார். எங்களுக்கெல்லாம் அவர் பாட்டுக் கற்றுக் கொடுக்கவில்லை; பாட்டை அள்ளி அள்ளிச் சொரிந்தார். அவற்றை நான் எப்படிக் கிரகித்துக்கொண்டேனே எனக்கே தெரியாது. அவருக்கு இசையின்மீது இருந்த ஆர்வம் கரை காணாது செல்லும்போது எழுந்து நிற்பார். குதித்துக் கொண்டே ஸிதாரை இழைப்பார். சிரித்துச் சிரித்து அவர் கண்களில் நீர் பெருக ஆரம்பிக்கும். அபூர்வமான பாட்டுக்கள் கிளம்பும்:

"மய் சோடோம் வ்ரஜகீ பாஸரீ."

நானும் அவரோடு கூடவே பாடுவேன்.

அந்தக் காலத்தில் எல்லாவிதமான அதிதிகளுக்கும் திறந்து கிடக்கும், எங்கள் வீடு. வருவோர் யார், எவர்கள் என்று விசாரிப்பதே வழக்கம் இல்லை. யாராவது வந்துவிட்டால் அவர்களுக்குத் தங்க இடமும் வயணமான சாப்பாடும் கட்டாயம் கிடைக்கும். அந்த மாதிரி முன்பின் தெரியாத ஒரு விருந்தாளி உறையில் இட்ட தம்பூராவை எடுத்துக் கொண்டு மூட்டை முடிச்சுகளுடன் தாராளமாக உள்ளே வந்து வீட்டின் முன் அறையில்

உட்கார்ந்து கொண்டார். எங்கள் வீட்டு வேலைக்காரன் காளுயிக்கு, வருவோர்க்கெல்லாம் ஹுக்காக் கொடுத்து உபசாரம் செய்யும் வேலை. ரீதிப்படி அவருக்கும் அதை வழங்கினான். புகையிலையோடுகூடத் தாம்பூலம் வைப்பதும் அந்தக் காலத்து வழக்கம். வீட்டுப் பெண்கள் அந்தப்புரத்தில் காலையில் எழுந்ததும் செய்யும் வேலை, வெளியிலிருந்து வரும் அதிதிகளுக்குத் தாம்பூலம் மடித்துவைப்பதே. சட்டுப் பட்டென்று வெற்றிலையைத் துடைத்துச் சுண்ணும்பு தடவிக் காசிக்கட்டிக் குழம்பைக் குச்சியால் தடவுவார்கள்; சரியான அளவுக்கு மசாலா தூவி லவங்கத்தைச் செருகிப் பித்தளைத் தாம்பாளம் நிறைய வைப்பார்கள். காசிக்கட்டி ஏறிய ஈரத்துணியால் அதை மூடி வைப்பார்கள். வேருெருபுறம் மெத்தைப் படிக்குக் கீழுள்ள ஓர் அறையில் ஹுக்காவில் புகையிலைத்துகள் நிரப்பும் வேலை ஜரூராக நடக்கும். மண் கூஜாக்களில் சாம்பலுடன் கலந்த ரோஜா இதழ்கள். கூஜா வயிற்றிலிருந்து நீண்ட குழாய் ஸர்ப்பத்தைப்போல் தொங்கும். அதனுள்ளே பன்னீர் மணம் கமழும். வீட்டுக்கு வருபவர்கள் படிக்கட்டு ஏறு முன்பே, யாராவது, "வாரும் வாரும்" என்று அம்புரிப் புகையிலை வாசனை

யோடு வரவேற்பார்கள். அந்தக் காலத்தில் யாரானாலும் சரி, அவர்களை மரியாதையோடு விசாரிக்கும் வழக்கம் இருந்தது. அப்படி வெற்றிலை பாக்கும், உயர்தரப் புகையிலையும் வழங்கும் காலம் எப்போதோ போய்விட்டது. இந்த அலுவல்களைக் குலத்தொழிலாய்க் கவனித்து வந்த வேலைக்காரர்களெல்லாம் இதை விட்டுவிட்டு, மிட்டாய்க் கடைகளில் மூன்று நாள் ஊசிப்போன * ஸந்தேசைப் பிசைந்து பிசைந்து வேறு பக்ஷணங்களாக உருட்டிப்போடும் வேலையில் இறங்கிவிட்டனர்.

ஊர் பெயர் இல்லாத அந்தப் பாடகர், தம் இஷ்டம்போல் சிலநாள் எங்கள் வீட்டில் தங்கியிருந்தார். ஏன் அவர் அத்தனை நாள் தங்கியிருக்கிறார் என்று யாரும் கேட்கவில்லை. காலையில் எழுந்து கொசுவலையை நீக்கிக்கொண்டு வெளியே வந்ததும் அவர் பாட்டைத்தான் நான் கேட்பேன். நியமப்படி எதுவும் கற்றுக்கொள்ளாத எனக்கு இந்தமாதிரி அவவேளைகளில்தான் பாட்டின்மேல் ஆவல் பிறக்கும். உதய ராகத்திலே "வங்சீ ஹமாரிரே (என் குழலே)" என்று அவர் பாடும் கானம் கர்ணாமிருதமாய் இருக்கும்!

* ஓர் இனிப்புப் பண்டம்.

அப்புறம், எனக்குக் கொஞ்சம் வயதானதும் எங்கள் வீட்டில் ஒரு சமயம் யதுபட்டர் என்ற ஒரு பெரிய ஸங்கீத வித்துவான் வந்திருந்தார். எனக்கு எப்படியாவது பாட்டுக் கற்றுக்கொடுப்பது என்று தீர்மானித்தார்; அவர் எண்ணம் ஈடேறவில்லை. ஆனால் சிற்சில ராகங்களைமட்டும், தெரிந்ததும் தெரியாததுமாகக் கற்றுக்கொண்டேன். காபி ராகத்தில் அமைந்த,

"ரும்ஜும் பரகே ஆஜு பாதரவா"

என்ற பாட்டு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் பாடிய 'வர்ஷாகால கீதங்'களுடன் ஒன்றாக இன்றளவும் அது நிலைத்திருக்கிறது. நடுவில் ஒரு தடை: அந்த ஸமயத்தில் சொல்லாமல் கொள்ளாமல் எங்கள் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தான். புலி அடிப்பான் என்று அவனுக்கு நல்ல பெயர். வங்காளி ஒருவன்கூடப் புலி அடிக்கிறான் என்றால் அந்தக் காலத்தில் அதிசயமான ஸமாசாரமல்லவா? ஸதாகாலமும் அவன் இருக்கும் அறையிலேயே நான் காலங் கழிப்பேன். பெரிய புலியின் கையில் தான் சிக்கிக்கொண்டதை அவன் சொன்னபோது நாங்களெல்லாம் திகிலடைந்து போனோம். புலி அவனைக் கடிக்கவில்லையாம்! மியூஸியத்தில் வாயைப்

பிளந்துகொண்டு இருக்கும் செத்த புலியைப் பார்த்துவிட்டுத்தான் இந்தக் 'கப்பி'யெல்லாம் அவன் அளந்திருக்கவேண்டும். அப்போது எங்களுக்கு என்னவோ அதெல்லாம் உண்மையாகத் தோன்றிற்று. இப்போது தெளிவாகப் புரிகிறது, அந்தப் புளுகு. அந்த வீர புருஷனுக்காக நாங்கள் அடிக்கடி வெற்றிலேயும் புகையிலேயும் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டே இருப்போம். தொலேவிலிருந்து கானடா ராக ஆலாபனே என் செவியில் விழும். இதுதான் நான் பாட்டுக் கற்றுக்கொண்ட லக்ஷணம்!

ஹேமேன் அண்ணு எங்களுக்கு ஆரம்பித்து வைத்த மற்ற வித்தைகளும் நல்ல பலன் அளிக்கக்கூடியனவே. ஆனுல் என் சுபாவ தோஷத்தால் அவை பயனற்றுப் போயின. என்னேப்போன்றவர்களே உத்தேசித்துத்தான் கவி ராமப்ரஸாத் ஸேன், 'உழவின் மேல் ஊக்கமில்லே, ஓ மனமே!' என்று பாடினுரோ என்னவோ! என்றைக்காவது உழுது கஷ்டப்பட்டிருந்தால்தானே எனக்குத் தெரியப்போகிறது!

நான் உழைத்துப் பாடுபட்ட இரண்டொரு விஷயத்தைப்பற்றி இங்கே சொல்லுகிறேன்:

இருள் பிரிவதன்முன் படுக்கையிலிருந்து எழுந்து, 'குஸ்தி'க்கு வேண்டிய லங்கோடுகளைத் தரித்துக்' கொள்வேன். குளிரினால் உடம்பில் முள்ளுக் குத்துவதுபோல் இருக்கும். அப்போது பட்டணத்தில் பிரக்கியாதி பெற்ற ஒரு பயில்வான் இருந்தான். அவன் பெயர் கானா பயில்வான். எங்களுக்குக் குத்துச் சண்டை கற்றுக்கொடுப்பவன் அவன்தான். எங்கள் வீட்டுக்கு வடவண்டைக் கையில் ஒரு திறந்த வெளி உண்டு. அந்த இடத்தைக் கோலாபாடி* என்று அழைப்பது வழக்கம். அந்தப் பெயரிலிருந்து எல்லா இடமும் பட்டணத்துடன் சேரவில்லை, கிராமாந்தரமான இடங்களும் இன்னும் இருந்தன எனத் தெரிய வரும். பட்டணத்து நாகரிகம் வந்த புதிதிலே அந்த வட்டக் களஞ்சியத்தில் வருஷாந்தர தான்யம் நிரப்பி இருந்ததாம். அறுவடையானதும் குடியானவர்கள் தங்கள் வாரத்தை அங்கே கொண்டு செலுத்துவார்களாம். அந்த இடத்தை நெருங்கினாற் போலவே நாங்கள் 'குஸ்தி' பயிலும் கொட்டகை இருந்தது. ஏறக்குறைய ஓர் அடி ஆழம் மண்ணைக் கிளறி மாவுபோல் ஆக்கி, அதில் ஒரு மணங்கு கடுகெண்ணெய்

* வட்டக் களஞ்சியம்

ஊற்றி, அந்த இடத்தைத் தயார் செய்து வைத்தார்கள். அங்கே பயில்வானுடன் நாங்கள் கட்டி உருள்வதை வெறும் சிறு பிள்ளை விளையாட்டென்றே சொல்லவேண்டும். அதிகமாக, மண் படிவதால் உடம்பில் ஒரு சட்டை அணிந்துவர ஆரம்பித்தேன். பிரதி தினமும் காலையில் நான் இப்படி மண்ணைப் பூசிக்கொண்டு வருவது அம்மாவுக்குச் சுத்த மாகப் பிடிக்கவில்லை. பிள்ளையின் உடல் நிறம் மங்கிவிடுமோ என்று அவளுக்குப் பயம். அதனால் விடுமுறைநாட்களில் என் உடம்பைத் தேய்த்துப் பார்ப்பாள். இந்தக் காலத்தில் நாகரிக மடந்தையர் தேக வர்ணத்தை அழகு படுத்தும் திரவியங்களை வெள்ளைக்காரர் கடையிலிருந்து குப்பிகளில் வாங்கி வருகிறார் கள். அந்தக் காலத்திலோ இதையெல்லாம் தங்கள் கையாலேயே செய்துகொள்வார்கள் பெண்கள். அரைத்த பாதம் பருப்பு, பால் ஏடு, கமலாப்பழத் தோல், இன்னும் எவ் வளவோ சாமான்கள் அந்தக் கலவையில் சேர்த்திருப்பார்கள். அதெல்லாம் தெரிந்திருந் தால் 'பேகம் விலாஸ்' என்று பெயர் வைத்து வியாபாரம் பண்ணியிருக்கலாம். மிட்டாய்க் கடையில் வரும் லாபம் அதில் வராமற் போகாது. ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்

டால் அதிகாலையிலேயே வராந்தாவில் உட்காரவைத்து எங்கள் உடம்பைப் பிடித்துக் கிறத்து விடுவார்கள். எப்போதடா எழுந்து போகப் போகிறோம் என்று என் மனம் அலை பாயும். எங்கள் வீட்டில் குழந்தைகள் பிறந்தவுடன் அவர்களைச் சாராயத்தில் தோய்த்து எடுப்பதனால்தான் வெள்ளைக்காரரைப் போல அந்தமாதிரிச் செக்கச் செவேல் என இருக்கிறார்கள் என்று பள்ளிக்கூடப் பிள்ளைகளிடையே வதந்தி.

'குஸ்தி' பயிலும் கூடத்திலிருந்து திரும்பி வந்தபோது மெடிகல் காலேஜ் மாணவன் ஒருவன் எங்களுக்கு மனித தேக அமைப்பைப் பற்றிப் பாடம் சொல்லித் தர வந்து உட்கார்ந்திருந்தான். சுவரில் அசல் மனிதனுடைய எலும்புக்கூடு ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது - அதுவும் நாங்கள் படுத்துக்கொள்ளும் அறையில். அது காற்றில் அசையும்போது எலும்புகளெல்லாம் கடகடவென்று ஓசைப்படும். அதை ஒவ்வொரு பாகமாகப் புரட்டிக் கையால் தொட்டு அததற்குரிய கடினமான பெயரை அறிந்துகொண்டதுமே பயமெல்லாம் எங்கோ பறந்தோடிவிட்டது.

வாசலருகிலுள்ள மணியில் ஏழு அடித்தது. நீலகமல் வாத்தியார் மணிக்கணக்குத் தவருமல்

'கருக்'காக வருவார். ஒரு நிமிஷங்கூடத் தாமதித்து வரமாட்டார். வற்றலான நோஞ்சல் உடம்பு. இருந்தாலும், தாம் கற்பிக்கும் பையனைப் போலவே ஒருநாள்கூட அவருக்கு நோய்நொடி வந்ததில்லை. புஸ்தகமும் பலகையும் எடுத்துக்கொண்டு மேஜையருகே போய் நிற்பேன். கறுப்புப் போர்டில் சாக்கினால் கணக்குகள் கொடுப்பார். எல்லாம் வங்காளியில் தான்: பாடீகணிதம், பீஜகணிதம், க்ஷேத்ர கணிதம் யாவும். இலக்கியத்தில் 'சீதையின் வனவாஸ'த்திலிருந்து ஒரே மூச்சாக 'மேகநாத வத காவியம்' வரைக்கும் சொல்லித்தருவார். நடுநடுவே இயற்கை விஞ்ஞான பாடங்கள். ஸீதாநாத தத்தர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து போவார். விஞ்ஞானத்தில் எங்களையெல்லாம் பரீக்ஷிப்பார். மற்றொருவர் ஹேரம்ப தத்வரத்னர்; இவர் நடுவில் ஒருதரம் வந்திருந்தார். புரியாதிருந்தாலும் 'முக்தபோத'த்தை ஒருவாறு உருப்போட்டு வைத்திருந்தேன். இப்படி, காலைமுதல் ஓயாமல் பாடங்களை மூளையில் ஏற்றும் உபத்திரவம் தாளாமல் மனம் விடுதலை அடையத் திணறிற்று. வலையில் பிளவு இருக்கும் வழியாக மீன்கள் வெளியேறுவது போல் கற்ற வித்தையெல்லாம் ஒவ்வொன்றாக நழுவ ஆரம்பித்தது. நீலகமல் வாத்தியார் தம்

மாணவனுடைய புத்திக்கூர்மையைப்பற்றி எவ்வளவு வியந்து கூறினாலும் நாலுபேர் கேட்டு அதிசயிக்கும்படி அது அப்படி ஒன்றும் பிரமாதமாக இல்லை.

வராந்தாவின் ஒருபுறம் தையற்காரக் கிழவன் ஒருவன் உட்கார்ந்திருப்பான். பூதக் கண்ணாடிபோல் ஒரு மூக்குக்கண்ணாடி அவன் கண்ணில். குனிந்து துணி தைத்துக்கொண்டிருப்பான். நடுநடுவே வேளை தவறாமல் 'நமாஸ்' பண்ணுவான். அவனைப் பார்க்கும்போதெல்லாம் 'நேயாமதபாடு சுகம்' என்று எண்ணிக் கொள்வேன். கணக்குப் போட்டுப் போட்டு மூளை குழம்பி யிருக்கும்போது மூஞ்சியைப் பலகையால் மறைத்தபடி கீழே நோக்குவேன். வாயிலண்டைக் காவல்காரச் சந்த்ரபான் மரச்சீப்பினால் தன் நீண்ட தாடியை வாரிக் காதின்கீழ் இருபுறமும் தூக்கி விட்டிருப்பான். அவன் பக்கத்திலேயே காப்புப் போட்டுக்கொண்டிருக்கும் ஒல்லியான பையன் ஒருவன் அவனுக்குப் புகையிலையைப் பொடி பண்ணித் தருவான். அங்கேதான் அதி காலையில் குதிரை வந்து கொள்ளுத் தின்னும். மரத்தொட்டியில் இருக்கும் மிகுந்தகொள்ளைக் கொத்தித் தின்னக் காக்கைகள் அங்கே வட்டமிடும். ஜானி என்ற நாய் திடீரென்று

விழித்துக்கொண்டு 'வள் வள்' என்று அவைகளைப் பார்த்துக் குரைக்க ஆரம்பித்துவிடும்.

வராந்தாவின் ஒரு மூலையில் பெருக்கிச் சேர்த்த குப்பையும் மண்ணும் கிடக்கும். அதில் சீதப்பழக்கொட்டையை நட்டு வைத்திருந்தேன். அது முளை விட்டதா இல்லையா என்று பார்க்க என் மனம் அடித்துக்கொள்ளும். நீலகமல் வாத்தியார் போனதுமே ஓடிப் போய் அதைப் பார்த்துவிட்டு வருவேன். அதற்கு ஜலம் வார்ப்பேன். ஆனால் என் ஆசை நிறைவேறவே இல்லை. குப்பையையும் மண்ணையும் சேர்த்த அதே துடைப்பம் அதையும் ஒருநாள் வாரி எடுத்துப் போட்டுவிட்டது.

வெயில் ஏற ஏற, முற்றத்தில் பாதி அளவுக்கு நிழல் வந்துவிடும். அப்போது மணி ஒன்பது அடிக்கும். கறுப்பாய், அஷ்டவக்ரமாக இருக்கும் வேலைக்காரக் கோவிந்தன் அழுக்குப் படிந்த மஞ்சள் நிறமான துவாலையைத் தோளில் போட்டுக்கொண்டு குளிப்பாட்ட என்னை அழைத்துச் செல்வான். ஒன்பதரை அடித்ததோ இல்லையோ, வழக்கம் போல் பருப்புச் சாதமும், தொட்டுக்கொள்ள மீன் கூட்டும் போடுவார்கள். சாப்பிடவே பிடிக்காது.

மணி பத்து அடிக்கும். பெரிய ரஸ்தாவில் போகும் மாங்காய் விற்பவன் குரல் கேட்டதும் எனக்கு இருப்புக் கொள்ளாது; பாத்திரக்காரன், 'டங் டங்' என்று சத்தம் செய்துகொண்டே தொலைவில் செல்வது என் காதில் விழும். சந்துக்குப் பக்கத்திலுள்ள விட்டு மாடியில் ஓர் அம்மாமி தலைமயிரை வெயிலில் உலர்த்திக்கொண்டு இருப்பாள். அவள் இரண்டு பெண்களும் அவர்கள்பாட்டுக்குச் சோழி விளையாடிக்கொண்டு இருப்பார்கள். அவர்களை அதட்டுவாரே இல்லை. பெண் பிள்ளைகளானதால் அவர்களுக்குப் பள்ளிக்கூடம் போகிற அவசியமே இல்லை, அந்த நாளில். பெண்ணாய்ப் பிறப்பதுதான் சுகம் என்று எனக்குத் தோன்றும். பத்து மணியிலிருந்து நாலு மணிவரைக்கும் நான் உழலும் அந்தமானுக்கு (பள்ளிக்கூடத்துக்கு) கிழக்குதிரை பூட்டிய பல்லக்கு - வண்டியில்தான் போவேன். நாலரை மணி ஆனதும் ஸ்கூலிலிருந்து திரும்புவேன். அதற்குள் 'டிரில்' வாத்தியார் வந்திருப்பார். மரப் 'பாரி'ல் சில நாழிகை உடம்பை வளைத்து உடைத்துக் கொள்வேன். அவர் போனாரோ இல்லையோ 'டிராயிங்' வாத்தியார் தோன்றுவார்.

இதற்குள் வெளிச்சம் மங்கி அஸ்தமித்து விடும். நகரத்தின் பல ரகமான ஓசை பூதாகாரமான எங்கள் வீட்டில் பயங்கரக் கனவு போலவே இருக்கும்.

படிக்கும் அறையில் விளக்கேற்றி விடுவார்கள். அகோர் வாத்தியார் வந்து விடுவார்; இங்கிலீஷ் பாடம் ஆரம்பித்துவிடும். கறுப்பு அட்டை போட்ட 'ரீடர்' மேஜையில் பிரித்துக் கிடக்கும். அட்டையெல்லாம் கலகலத்திருக்கும். ஏடுகள் சில கிழிந்திருக்கும்; சில இடங்களில் அழுக்குப் படிந்திருக்கும். அதன் மூலை முடுக்கெல்லாம் இங்கிலீஷில் கையெழுத்துப் பழகிய அடையாளங்கள்; எல்லாம் பெரிய எழுத்தில்தான். படிக்கும் போதே கண்ணை இழுக்கும். சட்டென்று விழித்துக் கொள்வேன். அப்படிப் படிப்பதைவிடப் படிக்காதிருப்பதே மேல். அரை குறைப் பாடத்திலேயே படுக்கப் போய்விடுவேன். வனவனாந்தரங்களைத் தாண்டி ராஜ குமாரன் போகும் கதைமட்டும் அந்தத் தூக்கக் கலக்கத்திலும் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருக்கும்.

8

இந்தக் காலத்தில் வீட்டு மாடியில் மனித சஞ்சாரமோ பூத பிசாசங்களின் நடமாட்டமோ கிடையாது. இதிலிருந்து அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் உள்ள வித்தியாசம் தெரிகிறது. முன்பே சொல்லி யிருக்கிறேன்: அதிகமாகப் படித்தவர்கள் இருக்கும் இடத்தில் வாசம் செய்ய முடியாமல் பிரம்மரக்ஷஸ் பிடித்தது ஓட்டம். அது நிம்மதியாக மாடி முகப்பில் கால் வைத்துக்கொண்டிருந்த கதையெல்லாம் போய்விட்டது. அந்த இடத்தில், சப்பின மாம்பழக் கொட்டையை வைத்துக் கொண்டு காக்கைகள் இரைச்சல் போட்டுச் சண்டையிடும். இப்போதோ பெட்டியில் அடைபட்டுக் கிடப்பதுபோல் நாலு சுவர்களுக்கு மத்தியில் வாசம் செய்கிறார்கள், மனிதர்கள்.

வீட்டுப் பின்கட்டில் கைப்பிடி சுவர் வைத்த ஒரு மாடி உண்டு; அது இப்போது என் கவனத்துக்கு வருகிறது. அந்திவேளையில் அம்மா தாழம்பாயை விரித்து அதன்மேல் வீற்றிருப்பாள். அவள் கூட்டாளிகள் அவளைச் சூழ்ந்துகொண்டு ஏதாவது கதை அளந்துகொண்டே இருப்பார்கள். அவற்றில்

உண்மை இருக்கும் என்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. காலங் கழிப்பதற்காகவே இப்படி வம்பளப்பார்கள். இக்காலத்தைப் போல் பொழுது போக்குவதற்கு விசித்திர மான சாதனங்கள் அந்த நாளில் இல்லை. நாட்கள் அந்தக் காலத்தில் நெருங்கிப் பின்னிக் கிடக்கவில்லை; பெரிய பெரிய கண்கள் உடைய வலையை ஒத்து இருந்தன. புருஷர் கூட்டத்தி லாகட்டும், பெண்கள் சேரும் இடத்திலாகட் டும் பேச்சோ, கதையோ, வேடிக்கையோ எல்லாம் மேல்வாரியாகவே இருக்கும். அம்மா வுக்கு வேண்டியவர்களுள் முக்கியமானவள் விரஜ ஆசார்யரின் தங்கைதான். அவளை எல்லோரும் 'ஆசார்யிணி' என்று கூப்பிடுவது வழக்கம். அவர்கள் கோஷ்டியில் அவளே அன்றாடம் ஊர் வதந்தியை உள்ளே பரப்பு பவள். அவள் கொண்டுவரும் வெட்டி விஷ யங்கள் எல்லாம் பல இடங்களிலிருந்து திரட் டினவைகளாகவாவது இருக்கும்; அல்லது அவளே திரித்தவைகளாகவும் இருக்கும். வீட் டில் கிரஹசாந்தி, ஆயுஷ்ஹோமம் என்கிற சாக்கில் செலவு சற்று அதிகமாகவே இருக்கும், இவர்கள் சபையில்தான் நான் கற்ற வித்தைகளைக் காட்டுவேன். "சூரியன் பூமியி லிருந்து ஒன்பது கோடி மைல் தூரத்தில்

இருக்கிறான்" என்று அவர்கள் ஆச்சரியப்படும்படி சொல்வேன். 'ரிஜு பாட புஸ்தக'த்து இரண்டாம் பாகத்தில் வரும் வால்மீகி ராமாயணச் சருக்கத்தை, 'அம், அஹ' உச்சரிப்புடன் மடமடவென்று ஒப்பிப்பேன். தன் பிள்ளை உச்சரிப்பதெல்லாம் சரியா இல்லையா என்று அம்மாவுக்கு எப்படித் தெரியும்? ஆனால் பையனுடைய புத்தி ஒன்பது கோடி மைல் கடந்து சூரியனை எட்டிப் பிடிப்பதைப் பார்த்து ஸ்தம்பித்துப் போவாள்.

"சுலோகங்களை இந்தமாதிரி சொல்வதற்கு ஒரு நாரத முனிவரால்தான் முடியும்" என்று அம்மா பூரித்துப் போவாள்.

வீட்டின் உட்புறம் இருக்கும் இந்த மெத்தை முழுதும் பெண்கள் ஆதிக்கியந்தான். உக்கிராண அறைக்கும் அதற்கும் நெருங்கின சம்பந்தம் உண்டு. நன்றாக வெயில் வரும் இடம்; வடவம், ஊறுகாய் உலர்த்துவதற்குச் சௌகரியமானது. ஈரத் தலைமயிரை விரித்துப் போட்டுக்கொண்டு, 'டிப் டிப்' என்று வடவம் பிழிந்துகொண்டிருப்பார்கள். வேலைக்காரிகள் அழுக்குப் புடைவைகளையெல்லாம் துவைத்து வெயிலில் காயப் போடுவார்கள். அந்தக் காலத்தில் வண்ணானுக்கு அவ்வளவாக வேலை இராது. மாங்காயைத்

துண்டு துண்டாக நறுக்கி வற்றல் போடு வார்கள். சின்னதும் பெரியதுமான கறுப்புக் கல்லால் ஆன அச்சுக்களில் மாம்பழ ரஸத்தைப் பிழிந்து வைப்பார்கள். பலாக்காய் ஊறுகாயைக் கடுகெண்ணெயில் போட்டு வெயிலில் வைப்பார்கள். தாழம்பூ வாசனை மணக்கும் பச்சை ஜாதிக்காயை ரொம்பப் பக்குவமாக மொரப்பா போடுவார்கள். அது நன்ருக இன்னும் ஞாபகம் இருப்பதற்கு ஒரு காரணம் உண்டு: ஸ்கூல் வாத்தியார், "உங்கள் அகத்து மொரப்பா ரொம்ப நன்ருயிருக்கும் என்று சொல்வார்கள்" என என்னிடம் ஜாடையாகத் தெரிவித்தபோது அர்த்தம் புரியாமல் போகவில்லை. கேள்விப்பட்டிருப்பதைப் பார்த்துத்தானே ஆகவேண்டும்! எங்கள் வீட்டுக் கெளரவத்தைக் காப்பதற்காக நடு நடுவே மாடிமேல் ஏறி இரண்டொரு ஜாதிக்காய் மொராப்பாவை - என்னவென்று சொல்வது? - களவாடினேன் என்பதற்குப் பதிலாகக் கவர்ந்தேன் என்று சொல்வதுதான் அழகு. பெரிய பெரிய ராஜாக்கள்கூடச் சிற்சில சந்தர்ப்பங்களில் இந்த முறையைக் கையாளவேண்டி யிருக்கிறது. திருட்டுக் குற்றம் என்றுகொண்டால் அவமானமல்லவா? இந்தக் காலமாஞல் ஜெயிலுக்குப் போக

வேண்டும்; முன் காலமானால் கழுவில் ஏற வேண்டும். குளிர்காலத்து மந்தமான வெயி லில் மாடியில் உட்கார்ந்து அரட்டை அடித் துக்கொண்டே வடவத்தைக் காக்கைகள் தூக்கிக்கொண்டு போகாமல் பார்த்துக் கொள்வது பெண்களுடைய வேலை. வீட்டில் இருக்கும் மைத்துனன் நான் ஒருவன்தான். மன்னி உலர்த்தியிருக்கும் மாம்பழச் சாற்றுக்கு நான்தான் காவல். அதோடு அவளுடைய காரியங்களுக்கு ஒத்தாசையாக இருப்பேன். அவளுக்கு, 'வங்காதிப பரணி'யைப் படித்துக் காட்டுவேன். எப்போதாவது பாக்கு வெட்டியைக் கொடுத்து என்னைப் பாக்கு அரியச் சொல்வாள். மிகவும் சன்ன மாக வெட்டுவேன். இந்த ஒரு விஷயத்தில் தான் கெட்டிக்காரன், மற்ற எதிலும் சாமர்த் தியம் போதாது என்பது அவள் அபிப் பிராயம்.

கண்ணுக்கு நான் அழகாக இல்லை, ஏனோ இப்படிப் படைத்தான் பிரம்மா என்று ஏதாவது ஒச்சம் சொல்லிக்கொண்டே இருப் பாள். ஆனால், என்னைப்போல யாருமே பாக்குச் சீவமாட்டார்கள் என்று தூக்கிவைத் துப் பேசுவாள். எனக்குக் குஷால் பிறந்து விடும். மடமடவென்று பாக்கைச் சீவிக்

குவித்துவிடுவேன். தூண்டி வேலை வாங்கு வதற்கு ஆள் இராத குறையினாலேயே மெல் லியதாகப் பாக்கை அரிந்த கை அப்புறம் நாசூக்கான காரியங்களில் இறங்கிவிட்டது.

மொட்டை மாடியில் உலர்த்துவது போன்ற பெண்கள் காரியத்தில் நாட்டுப்புற மணம் இருந்தது. இதெல்லாம் வழக்கமா யிருந்த காலத்தில் நெல்லுக் குற்றும் கொட்ட ணம் இருந்தது. வீட்டில், கொழுக்கட்டை பிடிப்பார்கள். சாயங்கால வேளைகளில் பணிப் பெண்கள் துடையில் திரி திரித்துக்கொண் டிருப்பார்கள். வீட்டில் புதுக் குழந்தை பிறந்தால் அதற்கு 'ஒத்துக் காப்பு' இடும் தினத்தில் அக்கம்பக்கத்து வீட்டாரை அழைப்பார்கள். அந்தக் காலத்தில் ராஜா மந்திரிக் கதைகளெல்லாம் வீட்டிலுள்ள பெரிய பெண்களே சொல்வார்கள். இந்தக் காலத்திலோ பிள்ளைகள் தாங்களே, அச்சடித்த புஸ்தகங்களிலிருந்து தெரிந்துகொள்கிறார்கள். இப்போதெல்லாம், ஊறுகாய், சட்னி யாவும் கடையிலிருந்து அரக்கு முத்திரை வைத்த புட்டிகளிலேயே வாங்கிவருகிறார்கள்.

சண்டிமண்டபம்* ஒன்று உண்டு. அது வும் நாட்டுப்புறத் தோற்றத்தையே தரும்.

* ஊர்ச்சாவடி போன்றது.

வாத்தியார் நடத்தும் பாடசாலையும் அங்கே தான். வீட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் அயல் அகத்துப் பிள்ளைகளும் அங்கே முதல் முதல் எழுத்தாணி, ஓலைச்சுவடியுடன் வந்து கற்கத் தொடங்குவார்கள். 'அன்ன ஆவன்ன' என்று எனக்கும் அங்கேதான் அக்ஷராப்யாஸம் ஆரம்பமாயிற்று. ஆனல் சூரியனை விட்டுத் தொலைவில் சென்ற ஒரு கிரகம் தூரதிருஷ்டிக் கண்ணாடிக்குக்கூடத் தென்படாமல் இருப்பது போல, ஒரே ஒரு பையனைமட்டும் வர வர அந்தப் பள்ளிக்கூடத்தில் காண்பது அரிதாகிவிட்டது.

நான் முதல் முதலாகப் படித்த பாட புஸ்தகத்தைப்பற்றி நினைத்துக்கொள்ளும் போது, 'காளைமுனிவர் பாடசாலையில் நடந்த அமர்க்களம்'தான் முன்னல் வந்து நிற்கிறது. ஹிரண்யன் வயிற்றை நரசிம்மாவதாரம் கிழிப்பதுபோல் பென்ஸிலால் வரைந்த படம் ஒன்றை அந்தப் புஸ்தகத்தில் பார்த்திருக்கிறேன். சாணக்கியனுடைய சுலோகம் சில என் கவனத்துக்கு வருகின்றன.

என் வாழ்க்கையில், எங்கள் வீட்டின் வெளிப்புறமாகவுள்ள மாடியே விடுமுறை கழிப்பதற்கு ஏற்ற இடமாய் இருந்தது. சிறு வயதிலிருந்து பெரியவனாகும்வரை, பலவித

நிலைமைகளில் அந்த மாடியில் தனிமையில் காலம் போக்கியிருக்கிறேன். என் தகப்பனர், வீட்டில் தங்கும்போதெல்லாம் மூன்றும் மாடியில் இருந்த அறையே அவருக்கு உறைவிடம். உச்சி அறைமறைவில் நின்றவண்ணம் எத்தனையோ நாட்கள் நான் பார்த்திருக்கிறேன்: சூரியோதயமே ஆகி இராது. அவர் வெண்ணிறக் கற்சிலைபோல், விசாலமான அந்தத் திறந்த மாடியில் உட்கார்ந்து கொண்டு தியானத்தில் அமர்ந்திருப்பார். கைகள் இரண்டும் மடிமேல் சேர்ந்திருக்கும். நடுநடுவே அவர் திடீரெனக் கிளம்பி மலைவாசம் செய்யப் போய்விடுவார். திரும்பிவரப் பல நாட்கள் செல்லும். அப்போது அந்த மாடியில் செல்வது எனக்கு ஏழு கடலையும் தாண்டினாற் போன்ற ஓர் ஆனந்தத்தை அளிக்கும். நான் வெகு நாள் வராந்தாவில் உட்கார்ந்து கொண்டு கிராதி வழியாகக் கீழே வீதியில் போவோர் வருவோரைப் பார்ப்பது வழக்கம். ஆனல் அந்த மாடியில் ஏறிவிட்டால் கீழே காணும் வண்டி, வீடுகள் யாவும் எறும்பு அளவுக்கு ஆகிவிடும். கல்கத்தா நகரின் தலைமேலே கால்வைத்து நடந்து சென்று, வானத்து நீலமும் பூமியின் பசுமையும் கூடும் இடத்தைத் தொடுவது போன்ற ஒரு பிரமை ஏற்படும்.

பல மாதிரியான வீடுகளின் உயரமும் குட்டையுமான மாடிகள் கண்ணில் படும். இவற்றிற்கு இடையே எங்கேயாவது ஓர் இடத்தில் பரட்டைத் தலையுடைய மரம் தென்படும். நான் ஒளிந்துகொண்டு நடுப்பகலில் அங்கே போய்ப் பார்ப்பது வழக்கம். இந்த மத்தியான வேளையே என் மனசுக்கு ஓர் இனிமையைத் தந்து என்னை மயக்கியது. நள்ளிரவு போல் தோன்றும் சந்தடியற்ற வேளை. அதில் வாலிப சந்நியாசி ஒருவன் உலகத்தைத் துறந்து செல்லுவது போன்ற ஒரு பிரமை. இலைக்கதவு மூலமாகக் கையை உள்ளே விட்டு மாடி அறையின் தாழ்ப்பாளைத் திறந்து விடுவேன். வாயிற்படிக்கு நேர் எதிரே ஸோபா ஒன்று உண்டு. அங்கேதான் தன்னந் தனியே உட்கார்ந்திருப்பேன். என்னைத் தேடி அலையும் வேலைக்காரர்களெல்லாம் வயிறு புடைக்க உண்டுவிட்டு எங்கேயாவது ஒரு மூலையில் உறங்கிக்கொண்டிருப்பார்கள். வெயிலோ பட்டை உரியக் காயும். ஆகாயத்திலே உயரத்தில் பறக்கும் பருந்துகளின் குரல் என் செவியில் விழும். எதிரேயுள்ள சந்து வழியாக வளையற்காரன் கூவிக் கொண்டே செல்வான். அம்மாதிரி நிச்சப்தமான பகற்பொழுது இனிமேல் வருமா?

அந்த வளையற்காரன்தான் இனி வரப் போகிறானா? தலையணைமேல் கூந்தலை விரித்துப் படுத்திருக்கும் வீட்டு நாட்டுப் பெண்களின் காதுக்கு அவன் குரல் கேட்டுவிடும். வேலைக்காரி அவனை அழைத்து வருவாள். அந்தக் கிழ வளையற்காரன் அவர்கள் மெல்லிய கையைத் தொட்டு அவரவர் விருப்பத்துக்கு ஏற்றதைப் போடுவான். அந்தக் காலத்தில் நாட்டுப்பெண்களாயிருந்தவர்கள் இந்தக் காலத்தில் இன்னும் நாட்டுப்பெண்களாகவில்லை; இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வளையற்காரன் ஒரு வேளை இன்று அதே சந்தில் ரிக்ஷா இழுப்பவனாகவும் இருக்கக்கூடும். அந்த மூன்றும் மாடிமட்டும் எனக்கே சொந்தமான எல்லையற்ற பாலை வெளியாக இருந்தது. நாற்புறமும் ஆகாயம் வெறிச்சென்று இருந்தது. உஷ்ணக்காற்று, தூசைக் கிளப்பிக்கொண்டு 'உய்' என்று வீசியது. வானத்தின் நீல வர்ணம் வெளுத்துவந்தது.

பாலை வனம்போன்ற அந்தத் திறந்த மாடியில் பசுமையான திட்டு ஒன்று தென்பட்டது. இந்தக் காலத்தில் மேல்மாடிக்குக் குழாய் ஜலம் எட்டுவது அபூர்வமாயிருக்கிறது. அப்போதோ மூன்றும் மாடியிலுள்ள

குழாயைத் திறக்கவேண்டியதுதான்; ஜலம் சோ என்று கொட்டும். யாருக்கும் தெரியாமல் நிம்மதியாக ஸ்நானம் பண்ணச் சௌகரியமான இடம். வங்காள தேசத்து இளம் லிவிங்ஸ்டன் கண்டுபிடித்த அற்புதம் அல்லவா இது! குழாயை நன்றாகத் திறந்துவிடுவேன். ஜலம் தம்பஸ்தலமாய் என் உடம்பெல்லாம் வழிந்து ஓடும். ஸோபாமேல் போட்டிருக்கும் துவாலையை எடுத்துத் துடைத்துக்கொண்டு பழையபடியே என் இடத்தில் போய் அமர்ந்து விடுவேன்.

பார்த்துக்கொண் டிருக்கையிலேயே விடுமுறை நாளும் முடிவுக்கு வந்துவிட்டது. கீழே மணி நாலு அடித்தது. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நேரம் நிரானந்தமாய் இருந்தது. வரப்போகும் திங்கட்கிழமை, அதை விழுங்க வரும் கிரகணம்போல் இருந்தது. இதற்குள், கீழே காவலை மீறிச் சென்ற பையனைத் தேடப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அப்பொழுது சிற்றுண்டி வேளை. விரஜேசுவரன் எங்களுக்குச் சற்று ஓய்வு கொடுத்த நாளில் ஒரு பாகம். பக்ஷணவகைகள் கடைக்குப் போய் வாங்கிவருவது அவன் வேலை. அந்தக் காலத்தில் கடைக்காரர்கள் நெய்யை நூற்றுக்கு முப்பது நாற்பது ரூபாய் லாபம்

வைத்து விற்பதில்லை. மணத்தில் ஆகட்டும், சுவையில் ஆகட்டும் அந்தக் காலத்துத் தின் பண்டங்கள் இக்காலத்தைப்போல் மோசமாக இருக்கவில்லை. கசுரி, ஸிங்காடா, உருளைக் கிழங்கு மசாலா அகப்படவேண்டியதுதான்; உள்ளே தள்ள அதிக நேரம் ஆகாது. ஆனால் விரஜேசுவரன் ஏற்கனவே கோணி இருக்கும் தன் கழுத்தைப் பின்னும் கோணிக் கொண்டு, “இன்றைக்கு என்ன வாங்கி வந்திருக்கிறேன்; வந்து பாருங்கள்” என்று பொட்டலத்தை அவிழ்த்தால் அதில் என்ன இருக்கும் தெரியுமா? வறுத்த வேர்க்கடலை தான். அது எனக்குப் பிடிக்காது என்று நான் சொல்லவில்லை. அவனுக்கு அதன்மேல் ஆசை; அதனால்தான் வாங்கிக்கொண்டு வந்துவிட்டான். அவனை எதிர்த்து, ‘உம்’ என்றுகூடச் சொன்னதில்லை. ஒரு சமயம் பனையோலையில் அவன் எள்ளுருண்டை எடுத்து வந்தபோது கூட நான் வாயைத் திறக்கவே இல்லை.

பகல் ஒளியும் மங்கிவிடும். மனசில் தென்பு இராமல் ஒருதரம் மாடியெல்லாம் சுற்றிவருவேன். கீழே நோக்கும்போது குட்டையில் மேய்ந்துகொண்டிருந்த வாத்துக்கள் எல்லாங் கூடப் போய்விட்டிருக்கும். குளத்துத் துறையில் மனிதர்கள் வருவதும் போவதுமாய்

இருப்பார்கள். குளத்தின் பாதி அளவுக்குமேல் ஆல மரத்து நிழல் படிந்திருக்கும். ரஸ்தாவி லிருந்து கோச்சு வண்டி ஓட்டுபவன் குரல் கேட்கும்.

9

இப்படி ஒரே மாதிரியாக நாட்கள் சென்றுகொண் டிருந்தன. பகலில் கொஞ்சம் விளையாடலா மென்றால் பாழும் ஸ்கூல் வந்து அதைக் கெடுத்துவிடும். போதாக் குறைக்குக் காலை யிலும் மாலையிலும் வீட்டில் வேறு படிப்பு! வீட்டுக்குத் திரும்பியவுடன் வகுப்பில் பெஞ் சும் மேஜையும் சதா கண்ணில் வந்து முட்டு வதுபோல் தோன்றும். நித்தியம் அதன் மூஞ்சியில்தான் விழிக்கவேண்டும்.

சாயங்காலந்தான் வீடு திரும்புவோம். அடுத்தநாள் பள்ளிக்கூடத்தில் பாடம் ஒப்பிக்க வேண்டுமென்பதற்கு அறிகுறியாக முந்திய நாள் இரவே அறையில் விளக்கு ஏற்றி வைத்து விடுவார்கள். சிற்சில தினங்களில் எங்கள் வீட்டுப் பெரிய முற்றத்தில் கரடிக் கூத்தாடி வந்து வேடிக்கைகள் காட்டுவான். என்றா வது ஒரு நாள் பாம்பாட்டி வருவான். ஜால வித்தைக்காரன் எப்போதாவது ஒரு சமயம் வந்து புதுப்புது அற்புதங்களைக் காட்டுவான்.

இப்போது எங்கள் சித்பூர் ரஸ்தாவில் அவர்கள் அடிக்கும் உடுக்கைச் சப்தங்கூடக் கேட்பதில்லை. சினிமா யுகம் வந்துவிட்டதால் தொலேவிலிருந்தே அதற்கு ஒரு கும்பிடு போட்டுத் தேசாந்தரம் போய்விட்டார்கள். உலர்ந்த சருகோடு சருகாக ஒருவித வெட்டுக் கிளி நிறங்கலந்து விடுவதுபோல் என் மனமும் சாரமற்ற அந்த நாட்களில் தென்பு இழந்து இருந்தது.

அந்தக் காலத்தில் இரண்டொரு விளையாட்டுக்களே பிரபலமாக இருந்தன. கோலி ஆட்டம், கிரிக்கெட்டுக்கு ஏதோ ஒரு விதத்தில் ஒற்றுமையுள்ள 'கிட்டிப் புள்ளு' ஆடுவது, பம்பரம் சுற்றுவது, காற்றாடி விடுவது இவைதாம் பட்டணத்துப் பிள்ளைகளுக்கு ஸ்வாரஸ்யத்தை அளிப்பவை. மைதானங்களில் 'புட்பால்' விளையாடுவது, உயரக் குதிப்பது போன்ற ஆட்டங்கள் இன்னும் சமுத்திரத்துக்கு அப்பாலே இருந்தன. இப்படி ஒரேவிதமாகச் சுவையற்றுச் செல்லும் தினங்களுக்கு இடையே நானும் பொழுதைப் போக்கி வந்தேன்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் எங்கள் வீட்டில் புன்னுகவராளியில் மேளம் வாசித்தது. புது நாட்டுப்பெண் ஒருத்தி வீட்டுக்கு

வந்தாள். அவள் மாநிறமாய் இருந்தாள். தளிர் போன்ற கைகளில் மெல்லிய பொன் வளையல் அணிந்திருந்தாள். அவளைப் பார்த்ததும் ஏதோ அதிசயமான நாட்டிலிருந்து வந்த புது மனுஷியாகத் தோன்றியது, எனக்கு. அவ ளண்டையே சுற்றிக் கொண்டிருப்பேன். அவளை அண்டுவதற்கு எனக்குத் தைரியம் இல்லை. அவளைத்தான் எல்லாரும் ஆதர வாய்க் கவனிக்கிறார்கள்; நானோ பையன்; என்னைச் சட்டை பண்ணுவார்களா?

அப்போது எங்கள் வீடு இரண்டு பாக மாக இருந்தது; முன்கட்டில் புருஷர்களும், பின்கட்டில் பெண்களும். நவாபு காலத்து ரீதி அந்த நாளிலும் இருந்துவந்தது. கவனம் வருகிறது: மாடிமேல் அக்கா புதிதாக வந்த அந்த நாட்டுப்பெண்ணோடு உலாவிக் கொண்டே ஏதோ அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருப்பாள். நான் அவர்கள் கிட்டப் போகும்போதெல்லாம் அவள் அதட்டுவாள். சிறுவர்கள் இன்ன இடத்துக்குமேல் வரக் கூடாது என்று திட்டம் பண்ணியிருந்தார்கள். மறுபடியும் மூஞ்சி தொங்கிப்போய்த் திரும்பி விடுவேன், பூஞ்சைக் காளான் பிடித்தது போன்ற அந்தப் பழைய நாட்களில் அழுந் திக் கிடக்க.

திடீரெனத் தொலைவிலுள்ள மலைகளில் பெய்த மழைநீர் வெள்ளம் போல் புரண்டு செல்வதால் கரைகள் எப்போதாவது உடைத்துக்கொள்ளும். அதைப்போல் ஒரு தரம் நடந்தது. எங்கள் வீட்டில் அதிகாரம் செலுத்துபவள் மன்னிதான். பின்கட்டு மாடியில் உள்ளுக்குள் உள்ளாக இருக்கும் அறைதான் மன்னியின் இடம். அதற்கு எதிரே இருக்கும் மொட்டை மாடி முழுதும் அவளுக்கே சொந்தம். பொம்மைக் கல்யாணம் தடபுடலாக நடத்தி அங்கேதான் சாப்பாடு போடுவாள். சிறு பிள்ளைகளில் என்னைத்தான் முக்கியமாக அழைப்பாள். மன்னி நன்றாகச் சமையல் செய்வாள். நாலு பேருக்குச் சாதம் போடுவதென்றால் அவளுக்கு ரொம்ப இஷ்டம். அந்த ஆசையைத் தீர்த்துக்கொள்ள என்னை அழைப்பாள். பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிவந்ததுமே பிரஸாதங்கள் தயாராக இருக்கும், எனக்காக. 'சிங்டி' மீன்கூட்டும் மிளகாய்க் கிள்ளித் தாளித்துக் கொட்டின ஏட்டுத் தயிருஞ் சாதமும் என்றால் கேட்கவேண்டுமா? நடுநடுவே எப்போதாவது தன் பந்துக்களைப் பார்த்துவிட்டு வரப் போவாள். அறைக்கு வெளியே அவளுடைய செருப்பைக் காணமல் எனக்கு அவள் பேரில்

கோபம் வந்துவிடும். அவளது அறையிலிருந்து விலையுள்ள சாமான் ஏதாவதொன்றை மறைத்து வைத்துவிட்டு வந்து அவளோடு போர் தொடுக்கத் தயாராய் இருப்பேன். "நீ போய்விட்டால் உன் அறையை யார் காவல் காத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறாய்? நீ வைத்த ஆள்காரனா என்ன நான்?" என்பேன். அவளும் ரோஷங் கொண்டவள் போல் என்னைப் பார்த்து, "என் அறையைப் பார்த்துக்கொள்ள உன்னை யாரும் சொல்லவில்லையே. உன் பாட்டை நீ கவனித்துக் கொண்டால் போதும், அப்பா" என்பாள்.

இதைக் கேட்டால் இந்தக் காலத்துப் பெண்களெல்லாம் சிரிப்பார்கள். "அப்படி என்ன, எல்லார் வீட்டிலும் மைத்துனன் தானா எல்லாவற்றையும் கவனிக்கிறான்?" என்று அவர்கள் சொல்லலாம். வாஸ்தவந்தான். இந்தக் காலத்தில் சிறு வயதிலேயே எல்லோரும் பெரியவர்கள் ஆகிவிடுகிறார்கள். அந்தக் காலத்தில் பெரியவர் சிறியவர் எல்லோருமே சீக்கிரம் முதிர்ந்து போய்விடவில்லை.

நான் யதேச்சையாகத் திரிந்த அந்த மாடியில்தான் எனக்கு ஒரு புதிய அநுபவம் ஏற்பட்டது. மனிதனோடு மனிதனாக நெருங்கிப்

பழகும் சந்தர்ப்பம் வாய்த்தது. அதற்குக் காரணமாய் இருந்தவர் ஜ்யோதிஅண்ணுதான்.

10

நான் அரசு செலுத்திய அந்த மாடி வெளியில் புது விதத் தென்றல் வீசியது. நூதனமான பருவகாலம் தோன்றியது.

அப்போது என் பிதா ஜோடாஸாங்கோ விலிருந்த வீட்டில் வசிப்பதில்லை. ஜ்யோதி அண்ணு அந்த மூன்ரும் மாடி அறையில் இருந்துவந்தார். எனக்கும் அதன் ஒரு மூலை யில் இடம் கிடைத்தது.

அந்தப்புரத்தில் மூடியிருந்த படுதா விலகி யது. இந்தக் காலத்துக்கு இது விநோதமாய் இராது. ஆனுல் அப்போதோ எல்லோரும் திக் பிரமிக்கும்படி அவ்வளவு நூதனமாக இருந் தது, இந்தக் காரியம். அதற்கு ரொம்ப நாள் முன்னுல் நடந்த ஒருசமாசாரம்: அப்போது நான் மிகவும் சின்னக் குழந்தை. நடு அண்ணு (ஸத்யேந்த்ரநாத்) ஐ. ஸி. எஸ்., படித்து விட்டுச் சீமையிலிருந்து திரும்பிவந்த புதிது. பம்பாயில் அவர் உத்தியோகம் ஏற்றுக் கொள்ளப் புறப்படுகையில் பகிரங்கமாகவே தம் மனைவியைக் கூட அழைத்துச் சென்ருர். வீட்டைச் சேர்ந்த நாட்டுப்பெண் ஒருத்தி

குடும்பத்தோடு இராமல் வெளியே தன் புருஷ னுடன் போவதே அந்தக் காலத்தில் ஓர் அதிசயம். அதுவும் வெளியார் பார்க்கும்படி அவள் புறப்பட்டுப் போனுளென்ருல் கேட்பா னேன்? ஆகாயமே அற்றுக் கீழே விழுந்து விட்டதுபோல், அந்தக் காலத்து மனிதர்கள் திடுக்கிட்டுப் போனர்கள்.

வெளியே போவதற்கு ஏற்றபடி நாகரிக மாகப் புடைவை கட்டிக்கொள்ளத் தெரியாது அந்த நாளைப் பெண்களுக்கு. இந்தக் காலத் திலோ விதவிதமான மோஸ்தரில் சேலையும் ரவிக்கையும் அணிந்து கொள்கிருர்கள். எங்கள் வீட்டில் முதல் முதல் இந்த நாகரிகத் தைப் புகுத்தியவள் நடு மன்னியே.

சிறுமிகள் தலைமயிரை விரித்துவிட்டுக் 'கௌன்' போட்டுக்கொண்டிருக்க மாட்டார் கள். எங்கள் வீட்டிலும் அப்படித்தான். 'பேஷ்வாஜ்' என்னும் பாயிஜாமாவையே போட்டுக்கொண்டு இருப்பார்கள், வீட்டுச் சிறுமிகள். பெதூன் ஸ்கூல் திறந்த புதிது. என் பெரிய அக்காவுக்கு அப்போது அதிக வயதாகவில்லை. அவளே முதல் முதலில் அந் தப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து பின்னல் வந்த பெண்களுக்கு வழிகாட்டியாய் இருந்தாள். அவள் நல்ல சிவப்பு. இந்தத் தேசத்தில்

அந்தமாதிரி நிறத்தையே காண்பது அரிது. 'பேஷ்வாஜ்' அணிந்துகொண்டு பல்லக்கில் ஏறி அவள் பள்ளிக்கூடம் சென்றுகொண்டிருக்கும்போது, யாரோ வெள்ளைக்காரப் பெண்ணை அந்தமாதிரி வேஷம் போட்டுத் திருடிச் செல்கிறார்கள் என்று போலீஸார் பிடித்தார்களாம்.

முன்னேயே சொல்லியிருக்கிறேன்: அந்தக் காலத்தில் பெரியவர்களும் சின்னவர்களும் சேர்ந்து பழகுவது என்பதே கிடையாது. ஆனால் இந்தக் கட்டுக்காய்தாவை யெல்லாம் மீறி ஜ்யோதி அண்ணா புதுமை நோக்குடன் எங்களிடையே தோன்றினார். அவரைவிட நான் பதினொரு வருஷம் சிறியவன். எனக்கும் அவருக்கும் அவ்வளவு வித்தியாசம் இருந்தும் நான் ஒரு மனிதனாக அவருக்குத் தோன்றியது தான் மிகவும் ஆச்சரியம்! அதைவிட அதிசயமானது, நான் அவரோடு சரிசமமாகப் பேசினாலும், அவர் அதிகப்பிரசங்கி என்று அடக்காமல் இருந்ததே. அதனால் எனக்கு எதைப் பற்றிப் பேசவும் துணிச்சல் பிறந்துவிடும். எனக்கு ஈடான சிறுவர் எதிரே பெரிய விஷயங்களைப்பற்றிப் பேசுவேன். அவர்களெல்லாம் வாய் திறந்தபடியே கேட்பார்கள். என்னைப் பதிலுக்குக் கேள்வி கேட்கவேண்டு

மென்று எவனுக்குமே தோன்றாது. பெரியவர்கள் பேசுவதைக் கம் என்று கேட்டுக்கொண்டிருக்கும் பாட்டன் காலத்துப் பையன்களாகவே இருந்தார்கள் அவர்கள். எதையும் ஆராய்ந்து தெரிந்துகொள்வது இந்தப் புதுமைக் காலத்துப் பிள்ளைகளின் இயல்பு. ஆனால் பாட்டன் காலத்துப் பிள்ளைகளோ எதையும் கண்ணை மூடிக்கொண்டு நம்புவார்கள்.

மாடி அறைக்குப் பியானா வாத்தியம் வந்து சேர்ந்தது. பௌ பாஜாரிலிருந்து வார்னிஷ் பூசிய இந்தக் காலத்து மரச் சாமான்கள் ஒவ்வொன்றாக வந்தன. எனக்கு ஸந்தோஷம் தலைகால் தெரியவில்லை. வெளிப் பகட்டான அந்த ஸாமான்களின் விலை என்னவோ சரசந்தான்; இதுவரை அந்தமாதிரி பார்த்திராத என் கண்களுக்கு அவை பெரிய ஐசுவரியம் பொங்கி வந்ததுபோல் தோன்றின.

அப்புறம் கிளம்பிவிட்டது என்னுள் அடங்கியிருந்த கான வெள்ளம். ஜ்யோதி அண்ணா பியானாவின்மேல் விரல்களை ஓட்டிப் புதுப்புது விதமான ஸ்வர வரிசைகளைச் சிருஷ்டித்து ஜமாய்த்துக்கொண்டிருப்பார். என்னையும் பக்கத்தில் வைத்துக்கொண்டிருப்பார்.

பெருகி ஓடும் அந்த ஸ்வரங்களுக்கு ஏற்றபடி பதங்களை அமைப்பதே என் வேலை.

சாயங்கால வேளையில் திறந்த மாடியில் திண்டும் பாயும் கொண்டு போடுவார்கள். ஒரு வெள்ளித் தட்டில் மல்லிகைப் பூ மாலை ஈரத் துணியில் சுற்றியிருக்கும். கண்ணாடிக் கோப்பையில் ஐஸ் ஜலம் வைத்திருக்கும். மற்றொரு சிறிய தட்டில் வாசனைத் தாம்பூலம்.

மன்னி குளித்துவிட்டுக் கூந்தலை வாரி முடிந்துகொண்டு அங்கே உட்கார வருவாள். உடம்பில் மெல்லிய அங்கவஸ்திரம் ஒன்றைப் பறக்க விட்டுக்கொண்டு ஜ்யோதி அண்ணா வருவார், பின்னாலேயே. பிடிலில் சுருதி கூட்டிக்கொண்டு வில்லைப் போடுவார். நான் கீச்சுக் குரலில் பாட ஆரம்பிப்பேன். பகவான் எனக்கு அபஸ்வரம் இல்லாத சாரீரம் கொடுத்திருந்தாரே! சூரியன் மூழ்கும் அந்த அஸ்தமன வேளையில் மாடிமேல் நான் பொழியும் கான வர்ஷம் பெருகி ஓடும். கடலில் பிறந்த தென்றல் விசுவிசு என்று வீசிக்கொண்டு இருக்கும். ஆகாயம் முழுதும் முத்து இறைத்ததுபோல் நக்ஷத்திரங்கள் ஒளிரும்.

மன்னி அந்தத் திறந்த மாடியை ஓர் அழகிய உத்தியானவனமாகவே மாற்றிவிட்டாள். சுவர்க் கட்டைகள்மேல் வரிசையாகப் 'பாம்'

(Palm) செடிகள். பக்கங்களில் நித்தியமல்லி, கந்தராஜம், நிலஸம்பங்கி, செவ்வலரி, கொடி ஸம்பங்கி எல்லாம் இருக்கும். மெத்தை பளுத் தாங்காமல் விழுந்துவிடுமே என்று அவள் எண்ணவே இல்லை. இப்படிச் செய்வதில் அவளுக்கு ஒரு வேடிக்கை.

அக்ஷய் சௌதுரி என்பவர் அடிக்கடி அங்கே வந்து போவது வழக்கம். தம் சரீரம் நன்றாயில்லை என்று அவருக்கே தெரியும்; எங்களுக்கெல்லாம் இது தெரிந்த விஷயந்தான். இருந்தும், அவர் பாடாமல் இருக்க மாட்டார். அவருக்கு மிகவும் பிடித்த ராகம் பெஹாக்தான். கண்ணை மூடிக்கொண்டு பாடிக்கொண்டே அவர் மூற்சியைப் பண்ணிக்கொள்ளும் கோரத்தை வர்ணிக்க இயலாது. ஓசை எழுப்பக்கூடிய சாமான் ஏதாவது கையில் சிக்கிவிட்டால், உதட்டைப் பல்லால் கடித்துக்கொண்டே அதைத் தபளா என்று எண்ணிக்கொண்டு அதில் 'பமர் பமர்' என்று தாளம் போட்டுத் தீர்த்துவிடுவார். கனத்த புஸ்தகங்களாய் இருந்தால் இதற்கு இன்னும் அநுகூலமாய் இருக்கும். அவர் தம்மையே மறந்திருப்பவர். அவர் வரைக்கும் விடுமுறை நாளும் உத்தியோகம் பார்க்கும் நாளும் ஒன்றே.

அந்தி வேளையில் கூடும் இந்த ஸபை கலைந்ததும் நான் இரவெல்லாம் தூக்கம் வராமல் விழித்துக்கொண்டுதான் இருப்பேன். எல்லோரும் தூங்கப் போன பிற்பாடுகூட நான் பேயைப்போல் வீடெங்கும் சுற்றித் திரிவேன். உலகமே துயின்று கொண்டிருக்கும். நிலவு எரிக்கும் திறந்த மாடியில் பெரிய மரங்களின் நிழல்கள் கோலமிட்டதுபோல் அசையும் - கனவுலகில் காண்பதுபோல். மாடிக்கு அப்பாலுள்ள சிம்சிப விருக்ஷத்தின் தலை காற்றில் அலைபாயும். அதன் இலைகள் சலசலக்கும். எல்லாவற்றையும்விட எதிரேயுள்ள வீட்டின் மாடிமேலுள்ள அந்த வளைந்த மாடிக் குச்சு உள், எதனாலோ என் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்கும். அது எதையோ சுட்டிக் காட்டுவதுபோல் ஒரு பிரமையை உண்டுபண்ணும்.

ராத்திரி மணி இரண்டு ஆகிவிடும். எதிரிலுள்ள, பெரிய தெருவிலிருந்து 'ஹரி போல்' 'ஹரி போல்'* என்ற சப்தம் கேட்கும்; அது கொஞ்சங் கொஞ்சமாகத் தொலைவில் மங்கி மறையும்.

---

* பிணத்தைத் தூக்கிச் செல்வோர் பகவந் நாமம் சொல்வது

11

ஒவ்வொரு வீட்டிலும் கிளிகளை அடைத்து வளர்ப்பதில் ஒரு மவுசு இருந்துவந்தது. அக் காலத்தில் அண்டை வீடுகளில் எங்கேயாவது கூட்டில் அடைபட்டிருக்கும் குயில் ஒன்று கூவினால் என் மனசு என்னவோபோல் ஆகிவிடும். மன்னி சீனதேசத்துக் கரிக்குருவி ஒன்றை வளர்த்து வந்தாள். கூட்டின்மேல் துணிபோட்டு மூடியிருப்பாள். அதனுள்ளிருந்து திங்குரலோசை ஊற்றுப்போல் கிளம்பிக்கொண்டே இருக்கும். இன்னும் எத்தனையோவிதக் கிளிகளும் பக்ஷிகளும் மேலண்டை வராந்தாவில் தொங்கும் கம்பிக் கூடுகளில் கிடக்கும். அன்றாடம் ஓர் ஆள் வந்து அவைகளுக்கெல்லாம் புழு பூச்சி உணவு போட்டுவிட்டுப் போவான். அவன் பையில் வெட்டுக்கிளிபோன்ற பூச்சிகள் நிறைய இருக்கும். தானியம் தின்னும் பறவைகளுக்குச் சோளம் முதலியவற்றைத் தூவுவான்.

ஜ்யோதி அண்ணா என் கேள்விகளுக்கெல்லாம் தகுந்த பதில் தந்துகொண்டேயிருப்பார். ஆனால் பெண்டுகளிடத்தில் இதை எதிர்பார்க்க முடியாது. ஒரு சமயம் மன்னிக்குக் கூட்டில் அணிற்பிள்ளை வைத்து வளர்க்க

வேண்டுமென்ற ஆசை கிளம்பிவிட்டது. "இந்தக் காரியம் அடுக்காது" என்று நான் சொன்னதற்கு, அவள், "உன்னை யாரும் பெருதனம் பண்ண வரச் சொல்லவில்லை!" என்றாள். நான் கேட்டதற்கு இப்படியா பதில் சொல்வது? 'இருக்கட்டும்; இவளோடு என்ன?' என்று கூட்டிலிருந்த இரண்டு அணிற் பிள்ளைகளையும் ஓசைப்படாது வெளியே விட்டுவிட்டேன். அதற்காக இரண்டொரு பேச்சும் கேட்டுக்கொண்டேன். பதில் மட்டும் சொல்லவில்லை.

எங்கள் இரண்டு பேருக்கும் எப்போது பார்த்தாலும் ஏதாவது சண்டை இருந்து கொண்டே இருக்கும். அதைப்பற்றிச் சொல்லுகிறேன்.

உமேச் என்பவன் கைகாரப் பேர்வழி. வெள்ளைக்காரத் தையற் கடையிலிருந்து, அங்கே வெட்டியும் கத்தரித்தும் மிகுந்த பட்டுத் துண்டுகளைக் கொள்ளை மலிவுக்கு வாங்கிக் கொண்டுவந்து 'லேஸ்' வைத்துத் தைத்துப் பெண்களுக்காக ரவிக்கையும், சொக்காயும் எடுத்து வருவான். மூட்டையை ரொம்ப ஸாவதானமாக அவிழ்த்துப் பெண்கள் பார்க்கும்படி உருப்படிகளைப் பரப்பிவிடுவான். "இது தான், அம்மா, இந்தக் காலத்தில் எல்லோரும்

அணியும் 'பாஷன்' ரவிக்கை" என்பான். அந்த மாய வார்த்தையைக் கேட்டுப் பெண்களெல்லாம் ஏமாந்து போவார்கள். இவர்கள் இப்படி ஏமாறுவதைப் பார்த்து எனக்கு ஆத்திரமாக வரும். நடுநடுவே, "இந்தத் திராபைத் துணியை ஏனோ வாங்குகிறீர்கள்?" என்று கத்துவேன். "உன்னை யாரும் இங்கே கூப்பிடவில்லை" என்று அடக்கிவிடுவார்கள். நான்மட்டும் மன்னியிடம், "இதைவிட எவ்வளவோ நேர்த்தியான கறுப்புக்கரை போட்ட புடைவையும் டாக்காச் சேலையும் இருக்கின்றனவே" என்பேன். 'இந்தக் காலத்தில் ஜார்ஜெட் சுற்றிக்கொண்டு வர்ணப் பொம்மை போல் மினுக்கும் மதனிமார்களைப் பார்த்து மைத்துனன்மார் எப்படித்தான் வாய் மூடிக்கொண்டு இருக்கிறார்களோ?' என்று எண்ணிக் கொள்கிறேன். உமேச் தைத்துக் கொடுத்த புடைவையைக் கட்டிக்கொண்டிருந்த மன்னியே இவர்களை யெல்லாம்விட நன்றாய் இருப்பாள். அந்தக் காலத்தில் பெண்கள் தங்களை இவ்வளவு அழகு பண்ணிக் கொள்ள மாட்டார்கள்.

மன்னியிடம் தர்க்கமாடித் தோற்றுப் போவேன்; நான் கேட்பதற்குப் பதில் சொன்னால்தானே? சொக்கட்டானில் அவள்

ஜயித்துவிடுவாள். அந்த ஆட்டத்தில் அவளுக்கு நல்ல தேர்ச்சி உண்டு.

ஜ்யோதி அண்ணுவின் சமாசாரத்தை எடுக்கும்போது அவரைப்பற்றி உங்களுக்கு நன்ருகத் தெரியும்படி இரண்டொரு விஷயத்தைச் சொல்லவேண்டி யிருக்கிறது. அப்போதைக்குக் கொஞ்ச நாளைக்கு முன்னிருந்து அதைத் தொடங்கவேண்டும்.

ஜமீன் காரியமாக அவர் அடிக்கடி சிலாயிதஹ் என்னும் இடத்திற்குப் போகவேண்டிவரும். ஒரு சமயம் அந்த அலுவலாகப்போகும் போது என்னையும் கூட்டிச் சென்றிருந்தார். என்னை அழைத்துப்போவது வீண் தொல்லை தான் என்று வீட்டார் எண்ணியிருந்தார்கள். ஆனல் அவர்மட்டும் வீட்டிலேயே விழுந்து கிடக்கும் பையனை வெளியில் நாலு இடங்களுக்கு இட்டுச் செல்வது அவன் கல்வி வளர்ச்சிக்கு எவ்வளவோ அநுகூலமாக இருக்கும் என்று திடமாய் நம்பினர். பரந்த வானிலும் கட்டுக்கடங்காக் காற்றிலும் மூழ்கி அளையும் மனம் எனக்கு உண்டு என்பதை அவர் எவ்வாறே அறிந்திருந்தார். என் மூளைக்கு வேண்டிய உணவை நான் வெளியுலகிலிருந்தே உட்கொண்டேன். அப்புறம் சிறிது காலத்திற்கெல்லாம் வாழ்க்கையில் ஒரு படி

உயர்ந்து, இந்தச் சிலாயிதஹ்ஹில்தான் ஒரு மனிதன் ஆனேன்.

பழைய அவுரிக் கிடங்கு அப்போதும் அழியாமல் இருந்தது. பத்மா நதி சற்றுத் தொலைவிலேயே ஓடிக்கொண்டிருந்தது. அந்தப் பங்களா வீட்டின் கீழ்க்கட்டில்தான் ஜமீன் கச்சேரி; மாடியில் நாங்கள் தங்குவோம். மாடி அறைக்கு எதிரே விசாலமான நிலாமுற்றம். வெளியிலே தோட்டத்தில் ஓங்கி வளர்ந்த ஜாவுமரம் சில. அவை அவுரித் தோட்டம் வைத்து நடத்திய வெள்ளைக்காரன் காலத்திலேயே வைத்தவை. இப்போது அவன் விட்டுச்சென்ற அந்தப் பாழும் மாளிகை வெறிச்சென்று இருந்தது. யமதூதனைப்போல் அங்கே வாழ்ந்துவந்த அந்தக் காரியதரிசி எங்கே? கையும் தடியுமாகக் கச்சு அணிந்து திரிந்த கிங்கரர்கள் எங்கே போனார்களோ? நீண்ட மேஜை உடைய அந்தப் பெரிய போஜனசாலை எங்கே? குதிரையில் ஏறிச் சென்று வெள்ளைத்துரைகள் அங்கேதான் இரவெல்லாம் பகலாக எண்ணிக் கொண்டு வயிறுர உண்டுவிட்டுத் தேகம் தெரியாமல் பெண்களுடன் கூடி ஆடுவார்களாம். 'சாம்பெயின்' வெறி தலைக்கு ஏற ஏற அந்தப் பாவி மக்கள் தம்கீழ் வேலைசெய்யும் ஆட்களை

வதைத்தெடுப்பார்களாம். ஏழைகளின் கூக்குரல் மேலதிகாரிகளின் காதுகளுக்கு எட்டவிடாமல் அடக்கிவிடுவார்கள்; கோர்ட்டு வரைக்கும் அவர்கள் பணமும் செல்வாக்கும் பரவியிருந்தன. அந்தக் காலத்தில் நடந்த அட்டூழியம் இப்போது வெறுங் கதையாகிவிட்டிருக்கலாம். ஆனால் இதற்கு உண்மை அத்தாட்சியாக நீலிக்கிடங்குத் துரைகள் இருவருடைய கல்லறைகளை இன்றும் அங்கே காணலாம்; அன்று வைத்த அந்த நீண்ட ஜாவு மரங்கள் காற்றில் அசைந்தாடுகின்றன இப்போதும். அந்தக் காலத்தில் நீலிப் பயிர் செய்த குடியானவர்களின் பேரன் பேத்திமாருக்கு அப்பாழடைந்த மாளிகைத் தோட்டத்தருகே துரைமாருடைய பேய்கள் நடுநிசியில் எப்போதாவது தென்படுமாம்!

என் மனம் எப்போதும் தனிமையையே விரும்பிற்று. ஒரு சிறிய அறையே எனக்குப் போதுமானது. மாடி எவ்வளவு திறந்த வெளியாக இருக்கிறதோ அவ்வளவு பரந்ததாய் இருக்கும் என் கற்பனை உலகு. வெளியே புதிய இடத்தில் எனக்குக் கிடைத்த ஓய்வு, ஆழம் காண முடியாத குளத்து நீர்போல் தளும்பியது. ‘பவு-கதா-கஓ’* என்னும்

* ‘பெண்ணே, வார்த்தை பேசு’ என்பதுபோல் கூவும் பறவை

பறவை அதன்பாட்டிற்குக் கூவிக்கொண்டே இருக்கும். என் மனமோ தன் இஷ்டப்படி கற்பனை ஊசலில் ஆடிக்கொண்டே இருக்கும். கவிதைகள் புனைந்து என் நோட்டுப் புஸ்தகங்களை நிரப்ப ஆரம்பித்தேன். அவைகள் ஒவ்வொன்றாக நழுவித் தொலைந்ததுபோல் மாம்பூக்களும் மாசி மாதத்தில் குப்பென்று பூத்து உதிர்ந்துவிட்டன.

அந்தக் காலத்தில் ஒரு சிறுவனோ அல்லது சிறுமியோ இரண்டு வரி செய்யுள் எழுதுகிறார் என்று கேள்விப்பட்டால், "அது எப்படி முடியும்? ஒருகாலும் நடக்காது" என்றுதான் சொல்வார்கள்.

பத்திரிகை மூலமாக நான் கேள்விப்பட்ட பெண் கவிகள் இயற்றிய காவியங்கள் எவ்வளவோ புஸ்தகரூபமாக வெளியாகி யிருக்கின்றன. அந்தக் காலத்தில், அதிக ஜாக்கிரதையாக எழுத்து. சீர் கெடாமல் எவ்வளவு அழகாக எழுதினாலும் இரண்டோர் இடங்களில் பிசகிவிட்டால் அவர்கள் பெயர் உடனே அழிந்துவிடும். ஆனால் இந்தக் காலத்திலோ? அப்படி எழுதும் பெண் கவிகளுக்கும் குறைவில்லை; அவர்கள் பெயரும் முன்னணியில் நிற்கிறது.

பெண்களைக் காட்டிலும் ஆண்பிள்ளைகளுக்குத் துணிச்சல் மிகவும் குறைவு; வெட்

கமோ இன்னும் அதிகம். வயதில் அவ்வளவு சிறிய பிள்ளைக் கவி அந்தக் காலத்தில் என்னைத் தவிர வேறெவரும் இருந்ததாகத் தெரியவில்லை. என்னைக் காட்டிலும் பெரியவனுன மருமகன் ஒருநாள் பதங்களைச் செய்யுளாகக் கோக்கும் வித்தையை எனக்குக் காட்டினுன். பார்த்தவுடனே நானும் கவிதை புனைந்தேன்; அதில், 'தாமரையும் அலர்ந்திருந்தது; ஒரு வண்டு வந்து உட்கார' இடமும் இருந்தது. அன்றுதொட்டு எனக்கும் மற்றக் கவிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. அதுமுதல் இந்தக் காவிய உணர்ச்சி வளர்ந்துகொண்டே வந்தது.

நான் கீழ்வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது எங்கள் பள்ளிக்கூடச் சூபரிண்டெண்டெண்ட் கோவிந்த பாபுவுக்கு நான் காவியம் புனையும் ரகசியம் எட்டிவிட்டது. நார்மல் ஸ்கூலின் பெயர் விளங்குவதற்காக ஒரு செய்யுள் எழுதும்படிக் கட்டளையிட்டார். செய்யுள் வரைந்தேன். அதை வகுப்புப் பிள்ளைகளுக்கெல்லாம் படித்தும் காட்டினேன். இது எங்கேயோ திருடின சரக்குத்தான் என்று சொல்லவும் சொன்னுர்கள். என்னை நிந்தித்தவர்களுக்கெல்லாம் ஒரு விஷயம்மட்டும் தெரியவில்லை: பிற்காலத்தில் நான் எவ்வளவு சாமர்த்

தியமாகப் பிறருடைய கருத்துக்களை என் செய்யுளில் புகுத்தினேன் என்பதுதான். இந்த மாதிரித் திருட்டுச் சரக்குக்குத்தான் எப்போதும் மதிப்பு ஜாஸ்தி. முச்சீரில் ஒரு சமயம் செய்யுள் இயற்றினேன். அதன் கருத்து : ஒரு தாமரைக் குளத்தில் பூப் பறிக்க நீந்திச் செல்கிறேன். நான் கையை அலம்புவதனால் அங்குள்ள கமல மலர் என் கைக்குள் சிக்காமல் ஒதுங்கிச் செல்கிறது. அக்ஷய்பாபு, 'பையன் இவ்வளவு அழகாக எழுதிவிட்டானே' என்று என்னைத் தூக்கிக்கொண்டு உறவினர் வீடுகளுக்கெல்லாம் போய் அந்தச் செய்யுளை எல்லோருக்கும் பாடிக் காட்டச் சொன்னார். அவர்களும், "பையன் என்ன நன்றாக எழுதுகிறான், போ !" என்று புகழ்ந்தார்கள்.

மன்னிமட்டும் இதற்கு நேர்மாறாக இருந்தாள். நான் எழுதுவதையெல்லாம் அவள் சரி என்று என்றைக்குமே ஒப்புக்கொண்டதில்லை. "விஹாரி சக்ரவர்த்தியைப்போல் உனக்கு எழுத வருமா ?" என்று குத்தலாகச் சொல்வாள். நான் இடிந்துபோவேன். அவள் பெண்பிள்ளையாய் இருந்தும், "ஏது, அவ்வளவாவது மைத்துனன் எழுதினானே" என்று பார்க்கமாட்டாள்.

ஜ்யோதி அண்ணுவுக்குக் குதிரை ஸவாரியில் அதிக விருப்பம். மன்னியையும் ஒரு குதிரைமேல் ஏற்றிக்கொண்டு சித்புர் ரஸ்தா வழியாகச் சென்று ஈடன் தோட்டத்தில் கொஞ்சநேரம் உலாவிவிட்டு வருவார். அந்தக் காலத்தில் அது ஓர் அதிசயம் அல்லவா? சிலாயிதஹ்ஹில் இருந்தபோது நான் ஸவாரி செய்ய ஒரு சின்னக் குதிரை கொடுத்திருந்தார். அது லேசான குதிரை யல்ல. என்னை ஊரெல்லாம் ஒரு பிரதக்ஷிணம் சுற்றி அடித்துக் கொண்டு வரும். மேடு பள்ளங்களைத் தாண்டும் போது அதன்மேலிருந்து கீழேவிழும் அளவுக்கு வந்துவிடுவேன். ஆனல் சமாளித்துக்கொண்டு குதிரையை ஓட்டுவேன். ஜ்யோதி அண்ணுவுக்கும் நான் விழமாட்டேன் என்று நம்பிக்கை உண்டு. அதனலேயே நான் விழவில்லை. சில நாட்களுக்குப் பிறகு கல்கத்தா தெருக்களிலும் நான் குதிரை ஸவாரி செய்திருக்கிறேன். அந்தத் தடவை சின்னக் குதிரை அல்ல; ஜோராகப் போகும் பெரிய குதிரை. ஒரு நாள் அது என்னேடு ஒரே தாண்டில் வீட்டினுள் புகுந்து, கொள்ளுத் தின்ன முற்றத்தில் போய் நின்றது. அடுத்த நாளிலிருந்து அதன் ஜோலிக்குப் போவதில்லை நான்.

துப்பாக்கி சுட ஜ்யோதி அண்ணு பழகி வந்தார் என்று நான் முன்னமேயே கூறியிருக்கிறேன். புலி வேட்டை யாடவேண்டுமென்று அவருக்கு ரொம்பநாளாக ஓர் எண்ணம். வேட்டைக்கார விசுவநாதன் ஒரு நாள் ஸமாசாரம் கொண்டுவந்து விட்டான், சிலாயிதஹ் காட்டில் புலி இருப்பதாக. உடனே துப்பாக்கியை யெல்லாம் எடுத்துக்கொண்டு வேட்டைக்கு ஆயத்தமானுர் ஜ்யோதி அண்ணு. அதில் ஆச்சரியம் என்னவென்ருல், என்னையுங்கூட அழைத்துச் சென்றிருந்தார். சின்னப் பையனுயிற்றே, ஏதாவது ஆபத்து நேருமே என்று அவர் எண்ணவே இல்லை.

வேட்டைக்கார விசுவநாதனே பக்காப் பேர்வழி. பரண் கட்டிக்கொண்டு அங்கிருந்து புலியைச் சுடுவது ஆண்பிள்ளைத்தனம் அல்லவென்பது அவன் அபிப்பிராயம். புலி எதிரே நின்று அதைச் சுட்டு வீழ்த்துவான். அவன் குறி தவறுவதே இல்லை.

அடர்ந்த காடு. அந்தமாதிரி ஒரு காட்டின் நிழலில் புலி பதுங்கியிருப்பது கண்ணிலேயே படாது. ஒரு கனமான மூங்கில் புதரில் கட்டை அடித்து ஏணிபோல் அமைத்துக் கொண்டார்கள். ஜ்யோதி அண்ணு கையில் துப்பாக்கியுடன் அதில் ஏறிக்கொண்டார்.

என் காலில் செருப்புக்கூட இல்லை. புலி வந்து எதிர்த்தால் அதைச் செருப்பால்கூட அடிப்பதற்கு வழியில்லை! விசுவநாதன் ஊன்றிக் கவனித்துக்கொண்டே இருந்தான். ஜ்யோதி அன்றைக்கு வெகுநேரம்வரை ஒன்றுமே தென்படவில்லை. காத்துக் காத்துக் கடைசியில் ஒரு புதருக்கிடையே புலியின் உடம்பு வரி, மூக்குக் கண்ணாடி அணிந்த அவர் கண்ணில் பட்டுவிட்டது. துப்பாக்கியால் சுட்டார். தற்செயலாகப் புலியின் முதுகெலும்பிலேயே போய்த் தாக்கியது குண்டு. அவ்வளவுதான்; அது எழுந்திருக்கவே யில்லை. எதிரே கிடந்த மரக்கிளையை ஆக்ரோஷத்துடன் கௌவி வாலடித்துப் பயங்கரமாக உறுமிற்று. அதை இப்போது நினைத்தால் கூடக் குடல் நடுங்குகிறது. அவ்வளவு சுலபமாக எப்படி அதைக் கொன்றுவிட்டார்கள் என்று எனக்கு ஸந்தேகந்தான். ஒருவேளை, முந்தினநாள் இரவே அதன் உணவில் அபினி கிபினி கலந்துவிட்டிருப்பார்களோ? இல்லாவிட்டால் அப்படித் தூங்குமா?

மற்றொரு சமயம் சிலாயிதஹ் காட்டில் இன்னொரு புலி வந்திருந்தது. அந்தத் தடவையும் நாங்கள் இருவருமே யானைமேல் ஏறி அதைத் தேடச் சென்றோம். போகும் வழி

யில் கரும்புத் தோட்டத்திலுள்ள கருப்பங் கழையையெல்லாம் முறித்துத் தின்று கொண்டே பூமி அதிரும்படி ராஜ கம்பீரத்துடன் சென்றுகொண்டிருந்தது யானை. எதிரே பெரிய காடு ஒன்று இருந்தது. பெரிய மரக்கிளைகளை முறித்துத் தன் காலில் ஊன்றிக்கொண்டு துதிக்கையால் தரையில் அடித்து அடித்து இலைகளைத் தின்றது. அதற்கு முன்னாலேயே விசுவநாதன் தம்பி சாம்ரு சொல்லக் கேட்டிருக்கிறேன்: புலி ஒரே பாய்ச்சலில் யானை முதுகில் ஏறிக்கொண்டால் அதோகதி தானாம். அப்போது யானை ஓவென்று இரைச்சலிட்டுக்கொண்டே முள்ளிலும் புதரிலும் கண் மண் தெரியாமல் ஓடுமாம்; மேலே உட்கார்ந்திருப்பவர்கள் நிலை என்னவாகுமோ யாருக்குத் தெரியும்? அன்று யானைமேல் வீற்றிருக்கும்போது இந்தப் பயங்கர எண்ணமே அடிக்கடி வந்துகொண்டிருந்தது. பயம் என்று வெளியில் சொல்வதற்கு வெட்கப் பட்டுக்கொண்டு மருள மருள நாலு திசையும் நோக்கினேன். புலி வந்துவிட்டது போலவே பிரமை. யானை, காட்டின் அடர்ந்த பாகத்தில் நுழைந்தது. சட்டென்று ஓர் இடத்தில் வந்து நின்றுவிட்டது. பாகன் அதைக் குத்தி மேலே

செல்லத் தூண்டவேயில்லை. இரண்டு பிராணி களுக்குள்ளும் எது பலசாலி என்று அவனுக் குத் தெரியும். அதனாலேயே புலிபேரில் சற்று 'நிகா'வாயிருந்தான். ஜ்யோதி அண்ணா கட் டாயம் புலியைக் காயப்படுத்திக் கொன்று விடுவார் என்பதில் அவனுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. புதரில் ஒரு சலசலப்பு ஏற் பட்டது. புலி திடீரென ஓர் இடத்திலிருந்து வெளியே பாய்ந்தது, பயங்கரமான இடி முழக்கத்துடன் எழும்பும் புயல்வேகத்துடன். இதுவரையில் பூனையையும் நாயையும் நரியை யுந்தான் பார்த்திருக்கிறேன்; இந்த மாதிரி கழுத்தும் தலையும் ஒன்றாய்ப் பருத்து, வலி மையே உருவாக இருக்கும் ஒரு பிராணியை நான் பார்த்ததேயில்லை. அப்படி இருந்தும் பாரமே இல்லாததுபோல் நிமிர்ந்து நின்றது. விடர் வெளியில் பட்டை உரியக் காயும் அந்த வெயிலில் அது ஓடத் தலைப்பட்டது. என்ன ஜோராகக் காலடி வைத்துச் சென்றது தெரி யுமா? அங்கே பயிர் எதுவும் இல்லை. புலி ஓடுவதைக் கண்ணாரப் பார்க்க, வெயில் எரிக் கும் அந்தப் பசுமையான மைதானந்தான் சரியான இடம்.

இன்னும் ஒரு விஷயம் பாக்கி இருக் கிறது: அது உங்களுக்கு வேடிக்கையாக

இருக்கும். சிலாயிதழ்றஹில் நாங்கள் இருந்த போது தோட்டக்காரன் புஷ்பங்களைப் பறித்துப் பூக் கிண்ணங்களில் அலங்காரமாக வைப்பான். அந்தப் புஷ்பரஸத்தைப் பிழிந்து அதில் தோய்த்துக் கவிதை எழுதவேண்டு மென்று ஓர் அசட்டு யோசனை உதித்தது. இதழ்களை எவ்வளவுதான் கசக்கிப் பிழிந்தும் பேனா முனைக்கு வேண்டிய ரஸம் சொட்டுக் கூடக் கிடைக்கவில்லை. இதற்கு ஒரு யந்திரம் கண்டுபிடிக்கவேண்டுமென்று யுக்தி தோன்றி யது. பிளந்துபோன ஒரு மரக்கோப்பை யைத் தேடிப் பிடித்தேன். அதற்கு ஏற்ற ஒரு குழைவிதான் தேவை. அதை ஒரு சக்கரத் தில் மாட்டிவிட்டால் தானாகவே சுழல வேண் டும். என்னுடைய இந்த யுக்தியை ஜ்யோதி அண்ணாவிடம் சொன்னேன். அவர் தமக் குள்ளே சிரித்தும் இருக்கலாம். ஆனால் அது வெளிப்படையாகத் தெரியவில்லை. உடனே உத்தரவு பிறந்தது. கொட்டாப்புளியும் கையு மாகத் தச்சன் வந்தான். யந்திரம் உருவாகி யது. அந்த உரலில் பூ இதழ்களைக் கொட்டி எவ்வளவு சுழற்றியும் ரஸம் வெளிப்படு வதாகக் காணோம். பூக்கள்தாம் குழைந்து கூழாயின. பூவுக்கும் யந்திரத்துக்கும் பொருத்தமில்லை என்பதை ஜ்யோதி அண்ணா

தெரிந்துகொண்டார். இருந்தும் பரிகாசமாக எதுவும் சொல்லவில்லை.

வாழ்க்கையில் அந்த ஒரே தடவைதான் நான் எஞ்ஜினீயரிங் வித்தையில் அக்கறை காட்டினேன். முடியாத ஒன்றை ஒருவன் சிருஷ்டிக்கப் பார்த்தானானல் தெய்வம் அவன் கர்வத்தைக் குலைத்துவிடுமென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அந்தத் தெய்வத்தின் பார்வை என்னுடைய எஞ்ஜினீயரிங் முயற்சி மேலும் விழுந்தது. அதற்குப் பின் நான் எந்த யந்திரத்தையும் தொடுவதில்லை-ஸிதார், ஏஸ்ராஜ் போன்ற வாத்திய யந்திரங்களைக் கூட.

'ஜீவனஸ்ம்ருதி'யில், "வெள்ளைக்காரருடைய 'ப்ளோடில்லா ஸ்டீமர் கம்பெனி'க்குப் போட்டியாக வங்காளதேசத்து நதியில் சுதேசிக் கப்பல்கள் ஓட்டிவிட்டு ஜ்யோதி அண்ணா பெரிய நஷ்டத்துக்கு உள்ளானார்" என்று ஓர் இடத்தில் எழுதியிருக்கிறேன். அந்த நஷ்டம் ஏற்படுவதற்கு முன்பே மன்னி இறந்துவிட்டாள். ஜ்யோதி அண்ணா மூன்றும் மாடியில் இருந்த தம் ஸம்ஸாரத்தைக் கலைத்துவிட்டுப் போய்விட்டார். கடைசிக் காலத்தில் ராஞ்சியில் உள்ள ஒரு குன்றின் மேல் வீடு கட்டிக்கொண்டு வசித்துவந்தார்.

12

இப்போது மூன்றும் மாடியில் என் ஸம்ஸாரத்தை நடத்தின விதத்தைச் சொல்கிறேன்: ஒரு சமயம் 'வட்டக்களஞ்சிய'மும், இன்னொரு சமயம் பல்லக்கும், வேறு வேளைகளில் மாடியிலுள்ள அந்தக் காலி அறையும் நான் வளையவரச் சௌகரியமாய் இருந்தன. நாடோடிபோல் இந்த இடத்தில் ஒரு நாளும், அந்த இடத்தில் ஒரு நாளுமாக இருந்துவந்தேன். பிறகு மன்னி வந்துவிட்டாள். அந்த மாடி ஓர் அழகிய பூந்தோட்டம் ஆகிவிட்டது. பியானோ வாத்தியம் மாடி அறையில் தோன்றியது. நித்தியம் பாட்டும் கதையுந்தான் அங்கே.

கிழக்குப் பக்கமாய் இருந்த குச்சு உள் நிழலில் ஜ்யோதி அண்ணா அதிகாலையில் எழுந்து காபி சாப்பிட உட்காருவார். அந்த சமயத்தில்தான், தாம் எழுதிய புதிய நாடகத்தைப் படித்துக் காட்டுவார். அதில் நான் எழுதிய இரண்டொரு பாட்டுக்களைச் சேர்ப்பதற்காக என்னை அடிக்கடி கூப்பிடுவது வழக்கம். வெயில் ஏறிக்கொண்டே இருக்கும். காக்கைகள் ரொட்டித் துண்டுக்காகக் கைப்பிடி சுவர்மேல் காத்துக்கொண்டிருக்கும். மணி பத்தும் ஆகிவிடும். நிழல் குறைந்துகொண்டே வரும். வெயிலுக்காகக் குடை பிடித்துக்

கொள்வோம். அந்தக் குடையும் கட்டுப் போய்விடும்.

மத்தியான்னத்தில் ஜமீன் விஷயங்களைக் கவனிக்க ஜ்யோதி அண்ணு கீழே போய்விடுவார். மன்னி பழங்களை உரித்துச் சுளைகளை வெள்ளித் தட்டில் அவருக்காக ஒழுங்காய் எடுத்துவைப்பாள். அவளே செய்த தித்திப்புப் பண்டங்கள் இரண்டொன்று அதில் இருக்கும். அவற்றின்மேல் ரோஜா இதழ்களைத் தூவி வைப்பாள். கண்ணுடிக் கோப்பையில் இளநீராவது இருக்கும், பழ ரஸமாவது இருக்கும்; இல்லாவிட்டால் ஐஸ் கலந்த நுங்காவது வைத்திருப்பாள்.

எல்லாவற்றையும் அழகிய பூப்போட்ட பட்டுச் சவுக்கத்தால் மூடி மோரதாபாத் பித்தளைத் தட்டில் வைத்துச் சிற்றுண்டி அருந்தும் சமயமான இரண்டு மணிக்குக் கீழே அனுப்புவாள்.

அப்போது 'வங்க தர்சனம்' என்ற பத்திரிகையை ஜனங்கள் ஆவலாகப் படிக்கும் நாள். சூரியமுகி, குந்தநந்தினி இவர்கள் பெயர் ஒவ்வொரு வீட்டிலும் அடிபட்டு வந்தன. கதையின் அடுத்த கட்டம் என்னவென்று பார்ப்பதற்கு வாசகர்கள் பரபரப்புக் கொள்வார்கள். 'வங்க தர்சனம்' வந்தாலும் வந்தது;

மத்தியான்னம் யாருமே தூங்கமாட்டார்கள் வீட்டில். பத்திரிகைக்காக முந்திக்கொள்ளும் சிரமமே எனக்கு ஏற்படாது. எல்லாரையும் விட நான் நன்ருகப் படிக்கக்கூடியவனுனை தால் என்னையே வருந்தி அழைப்பார்கள். தானே படிப்பதைவிட நான் படித்துத் தான் கேட்கவேண்டுமென்று மன்னிக்கு ஓர் ஆவல். அந்தக் காலத்தில் மின்சாரப் பங்கா இல்லை. படிக்கும்போது மன்னி விசிறியால் விசிறிக் கொள்ளும் காற்று, சற்று என் பக்கமாகவும் வீசும்.

13

இடை இடையே ஜ்யோதி அண்ணு மாறுதலுக்காகக் கங்கைக் கரையில் உள்ள பங்களாவுக்கும் போய் வசிப்பதுண்டு. வெள்ளைக்கார வியாபாரிகள் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி நதிக்கரையை இன்னும் பாழாக்கவில்லை. இரு கரையிலும் தோப்புக்கள் பக்ஷிகளின் கூச்சலினுல் கல் என்று இருக்கும். ஆகாயத்தின் நிர்மலமான ஒளியையும் சுத்தமான காற்றையும், குழாய்கள் கக்கும் புகை வந்து கெடுக்கவில்லை.

அந்தச் சிறிய இரண்டடுக்குப் பங்களா வீடு எனக்கு இன்னும் கவனம் இருக்கிறது. மழைக்கால ஆரம்பம். ஆற்று நீரோட்டத்தின்

மேல் மேகத்தின் நிழல் படிந்து செல்லும். அக்கரையில் உள்ள தோப்புக்கு மேலே இருளோவென்று மேகம் திரண்டிருக்கும். இந்தமாதிரி நாட்களில்தான் பாட்டுக் கட்டுவதற்கு உற்சாகம் கிளம்பிவிடும் எனக்கு. ஆனால் அன்றுமட்டும் ஏனோ அந்த உணர்ச்சி இல்லாமற் போயிற்று? கவி வித்யாபதியின்,

'ஏ பரா பாதர் மாஹ பாதர்சூன்ய மந்திர் மோர்'*

என்ற பாட்டு என் மனத்துள் எழுந்தது. எனது கற்பனை ஸ்வரத்தைப் போட்டு அதை ஒரு ராகத்தில் அமைத்து என்னுடைய சொந்தச் சரக்காகவே ஆக்கிக்கொண்டேன். கங்கைக் கரையில் இவ்வாறு காவிய லோகத்தில் நான் திரிந்துவந்த அழகிய மழை நாட்கள், நான் பாடிய 'வர்ஷா கானம்' என்னும பேழையில் மிளிர்கின்றன. நின்று நின்று மரங்களின் உச்சியைக் காற்று அலைப்பிச் செல்வது, கிளைகளினூடே அது புகுந்து பாய்வது, படகுகளும் தோணிகளும் வெண்சீலை விரித்து ஆற்றில் நீரோட்டத்துக்கு எதிராக வேகமாய்ச் செல்வது, கரைமேல் தும் தும் என்று அலை வரிசை மோதுவது போன்ற

* மழையும் பெய்தது ; அவர் இன்றி மனை வெறிச்சென்றிருக்கிறது.

அந்தக் காட்சிகள் இன்னும் அழியாமல் என் ஞாபகத்தில் இருக்கின்றன. மன்னி திரும்பி வந்துவிட்டாள். அவளுக்கு என் பாட்டுக்களையெல்லாம் பாடிக் காட்டினேன். 'நன்றாயில்லை' என்று அந்தத் தடவை அவள் சொல்லவேயில்லை. மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அப்போது எனக்கு வயது பதினாறோ, பதினேழோ. அப்போது நாங்கள் ஏதாவது குதர்க்கம் பண்ணிக்கொண்டேயிருப்போம். ஆனால் முன்போல் ஸ்வாரஸ்யமாயிராது.

பிறகு சில நாளைக்கெல்லாம் வேறு வீடு மாறவேண்டியதாயிற்று - மோரன் துரை பங்களாவுக்கு. அதை ஓர் அரண்மனை என்றே சொல்லவேண்டும். வர்ணக் கண்ணாடிகள் பதித்த ஜன்னல்கள் ஒவ்வோர் அறையிலும் உண்டு. சலவைக்கல் பாவிய தரை. கங்கை நீர் மட்டத்திலிருந்து மேலே உள்ள விசாலமான வராந்தாவரைக்கும் எட்டும் துறைப் படிகள். அங்கேதான் இரவெல்லாம் விழித்துக்கொண்டு இருக்கவேண்டுமென்று ஓர் ஆசை கிளம்பிவிடும். அன்று ஸாபர்மதி நதி தீரத்தில் உலாவிய சுகம் இந்த இடத்திலும் இருந்தது எனலாம். இன்று அந்த ஸாபர்மதிக் கரையிலுள்ள தோட்டமும் பெரிய

மாளிகையும் உருவே மாறிப் போய்விட்டன. இரும்பு யந்திரங்கள் சுழலும் டாண்டித் தொழிற்சாலை அவைகளை விழுங்கிவிட்டது.

மோரன் தோட்ட வாசத்தைப்பற்றிய நினைவு வரும்போதெல்லாம், ஒவ்வொரு நாள் அங்கே மகிழ மரத்தடியில் நடந்த சமையல் காட்சி கண் எதிரே நிற்கிறது. அந்தச் சாப்பாடு காரஸாரமாக இராவிட்டாலும் அதை ஆக்கிப்போட்ட கையின் திறமையைச் சொல்லவேண்டியதில்லை. எங்களுக்குப் பூணூல் போட்ட சமயத்தில் மன்னிதான் ஹவிஸ் அன்னம் சமைத்துப்போடுவாள். அதில் நல்ல பசு நெய் கொட்டியிருப்பாள். அந்த மூன்று நாளும் அவ்வன்னத்தின் ருசியும் மணமும் சேர்ந்து உண்ண உண்ணத் தெவிட்டாமல் இருந்தது.

ஒரு பெரிய சங்கடம்; ஒரு நாள்கூட உடம்புக்கு ஒன்றும் வந்ததில்லை. வீட்டில் மற்றப் பிள்ளைகள் எல்லோரும் ஒருதரமாவது நோயில் படுத்துக்கொள்வார்கள். அப்போது அவர்களுக்கெல்லாம் சுசுருஷை செய்பவள் மன்னிதான். வீட்டுப் பிள்ளைகள் அவளைச் சுற்றிக்கொண்டு அலைவார்கள். இதனல் அவள் என்னைக் கவனிப்பது கம்மியாகிவிடும்.

மூன்றும் மாடியில் நான் வேடிக்கையாகக் கழித்த காலமெல்லாம் அவளோடே போய் விட்டது. அதற்கப்புறம் அங்கே நான் வசிக்க நேர்ந்தபோது முன்னைப்போல் தென் பாக இல்லை.

இப்படி வளர்ந்துகொண்டே யௌவனத் தின் ஆரம்ப தசைக்கு வந்துவிட்டேன். கழிந்துபோன பிள்ளைப் பிராயத்தின் எல் லையை ஒருதரம் திரும்பி நோக்கவேண்டாமா? இப்போது பதினாறு வருஷ காலம் கழிந்த விதத்தைப் புரட்டிப் பார்க்கிறேன். என் யௌவன தசையின் தொடக்கத்தில்தான் "பாரதி" வெளிவரத் தலைப்பட்டது. இந்தக் காலத்தில் எங்கே பார்த்தாலும் பத்திரிகை கள் மூலைக்கு ஒன்றாகக் கிளம்புகின்றன. அந் தக் காலத்திலேயே இந்தப் பித்து எனக்கு உண்டு. ரொம்பப் படிப்போ, திறமையோ இல்லாத என்னைப்போன்ற சிறுவன் பத்திரி கைத் தொழிலில் ஈடுபட்டிருந்தது அந்தக் காலத்தில் யாருக்குமே தெரியாது. இதி லிருந்து என்ன தெரிகிறதென்றால், அந்தக் காலத்து விஷயம் எதுவும் 'வேடிக்கைத்தன மாகவே நடந்துவந்தன. சிறந்த பத்திரிகை என்றால், அந்தக் காலத்தில் 'வங்க தர்சனம்' ஒன்றைத்தான் குறிப்பிட வேண்டும். நான்

பத்திரிகையில் எழுதிவந்த விஷயங்கள் சில ரஸமாய் இருக்கும்; சில ஸ்வாரஸ்யமாக இரா. பெரிய அண்ணா எழுதும் விஷயங்கள்மட்டும் ஆழ்ந்த கருத்துக் கொண்டவை; அவற்றைப் புரிந்துகொள்வதும் சிரமம். இதற்கிடையே நான் ஏதாவது கதை எழுதுவேன். அதன் தாத்பர்யம் தெரிந்து பிரசுரமாக்கும் வயசு இல்லை அப்போது. அதைப் படிப்பவர்களும் அதன் குணத்தையோ குற்றத்தையோ உணராதவர்கள்.

பெரிய அண்ணாவைப்பற்றி இந்த இடத்தில் சொல்லவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. ஜ்யோதி அண்ணா இடம் மூன்றாம் மாடி. பெரிய அண்ணா இருந்த இடம் வீட்டின் தென்னண்டை வராந்தா. அவர் எப்போதும் தத்துவ சிந்தனையில் தன்மயமாகக் கிடப்பவர். எங்களுக்கெல்லாம் எட்டாத பொருளாக இருந்தார் அவர். அவர் எழுதுவதையும் சொல்வதையும் பக்கத்தில் இருந்த யாரும் பொறுமையாகக் கேட்கமாட்டார்கள். அப்படி யாராவது தப்பித் தவறி அவரிடம் சிக்கிக்கொண்டால் அவர்களைக் கொஞ்சத்தில் விடமாட்டார்; அவர்களே அவரைவிட்டுப் போகாதிருந்தால், அதற்குத் தத்துவத்தின் மேலுள்ள பற்றுதல் காரணமாய் இராது; வேறு ஏதாவது

இருக்கும். பெரிய அண்ணாவுக்கு அவரைப் போலவே ஒரு கூட்டாளி கிடைத்துவிட்டார். அவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. அவரை எல்லோரும், 'வேதாந்தி' என்று அழைப்பார்கள். மற்றத் தமையன்மார் அவரைக் கோட்டாப்பண்ணுவது வழக்கம். ஆட்டு மாமிசத்தின்பேரில் அவருக்கு இருந்த அவாவைப் பார்த்தல்ல; அவர் நச்சு நச்சு என்று ஏதாவது வேண்டுமென்று கேட்பதனால்தான். தத்துவத்தைத் தவிரப் பெரிய அண்ணாவுக்குப் பிடித்த விஷயம் கணிதம். கணிதக் குறிப்புக்கள் உடைய காகிதத் துண்டுகள் வராந்தாவின் நாலு மூலையிலும் காற்றில் பறந்துகொண்டிருக்கும். பெரிய அண்ணாவுக்குப் பாடத் தெரியாது. ஆனால் ஐரோப்பியக் குழல் வாத்தியம்மட்டும் இசைப்பார். ஸங்கீதத்தை உத்தேசித்தல்ல; கணித சாஸ்திர ரீதியாக ராகங்களின் ஸ்வரங்களை அளவிடுவதற்கே. அப்புறம் ஒரு சமயம், 'ஸ்வப்னப் பிரயாணம்' என்னும் காவியத்தை எழுதத் தொடங்கினார். பலவிதமான சந்தங்களை அதில் பிரயோகித்துப் பார்த்தார்; ஸம்ஸ்கிருத பாஷையின் சந்தம் வங்க மொழியின் யாப்பிலக்கணத்துக்கு ஒத்துவருகிறதா என்று அறியவே. அந்தக் காவியத்தில் காணுகிறது

போக எஞ்சி நிற்பது கொஞ்சமே. துண்டுக் காகிதத்தில் எழுதினதால் அவை போன இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. அப்புறம் காவியம் புனையும் முயற்சியிலேயே இறங்கிவிட்டார் அவர். அவற்றுள் எழுதி வைத்ததைவிட எழுதித் தொலைத்ததுதான் அதிகமாக இருக்கும். ஒரு செய்யுள் இயற்று வார்; அது அவர் மனசுக்குப் பிடித்து இராது; மற்றொன்று வரைவார்; திருப்தி யாகும்வரை இவ்வாறு எழுதிக்கொண்டே யிருப்பார். தூர எறிந்த அந்தக் கவிதைத் துணுக்குகளைத் திரட்டி வைக்க வேண்டு மென்ற புத்தி அப்போது எங்கள் எவருக்குமே இல்லை. எழுதினவுடன் அதைப் படித்துக் காட்டுவார்; அதைக் கேட்க அவரைச் சுற்றிக் கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். வீட் டில் இருந்தவர்களெல்லோரும் அந்தக் காவி யச் சுவையில் ஊறியிருந்தோம். படித்துக் கொண்டே அவர் தாமே ஓவென்று சிரித்து அதை அநுபவிப்பார்; கபடமற்ற நிறைந்த சிரிப்பு அது. அப்போது யாராவது அவர் பக்கத்தில் இருந்துவிட்டால் அவர்களை உலுக்கி எடுத்துவிடுவார்.

இப்படி ஜோடாஸாங்கோ வீட்டிலே ஜீவ ஊற்று ஒன்று அந்தத் தென்னண்டை

வராந்தாவில் பெருகி ஓடிக்கொண்டிருந்தது. பெரிய அண்ணு சாந்திநிகேதன ஆசிரமத்துக்குப் போனவுடனேயே அது தூர்ந்து விட்டது. அந்த வராந்தாவுக்கு எதிர்ப்புறமாகவுள்ள தோட்டமும், அதில் படியும் அந்த ரம்மியமான சரத்கால வெயிலும், புதிதாக நான் அப்போது கட்டிய,

'ஆஜி சரத தபனே பிரபாத ஸ்வபனே
கீ ஜானி பரான கீ ஜே சாய்.'*

என்ற பாட்டைப் பாடினதும் என் மனக் கண்முன் அடிக்கடி வந்து நிற்கின்றன. ஒரு நாள் பட்டை உரிய வெயில் காயும் மத்தியான்ன வேளையில் எழுந்த,

'ஹேலேபேலா ஸாராபேலா ஏ கீ கேலா ஆபன ஸனே'†

என்ற பாட்டும் நினைவுக்கு வருகிறது.

பெரிய அண்ணுவுக்கு நீச்சல் அடிக்கும் பழக்கம் உண்டு. குளத்தில் இறங்கிவிட்டால் இக்கரைக்கும் அக்கரைக்கும் குறைந்த பக்ஷம் ஐம்பது தடவையாவது போய்விட்டு வரு

---

* இன்பந்தரும் சரத்கால வெயிலிலே, காலையில் இனிய கனவுகள் காண்கிறேன். உள்ளம் விரும்புவது யாதோ அறியேனே.

† எல்லையற்ற ஓய்வு. எப்போதும் என் மனத்துள் என்னே இவ் விளையாட்டு!

வார். பேனேடியில் வாசம் செய்யும்போது அவர் கங்கையில் வெகு தொலைவு நீந்திச் செல்வார். அதைப் பார்த்த பிறகே இளமையிலே நீச்சல் அடிக்கக் கற்றுக்கொண்டோம், அதுவும் நாங்களே விழுந்தடித்துக்கொண்டு. பாயிஜாமா நனைந்து போய்விடும். அதைக் காற்றில் உலர்த்துவேன். ஜலத்தில் இறங்கினவுடன் பாயிஜாமாவுக்குள்ளே காற்று ஏறி இடுப்பைச் சுற்றி உப்பும். ஜலத்தில் மூழ்கிப் போகிற பயமே இராது. பெரிய வயதில் சிலாயிதஹ் மணல்திடரில் இருந்த போது ஒரு சமயம், நான் பத்மா நதியை நீந்திக் கடந்திருக்கிறேன். கேட்டால் திடுக்கிடும் படியாகத்தான் இருக்கும்; ஆனால் அது அப்படிப் பிரமாத விஷயம் அல்ல. நடு நடுவே மணல் திட்டு இருந்ததால் பத்மாவின் நீரோட்டத்தில் ஆளை இழுத்துக்கொண்டு போகும் வேகம் இராது. மேட்டில் இருப்பவர்களுக்கெல்லாம் இந்தக் கதையைக் கேட்டால் பயமாகத்தான் இருக்கும். பாலியத்தில் டெல்ஹௌஸி மலைக்குப் போயிருந்தேன். என் பிதா நான் அங்கே தனியாகச் சுற்றித் திரிந்து விட்டு வருவதைத் தடுக்கமாட்டார். ஒற்றையடிப் பாதை வழியாகவே கனமான தடியை ஊன்றிக்கொண்டு ஒரு மலையிலிருந்து மற்றொரு

மலைக்கு ஏறிச் செல்வேன். மனசிலே அடிக்கடி திகில் கொள்வதும், எனக்கு ஒரு வேடிக்கையாக இருந்தது. மலைச் சரிவில் இறங்கும் போது ஒருநாள் கால் தடுக்கி ஒரு மரத்தின் கீழுள்ள சருகுக் குவியலில் காலை வைத்துவிட்டேன். கால் மடியவே தடியை ஊன்றிச் சமாளித்துக்கொண்டேன். அதை ஊன்றாமல் மட்டும் இருந்திருந்தால் -? பாறையில் உருண்டு உருண்டு கீழே பாதாளத்தில் அழன்று செல்லும் காட்டாற்றில் போய் விழ அதிக நேரம் பிடித்திராது. அம்மாவினிடம் இதைப்பற்றிப் பிரமாதமாகச் சொல்லிக் கொண்டேன். அது தவிர, தேவதாரு வனத்தில் உலாவும்போது எத்தனையோ தரம் கரடி குறுக்கிட்டிருக்கிறது. இதுவும் சொல்லவேண்டிய அதிசயமான ஸம்பவம் அல்லவா? அப்படி ஆபத்தானது எதுவும் நிகழவில்லை; மனசில் மட்டும் நடக்காததையெல்லாம் எண்ணிக் கொண்டதுதான் மிச்சம். நான் பத்மா நதியை நீந்திச் சென்ற விஷயங்கூட இதைப் போல் ஒரு கதைதான்.

எனக்குப் பதினேழு வயது ஆனதும் "பாரதி" பத்திரிகை நடத்திய ஆசிரியர் கூட்டத்திலிருந்து நான் விலகவேண்டியதாயிற்று.

அப்போது என்னைச் சீமைக்கு அனுப்ப வீட்டில் நிச்சயித்திருந்தார்கள். ஸ்டீமரில் ஏறிப் புறப்படுமுன் சீமைப் பழக்க வழக்கங்களை உணர்வதற்காக என்னை நடு அண்ணு விடம் அனுப்ப உத்தேசித்தார்கள். அவர் அப்போது ஆமதாபாத்தில் ஜட்ஜாக இருந்தார். மன்னியும் அவருடைய குழந்தை குட்டிகளும் இங்கிலாந்தில் இருந்தார்கள். 'பர்லோ' விடுமுறை வாங்கிக்கொண்டு அங்கே செல்லுவதாயிருந்தார்.

இடம்விட்டு இடம் மாற்றி என்னை அடியோடு புது மனிதனுக்க அரும் பிரயத்தனங்கள் நடந்துகொண்டிருந்தன. நூதனமான சுற்றத்தில் நான் பழகவேண்டியதாயிற்று. முதலில் எனக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. புதிய மனிதர்களிடம் பழகும்போது எப்படி நடந்துகொள்வது என்று தெரியாமல் சங்கடப்படுவேன். அறிமுகம் இல்லாத குடும்பத்தவர்களுடன் இழைவது எனக்கு ஒத்திருக்கவில்லை. இதிலிருந்து மீள வேறு வழி ஏது? என் இளம் மனம் மிகவும் அல்லல் பட்டது.

ஆமதாபாத்தில் இருக்கும்போது புராதன சரித்திர உலகத்தில் என் மனம் தன் இஷ்டப்படி சுற்றித் திரிந்தது. ஜட்ஜின்

வீடு 'ஷாஹிபாக்'கில் இருந்தது. பாதுஷா காலத்து மாளிகை. பகலில் அண்ணு தம் வேலையாகப் போய்விடுவார். அந்த மாளிகையின் பிரம்மாண்டமான அறைகளெல்லாம் 'ஓ' என்று சூன்யமாக இருக்கும். பொழுது போகாமல், பூதங்காப்பதுபோல் அங்கேயே நான் சுற்றிக்கொண்டிருப்பேன். எதிரே பெரிய தாழ்வாரம். அங்கிருந்து பார்த்தால் கணுக்கால் அளவு ஓடும் ஸாபர்மதியின் நீரோட்டம் மணலிடையே வளைந்து வளைந்து செல்வது தெரியும். தாழ்வாரத்தின் ஒரு மூலையில் ஸ்நானம் செய்வதற்கு வசதியான பெரிய சலவைக் கல் தொட்டி ஒன்று இருந்தது. அது மொகல் காலத்துப் பேகங்களின் ஆடம்பரமான கேளிக்கைகளை நினைவூட்டும்.

நானோ கல்கத்தாவில் பிறந்து வளர்ந்தவன். சரித்திரப் பிரசித்தமான காட்சி எதுவும் அங்கே கிடையாது. அப்படி இருந்தாலும் சமீபகாலத்ததாகத்தான் இருக்கும். ஆமதாபாத்துக்கு வந்த பிறகே உண்மையான சரித்திர அற்புதங்களைக் காண நேரிட்டது. அந்தப் பழைய நாட்கள் பூதங்காத்த புதையல்போல் மறைந்து இருந்தன. 'கல்லின் வேட்கை' என்ற என் கதை மூலமாக அதன் உண்மையை ஒருவாறு உணர்ந்தேன்.

பல நூற்றுண்டுகளுக்குமுன் நடந்த கதை அது; நஹறவத்கானு*வில் எட்டு வேளேயும் பல ராகங்களே வாத்திய கோஷ்டிகள் வாசிக்கும். ராஜ வீதிகளில் குதிரைகளின் குளம்பு ஓசை கேட்கும். ஸவாரி செய்துகொண்டு துருக்க சைனியங்கள் அணிவகுத்துச் செல்லும். அந்தச் சைனிகர்கள் ஏந்தி இருக்கும் ஈட்டி சூரிய ஒளியில் ஜொலிக்கும். பாதுஷாவின் தர்பாரைச்சுற்றிச் சதியாலோசனேயும் பயங்கர ரகசியங்களுமே சூழ்ந்திருக்கும். அந்தப்புரத்தில் உருவிய கத்தியுடன் ஹாப்ஸி ஜாதிக் கோஜாக்கள் பாராக் கொடுப்பார்கள். பேகத்தின் ஸ்நாந அறையில் பூங்குழாய்கள் ஓயாமல் பன்னீர் பொழிந்துகொண்டிருக்கும். தோள் வளேயும் தொடியும் கலீரென ஒலிக்கும். அந்த 'ஷாஹிபாக்'கின் வைபவம் முழுதும் பழங் கதையாகிவிட்டதே! அதன் விசித்திரமான வர்ணங்களோ, இனிய ஓசையோ எங்கோ போய்விட்டனவே! அதற்குப் பதிலாக அங்கே பார்ப்பது என்ன? வறண்ட தினங்களே! சுவையற்ற இரவுதான்!

பழங்கால சரித்திரம் எலும்பெடுத்த சடலம்போலவே இருந்தது. மண்டை ஓடுமட்டுந்தான் நின்றது; கிரீடத்தைக் காணவில்லே.

---

* பெரிய மேளம் கொட்டும் உபரிகை.

அதற்கு ஒரு தோலைப் போர்த்து, மூக்கும் விழியும் அமைத்து மனசிலுள்ள காட்சிச்சாலையில் வைத்துப் பார்த்தால்தான் தெரியும், அதன் உண்மையான உருவம். அந்தக் காலத்தின் சித்திரத்தை மனசினுள் வரைந்துகொள்வது என் கற்பனையின் விளையாட்டே. மறந்து போனதும் போகாததுமான விஷயங்களைத் தொகுப்பதே அதன் தொழில். எண்பது வருஷங் கழித்து நம்முடைய சுயரூபமே எதிரே வந்து நின்றால்கூட உண்மைக்கு அது ஒத்திராது; பெரும்பாலும் மனோசிருஷ்டியாகவே இருக்கும்.

இங்கே சில தினங்கள் இருந்த பிறகு வெளியூர் வாழ்வே வெறுத்துப்போய் இருக்கின்ற எனக்கு, சொந்த நாட்டின் இனிமையை ஊட்டக்கூடிய சில பெண்களுடன் பழக்கம் செய்துவைக்க எண்ணியிருந்தார் அண்ணா; 'வீட்டைவிட்டுத் தொலைவில் வந்திருக்கும் என் மனம் இதனால் ஆறுதல் அடையும்; இங்கிலீஷ் பேசிப் பழகுவதற்கு அது நல்ல சந்தர்ப்பமாயிருக்கும்' என்று எண்ணியே என்னைப் பம்பாய்க்கு அனுப்பினார். அங்கே ஒரு குடும்பஸ்தர் வீட்டில் சில நாட்கள் நான் தங்க வேண்டியதாயிற்று. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு யுவதி சீமைக்குப் போய்ப் படித்து

விட்டு வந்ததால் அதிநாகரிகமாக இருந்தாள். நான் கற்ற வித்தையோ மிகவும் கொஞ்சம். என்னை அவள் அலக்ஷியம் செய்திருந்தால் அவளைக் குறை கூறுவதற்கில்லை. ஆனால் அவள் அப்படிச் செய்யவில்லை. வெறும் புஸ்தகத்தைப் படித்ததனால்மட்டும் அவளுக்கு அறிவு வளர்ச்சி உண்டாகவில்லை; இயற்கையான அறிவு அவளிடத்தில் இருந்தது. சமயம் வாய்க்கும்போதெல்லாம் அவளிடம் எனக்குக் கவிதை எழுதத் தெரியும் என்பதை வெளியிடுவேன். அவளுடைய ஆதரவைப்பெற அதுவே நான் கொண்டிருந்த மூலதனமாகும். என் கவித் திறமையை அவள் அளந்து பார்க்கவில்லை. அதில் ஈடுபட்டே அதை ஏற்றுக் கொண்டாள். தனக்கு ஓர் அழகிய பெயரிட்டு அழைக்கவேண்டுமென்று கவியாகிய என்னைக் கேட்டாள். அழகிய பெயர் ஒன்றை அவளுக்குச் சூட்டினேன். அவள் செவி குளிர்ந்தது. என் கவிதையின் சந்தத்தில் அப்பெயரின் ஒலியை இணைக்கவேண்டுமென்று ஆவல் கொண்டேன். கவிதை மாலையில் அதைப் புனைந்தேன். இளங்காலையில் பைரவி ராகத்தில் நான் பாடிய பாட்டில் அதை அவள் கேட்டுப் புளகித்தாள். "உன் இன்னிசையைக் கேட்டதும் மரணத்தினின்றுகூட உயிர்

பெற்று நான் எழுந்துவிடக் கூடுமென்று தோன்றுகிறது" என்றாள். இதனால் என்ன தெரிகிறது? பெண்களே எப்போதும் தம் ஆதரவுக்குப் பாத்திரமானவர்களைத் தேனும் பாலும் சொட்ட மெச்சுவார்கள்; அவ்வாறு செய்வதில் அவர்களுக்கு ஒரு குதூகலம். என் அழகைப்பற்றிய ஸ்துதியை அவள் வாய்மூலந் தான் நான் முதல் முதலாகக் கேட்டேன். அவ்வாறு சிறப்பித்துக் கூறுவதில் பெண்களே நிபுணர்கள். ஒரு சமயம் அவள் என்னிடம், "நீ தாடியே வளர்த்துக்கொள்ளக் கூடாது. உன் முக விலாஸத்தை அது கெடுத்துவிடும்" என்று வற்புறுத்திச் சொன்னாள். அவளுடைய இந்த வார்த்தையை இதுவரை நான் காப்பாற்றவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே! "அதற்கு நான் இணங்க முடியாது" என்று வெளிப்படையாகச் சொல்வதற்கு முன்பே அவள் இறந்துவிட்டாள்.

எங்கள் வீட்டெதிரே இருக்கும் ஆலமரத்தில் எப்போதாவது ஒரு வருஷம் திடீரென வெளிநாட்டுப் பறவை வந்து அடையும். கொஞ்சநாள் இறகை விரித்து ஆடிக்கொண்டிருக்கும்; அதை நன்றாகக் கவனிப்பதற்குள் அது காணாமல் போய்விடும். நெடுந்தூர வனத்திலிருந்து வந்து நாம் கேட்டறியாத தீங்

குரல் எடுத்துப் பாடும். இப்படியே வாழ்க்கைப் பிரயாணத்தின் இடையே நமக்கு முற்றும் புதிதான ஓர் இடத்திலிருந்து நம்மை ஒத்த இயல்பினள் எவளாவது தோன்றுகிருள்; உள்ளத்தையே முழுதும் கொள்ளை கொண்டு விடுகிருள். அழைக்காமலே அவள் வருகிருள். கடைசியில் ஒரு நாள் அவளை அணுகும்போது அவள் மறைந்தே போய்விடுகிருள். என்றும் அழியாத விசித்திரமான சின்னங்களை நம் வாழ்க்கையில் புனைந்துவிட்டுச் செல்கிருள். ஒவ்வோர் இரவும் பகலும் அதற்குரிய மதிப்பு வளர்ந்துகொண்டே போகிறது.

14

என்னைப் படைத்த அந்தச் சிற்பி என் வங்க நாட்டின் மண்ணைக்கொண்டே என்னை உருவாக்கினன். சிருஷ்டித்த புதிதில் என் தன்மை அப்படியே இருந்தது; அதுதான் என் இளமைப் பருவம். அதில் அதிகக் கலப்பு இல்லை. வீட்டின் எல்லைக்குள்ளேயே இருந்து, வீட்டு மனிதர்களே வளர்த்த ஒரு வாழ்க்கை நிலை அது. இந்தப் பிராயத்தோடுதான் மனிதனை ஓர் உருவாக்கும் தொழில் நின்றுவிடுகிறது. அதற்குமேல் கல்விப் பயிற்சி என்னும் உலைக்

கூடத்தில் உருகி வார்ப்படமாக மாறுகிறுன். அவ்வாறு உருமாறியவனுக்கே கடைத் தெரு வில் கிராக்கி ஏற்படுகிறது.

தெய்வாதீனமாய் அந்த உலைக் கூடத்தி லிருந்து நழுவி வெளியே வந்துவிட்டேன் நான். எனக்கு வித்தை கற்றுக்கொடுக்கவந்த உபாத்தியாயர்கள் யாவரும் உதவாக்கரை என்று என்னை விட்டுவிட்டார்கள். ஆனந்த சந்த்ர வேதாந்தவாகீசருடைய குமாரர் ஞான சந்த்ர பட்டாசாரியர், பி. ஏ., தேறியவர். கட் டுக்காய்தா உடைய ஒரு கல்விமுறைப்படி இந்தப் பையனைக் கொண்டு செல்வது முடி யாத காரியம் என்று அவர் உணரலானுர். இதில் பெரிய இக்கட்டு என்னவென்றுல், கட்டாயம் பிள்ளைகளைப் 'பாஸ்' பண்ண பெரிய மனிதர்கள் ஆக்கவேண்டுமென்ற கொள்கையை வீட்டார் அவ்வளவாக ஆதரிக்க வில்லை. அந்தக் காலத்தில், காலேஜ் படிப்பு என்ற வலையில் பணக்காரர், ஏழைகள் எல் லோரையும் இழுத்துப்போட வேண்டிய அவசியம் உண்டாகவில்லை. எங்கள் குடும்பம் அப்போது அவ்வளவாகப் பணம் படைத்திரா விட்டாலும் கீர்த்திமட்டும் இருந்தது. பழைய ரீதி அப்படியே இருந்தது. படிப்பு விஷயத்தில் அதிக சிரத்தை இல்லை. கீழ் வகுப்பில்

படித்துக்கொண்டிருந்த எங்களை டிக்ரூஸ் துரை நடத்திவந்த 'பெங்கால் அகாடெமி'யில் திடீரென்று சேர்த்துவிட்டார்கள். கௌரவத்திற்காக நாங்கள் இங்கிலீஷ் கொஞ்சம் பேசப் பழக வேண்டுமென்பதே எங்கள் பெரியவர்களுடைய நோக்கம். லாட்டின் கிளாஸில் நான் செவிடாகவும் ஊமையாகவும் இருந்தேன். என் நோட்டுப் புஸ்தகங்கள் எல்லாம் விதவையின் சீலையைப்போல், ஒரு கறுப்புக்கோடுகூட இராமல், கடைசிவரை வெளுப்பாகவே இருக்கும். நான் பிடிவாதமாய்ப் படிக்காமல் இருந்ததைப் பார்த்து வகுப்பு வாத்தியார் டிக்ரூஸ் துரையிடம் முறையிட்டுக் கொண்டார். படிப்பதற்காக நாங்களெல்லாம் இந்த உலகத்தில் பிறக்கவில்லை; மாதந் தவருமல் ஸ்கூல் சம்பளம் கட்டுவதற்காகவே வந்திருக்கிருேம் என்பதாக டிக்ரூஸ் அந்த வாத்தியாருக்குத் தெளிவாக்கினுர். ஞானபாபுவும் ஏறக்குறைய டிக்ரூஸின் வழியையே கடைப்பிடித்தார். ஆனுல் இதற்கிடையே அவர் ஒரு தனி மார்க்கத்தைக் கண்டுபிடித்தார். 'குமாரஸம்பவ'த்தை ஆரம்ப முதல் நெட்டுருப்போட வைத்தார். அறையில் அடைத்துப்போட்டு என்னைக் கொண்டே, 'மாக்பெத்' நாடகத்தை மொழி பெயர்க்க வைத்தார். இது இப்படியிருக்க,

ராம ஸர்வஸ்வ பண்டித மஹாசயர் எனக்குச் 'சகுந்தலா' பாடம் ஆரம்பித்து விட்டார். வகுப்பில் படிப்பதைத் தவிர மற்ற ஸமயங்களில் என்னை யதேச்சையாக வெளியில் விட்டு விடுவார். அவ்வாறு செய்ததில் சிறிது பலன் ஏற்பட்டது. என் இளவயதில் எல்லோரும் சேர்ந்து என் மனதை ஓர் உருவாக்க அரும் பாடுபட்டார்கள் ; இதோடு எந்த வங்காளி புஸ்தகமானாலும் படிக்கவேண்டும் ; அதற்கு ஒரு விதி, வியவஸ்தையே கிடையாது.

அப்புறம் சீமைக்குச் செல்லும் படலம். என் வாழ்க்கையைச் சீர்திருத்தி அமைக்கச் சீமை விற்பன்னர்களிடம் விட்டார்கள் என்னை. ரஸாயன சாஸ்திரத்தில் இதைத்தான் 'இணைப் பொருள் சிருஷ்டி' என்பார்கள். என் அதிருஷ்டத்தை இதில் பார்த்துவிட்டேன் ; நியமமாக வித்தை கற்கச் சென்றேன் நான். உண்மையாகவும் பாடுபட்டேன். ஆனால் நான் கொடுத்து வைக்கவில்லை. அங்கே மன்னி, அவளுடைய குழந்தைகள் இவர்களுடன் வசித்து வந்ததால் வீட்டின்மேலுள்ள மோகம் என்னைப் பின்னும் மந்தமாக்கிவிட்டது. ஸ்கூலுக்குப் போகாமல் அதன் அக்கம் பக்கத்திலேயே வட்டமிட்டுக்கொண்டு இருப்பேன். வீட்டுக்கே ஒரு வாத்தியார் வருவார்.

அவருக்கும் 'டிம்கி' கொடுத்துவிடுவேன். அங்கே நான் அறிந்துகொண்டதெல்லாம், சாதாரணமாய் அங்குள்ள மனிதர் பழக்கத்தால் ஏற்பட்ட சில அபூர்வமான அநுபவங்களே ; சீமை வாழ்வு என்னுள் சில மாறுதல்களை உண்டாக்காமல் போகவில்லை.

பாலித் பாபு என்னை வீட்டின் பந்தத்திலிருந்து விடுவித்தார். ஒரு டாக்டர் வீட்டில் வசிக்கலானேன். அவர்கள் பழக்கம் ஏற்பட்டவுடன் அயல்நாட்டுக்கு நான் வந்திருப்பதையே மறந்துவிட்டேன். மிஸஸ் ஸ்காட் என்பவள் என்னிடத்தில் கொண்டிருந்த அன்பு உண்மையான அன்பு. தாயைப் போல் என்மேல் அக்கறைகொண்டிருந்தாள். அப்போது நான் லண்டன் ஸர்வகலாசாலையில் சேர்ந்துவிட்டேன். ஹென்ரி மாாலி இங்கிலீஷ் இலக்கியம் போதித்து வந்தார். அவர் சொல்லும் விஷயங்கள் புஸ்தகத்தில் இருக்கும் வெறும் வறட்டு விஷயங்கள் அல்ல. இலக்கியத்திலேயே வாழ்நாள் முழுதும் ஊறிய மகாநுபாவர் அவர். அவர் சொல்லும் ஒவ்வொரு விஷயமும் எங்கள் மனத்தில் ஆழப் பதியும். சற்றுவது அந்தச் சுவை குன்றுது. வீட்டுக்கு வந்ததும், 'கிளாரண்டன் பிரஸ்' பிரசுரித்த புஸ்தகங்களை

வைத்துக்கொண்டு புரட்ட ஆரம்பிப்பேன். நானே எனக்கு வாத்தியார் ஆகிவிட்டேன். படித்துப் படித்து நான் மிகவும் இளைத்துப் போவதாக மிஸஸ் ஸ்காட் எண்ணி என் பொருட்டுக் கவலை கொள்வாள். சிறு பிராயம் முதல் வியாதியே என்னை அண்டுவதில்லை என்பது அவளுக்குத் தெரியாது, பாவம்! அன்றாடம் காலையில் எழுந்ததுமே பனி உருகிய ஜலத்தில் ஸ்நாநம் செய்வேன். 'இந்த மாதிரிச் செய்வது ஆரோக்கியக் குறைவு; வைத்திய சாஸ்திரத்துக்கு விரோதமானது' என்று அக்காலத்து டாக்டர்கள் கருதினார்கள்.

ஸர்வகலாசாலையில் நான் படித்ததோ மூன்றே மாதந்தான். ஆனால் நான் அங்கே கற்றதெல்லாம் அந்நாட்டாருடன் நெருங்கிப் பழகியதால் வந்ததே. என்னைத் திருத்திய அந்தச் சிற்பி தகுந்த சமயம் வாய்த்தால் நூதனமான உபகரணங்களைக் கொண்டு கட்டிடத்தை நிர்மாணம் செய்யக்கூடியவன். மூன்றுமாத காலம் இங்கிலீஷ் உள்ளத்தோடு இழைந்து வந்தது என் அறிவு வளர்ச்சிக்கு எவ்வளவோ ஊக்கம் அளித்தது. பிரதி தினமும் சாயங்காலம் முதல் இரவு பதினொரு மணி வரையிலும் காவிய, நாடக, இதிகாசங்கள் படித்துக் காட்டும் பொறுப்பு ஏற்பட்டது

எனக்கு. அந்தச் சிறிய கால அளவிற்குள் எவ்வளவோ இலக்கியங்களைப் படித்துவிட்டேன். அந்தப் படிப்பு, வகுப்பில் படிப்பது போல் அன்று ; இலக்கியத்தோடு நேர்முகமாக ஒரு மனிதனுக்கு ஏற்படும் ஓர் ஐக்கிய பாவம் என்றே சொல்லவேண்டும். சீமைக்குப் போனேனே தவிர, நான் பாரிஸ்டர் ஆகவில்லை. வாழ்க்கையின் ஆரம்பத்தில் எனக்காக அமைந்த அஸ்திவாரம் கலகலத்துப் போகும் நிலைக்கு வரவில்லை. மேல்நாடும் கீழ்நாடும் இணையும் ஒரு மகத்தான லக்ஷ்யத்தை என்னுள் கொண்டேன். எனக்குள்ள மதிப்பை உள்ளத்துள் உணர்ந்தேன்.

முற்றும்



தமிழ்நாட்டுச் சிறுகதைகள்

I மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள் :
மகரிஷி வ. வே. ஸு. ஐயர்

II நீலமணி முதலிய கதைகள்
கி. வா. ஜகந்நாதன், பி. ஓ. எல்.

III கன்யாகுமாரி முதலிய கதைகள் :
த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.

IV சந்தனக் காவடி முதலிய கதைகள் :
தி. ஜ. ர.

V சக்ரவாகம் முகலிய கதைகள் :
ந. சிதம்பரசுப்பிரமணியம்

IV கனகாம்பரம் முதலிய கதைகள் :
கு. ப. ராஜகோபாலன், பி. ஏ.

VII தோட்டியை மணந்த அரசகுமாரி முதலிய கதைகள்
தி. நா. சுப்பிரமணியம்

VIII பவழ மாலை முதலிய கதைகள் :
பி. எம். கண்ணன்

IX வெண்தாமரை முதலிய கதைகள் :
வி. எஸ். ராமகிருஷ்ணன், பி. ஏ.

X அழகி முதலிய கதைகள் :
கா. நா. சுப்ரமண்யம், பி. ஏ.

XI லக்ஷ்மி கடாக்ஷம் முதலிய கதைகள் :
ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்

XII ஜடாதரன் முதலிய கதைகள் :
கா. சி. வேங்கடரமணி, எம். ஏ., பி. எல்.

XIII மீட்சி முதலிய கதைகள் :
ஸரோஜா ராமமூர்த்தி

XIV. வாடா விளக்கு முதலிய கதைகள் :
சு. குருசாமி, பி. ஏ., எல். டி.

XV. குழந்தை மனம் முதலிய கதைகள் :
த. நா. ஸேனுபதி

XVI. வைர டோலக் முதலிய கதைகள் :
ஸ்ரீமதி ஆண்டாள்

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

உல்லாஸ வேளை

"எஸ். வி. வி." எழுதிய

ஹாஸ்ய நூல்

உயர்ந்த காகிதம் : : அழகிய பைண்ட்

பொருளடக்கம்

1. உல்லாஸக் குடும்பம்
2. லுங்கிப் புடைவை
3. எம். ஏ., செய்த ஆராய்ச்சி
4. கொசுச் சண்டை
5. காணாமற்போன நோட்டு
6. மாம்பலத்தில் தண்ணீர் கஷ்டம்
7. பெந்தம்மாளின் கோபம்
8. கல்யாண விமர்சனம்
9. லேடீஸ் கிளப்
10. பெந்தம்மாள் பிரசங்கம்
11. கிளப்பில் விருந்து
12. படிப்பும் விவேகமும்
13. ரகுராமையர் குடும்பம்
14. புருஷர்களும் ஸ்திரீகளும்
15. குழாய் ஜலம்
16. செலவே இல்லை
17. சட்ட சபை
18. மூட்டைப் பூச்சி
19. பெந்தம்மாளின் ஆசை
20. இளம் பருவம்
21. மாப்பிள்ளை முறுக்கு
22. அரட்டல் அண்ணாசாமி
23. கல்யாணப் பேச்சு
24. பெண்டுகள் வியாபாரம்
25. லோலாக்கைக் காணோம்
26. 'தியாகபூமி' ப் புடைவை
27. சங்கீதக் கச்சேரி
28. சாந்தாவின் சமையல்
29. அந்தரங்க சமயம்
30. வக்கீல் புளுகு - சங்கீதப் புளுகு
31. பெந்தம்மாளும், ரேடியோவும்
32. பெந்தம்மாளும், சினிமாவும்
33. வெங்கிட்டுவின் விசாரம்
34. பெந்தம்மாளின் போட்டோ
35. ரங்குவின் உபநயனம்
36. ச ண் டை
37. ராஜாங்கக் கணக்கு
38. கிராமத்தில் இரண்டு பி,ஏ., க்கள்
39. பா ர் வ தி
40. பார்வதியின் இயல்பு
41. பார்வதியின் பொதுஜன சேவை
42. பார்வதியின் பெருமை
43. முற்றிற்று

விலை ரூ. **3—8—0**

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

Wrapper Printed by P. A. S. Press, Post Box 349, Mount Road, Madras